
தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk
விலை 40 ரூபா • தீபம் 138 • 15.04.2018



## மட்டக்களப்பில் வாழும் நெடுந்தீவார்!





## ஆனோல்ட் ரூட் மாவைக்கும் உதவுமா?

### சுமந்திரனின் பிளான் A

## புலிகளே என் முன் மாதிரிகள்

கௌசல்யா சங்கர்



## சிறிதரன் என்ற மானஸ்தன்




இனிய சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
U.S Restaurant
No: 37 Kanagapuram Road, Kilinochchi
T.P:- 077 0449157, 021 2285869
அனைத்து வகையான சுவையான உணவு வகைகளையும் சுவைத்து மகிழ்ந்திடவும் A/C, NON A/C அறைகளை வாடகை மூலம் பெற்றிடவும் நாடவேண்டிய ஒரே இடம் U.S Restaurant


YARL AHI
Ice Cream
யாழ் அகி ஐஸ்கிறீம்
இனிய சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
இல. 46, கனகபுரம் வீதி, கிளிநொச்சி
No. 46, Kanakapuram Road, Kilinochchi.
T.P 021 7917585 / 077 0232328


POTHIGAI ALAKAKAM
KANAGAPURAM ROAD, KILINOCHCHI
பொதிகை சலூன்
டிப்போ வீதி, கிளிநொச்சி
ஆண், பெண் இருபாலாருக்குமான சிகையலங்காரம் முற்றிலும் குளிரூட்டப்பட்ட நிலையம்
ஆண் பெண் இருபாலாருக்குமான அழகுகலை செய்வதுடன் விசேடமாக பெண்களாலேயே பெண்களுக்கு அழகுகலை செய்யப்படும்
இனிய சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
புகையிரத கடவை அருகாமை கனகபுரம் வீதி, கிளிநொச்சி


மல்லிகா உணவகம்
அன் கூல்பார்
கனகபுரம் வீதி, கிளிநொச்சி
இனிய சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
அனைத்து வகையான உணவு வகைகளை உண்டு மகிழ்ந்திட மல்லிகா உணவகம்.


HOTEL Sella Rest
இனிய சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
S.K.Karan
Director
T.P: 0777442846
HOTEL
Sella Rest
A/C , NON - A/C ROOMS & CONFERENCE HALL
No.46, Uthayanagar West Kanagapuram Road,
Killinochci
T.P: 021 228 5613
Yahoo:- hotelsella@yahoo.com
T.P : 021 492 5665 , 021 228 5613

# சுமந்திரனின் பிளான் A ஸ்ராட்... ஆனோல்ட்டை மேயராக்கிய அதே Strategy மாவைக்கும் வேலை செய்யுமா?

நம்மாழ்வார்





எதிர்வரும் வடமாகாணசபை தேர்தலில், முதல்வர் வேட்பாளராக விக்னேஸ்வரனை முதல்வர் வேட்பாளராக நிறுத்தும் எண்ணம் எமக்கு அறவே கிடையாது" இப்படி சொல்லியுள்ளார் தமிழரசுக்கட்சியின் எம்.பி சுமந்திரன்.

சுமந்திரன் பேச்சு வெளியானதை தொடர்ந்து பெரிய அக்கப்போரே ஆரம்பித்து விட்டது. தமிழரசுக்கட்சி ஆதரவாள்ர்கள் வெடிகொளுத்தி கொண்டாடாத குறையாக ஆரவாரிக்க, முதலமைச்சர் அடுத்த கட்ட நடவடிக்கையை விரைவாக ஆரம்பிக்க வேண்டும் என விக்னேஸ்வரனின் ஆதரவாளர்கள் அந்தரப்பட தொடங்கியுள்ளனர்.

திடீரென யாழ்ப்பாணத்தில் சுமந்திரன் ஏன் பத்திரிகையாளர் சந்திப்பு நடத்த வேண்டும்? முதலமைச்சர் வேட்பாளர் பற்றி ஏன் இப்பொழுதே சர்ச்சையை கூட்ட வேண்டும்?

இதற்கு பதில் சொல்வதற்கு முன்னர், இன்னொரு விசயத்தையும் சொல்லி விடுகிறோம். அதாவது, சுமந்திரன் 07ம் திகதி தனது வீட்டில் வைத்து சொன்ன விசயம் இப்பொழுது எடுக்கப்பட்ட முடிவல்ல. அது சில மாதங்களின் முன் தமிழரசுக்கட்சிக்குள் உத்தியோகப்பற்றற்ற முறையில் எடுக்கப்பட்ட தீர்மானம். அதை அப்பொழுதே தீபத்தில் சொல்லிவிட்டோம்!

ஒரு மாதத்தின் முன்னரே தீபத்தில் வெளியான செய்திகளை கவனிக்காதவர்களிற்காக, அப்பொழுது நாம் வெளியிட்ட இரண்டு செய்திகளை இப்பொழுது மீளவும் நினைவுபடுத்துகிறோம்.

முதலாவது செய்தி தமிழரசுக்கட்சி உயர்மட்ட பிரமுகர்களிற்கிடையில் உத்தியோகப்பற்றற்ற முறையில் நடந்த பேச்சுக்கள் பற்றியது. கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் தமிழரசுக் கட்சியின் பிரமுகர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் பேசி, ஒரு உத்தியோகப்பற்றற்ற முடிவிற்கு வந்துள்ளன்ர்.

பொதுவாகவே தமிழரசுக்கட்சியின் இரண்டாம் மட்ட தலைவர்கள் பலரிடம் விக்னேஸ்வரன் தொடர்பான எதிர்ப்புணர்வு பல காலமாக உள்ளது. விக்னேஸ்வரன் இருக்கும்வரை, இப்படி இரண்டாவது ஹீரோவாகவே இருந்துவிட்டு போய்விட வேண்டி வரும் என்ற பயம், 70 பிளஸில் உள்ள அந்த தமிழரசுக்கட்சி இரண்டாம் மட்ட இளம் பிரமுகர்களிடம் உள்ளது.

அதனால், விக்னேஸ்வரனை அகற்றினால், கட்சிக்குள் தாங்கள் இப்பொழுது இருக்குமிடத்தில் இருந்து ஒரு அடி முன்னால் நகர வாய்ப்பளிக்குமென அவர்கள் நினைக்கிறார்கள்.

அவர்களிடமுள்ள கணக்கையும் சொல்லிவிடுகிறோம். விக்னேஸ்வரன் அகற்றப்பட்டால் அடுத்த முதலமைச்சர் யார்? மாவை சேனாதிராசாதான். மாவை மாகாணசபைக்குள் போனால், ஒரு பாராளுமன்ற ஆசன இடம் வெற்றிடமாகுமல்லவா!

இதைவிட, தமிழரசுக்கட்சியின் தீர்மானமெடுக்கும் நிலையிலுள்ள தலைவர்களிற்கு உள்ள கோபம் விக்னேஸ்வரன் கட்சியின் பிடியிலிருந்து வெளியில் சென்றுவிட்டார் என்பது.

இப்படி இரண்டுவிதமான, கோபங்களும், ஒன்றில் ஒன்றில் தங்கியிருந்து ஒன்றையொன்று பயன்படுத்திக் கொள்ள விக்னேஸ்வரனை அடுத்த முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்துவதில்லையென்ற முடிவு தமிழரசுக் கட்சிக்குள் எடுக்கப்பட்டுள்ளது.

விக்னேஸ்வரனை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்துவதில்லையென்றால், அடுத்த தெரிவு... மலைபோல மாவை சேனாதிராசா இருக்க எதற்கு குழப்பம் என அவரையே பரிந்துரைத்துள்ளனர்.

மாவையை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்துவதென்பது, சுமந்திரனின் பிளான் A!.

மாவையை முதலமைச்சர் வேட்பாளராக்குவதென கடந்த மாகாண சபை தேர்தலிலும் முடிவெடுத்தார்கள்தான். ஆனால் விக்னேஸ்வரன்தான் முதலமைச்சரானார். ஏன்?

என்னதான் கட்சி முடிவெடுத்தாலும், இறுதி முடிவெடுப்பது சம்பந்தன் அல்லவா!

இதற்காகவே தமிழரசுக்கட்சி பிளான் B ஐ தயாரித்துள்ளது. பிளான் A இல் ஏதாவது சறுக்கல், குழப்பம் வந்தால், உடனடியாகவே பாவிக்க இதனை தயாரித்துள்ளனர்.

அதென்ன பிளான் B?

சம்பந்தனை எப்படி கையாள்வதென்பதே அது!

சம்பந்தனின் இயல்பொன்றை பற்றி இந்த இடத்தில் குறிப்பிட வேண்டும். முக்கிய விசயங்களில் கூட்டமைப்பிற்குள் ஒரு முடிவெடுப்பார்கள். ஆனால் சம்பந்தனிடம் வேறொரு முடிவு இருக்கும்: அதை நடைமுறைப்படுத்த அவர் கையாளும் உத்தியே அலாதியானது.


முதலில் எல்லா தலைவர்களையும் அழைப்பார். குறிப்பிட்ட விசயத்தை கூறி, அதில் எப்படி முடிவெடுப்போம் என கேட்பார். ஏற்கனவே எடுத்த முடிவை தலைவர்கள் சொல்வார்கள். அது சம்பந்தனின் முடிவாக இருக்காது. கொஞ்ச நேரம் கூட்டத்தை இழுத்தடித்து விட்டு, "தம்பியவை நாங்கள் நாளைக்கு சந்திப்பம்"என கூறி அன்றைய கூட்டத்தை முடிப்பார்கள். மீண்டும் மறுநாள் கூட்டம். முதல்நாள் கூட்டத்தை ஆரம்பித்ததைபோலவே சம்பந்தன் ஆரம்பிக்க, தலைவர்களும் முதல்நாளை போலவே தொடர்வார்கள். மீண்டும் பாதியிலேயே கூட்டத்தை முடிப்பார். இப்படி மூன்று, நான்கு முறை நடக்க, வெறுத்துப்போன தலைவர்கள், சம்பந்தனின் முடிவிற்கே விட்டுவிடுவார்கள்.

இப்படி அடுத்த முறையும் நடந்து, கடைசி நேரத்தில் எல்லோரையும் அழைத்து, "சில கருமங்களை செய்ய விக்னேஷ்தான் நமக்கு பொருத்தமானவர். தம்பி மாவை தமிழினத்திற்காக எத்தனையோ தியாகத்தை செய்தவர். இப்பொழுதும் ஒரு தியாகத்தை செய்யமாட்டாரா?" என்று கூற நிறைய வாய்ப்புக்கள் இருக்கிறது. இது தமிழரசுக்கட்சிக்காரர்களிற்கும் நன்றாகவே தெரியும். சம்பந்தனை சமாளிக்கவே பிளான் B ஐ தயாரித்துள்ளனர்.

பிளான் B இல் முக்கிய பாத்திரம் வகிப்பது தமிழரசுக்கட்சியின்

தொடர்ச்சி 7-ம் பக்கம்...

# எங்கே அந்த மானஸ்தன்?



தமிழ் தேசிய கூட்டமைப்பில் சிறிதரன் என ஒரு மானஸ்தன் முன்னர் இருந்தாரே... இப்பொழுது எங்கிருக்கிறார் என்று தேட வேண்டியுள்ளது. கரைச்சி பிரதேசசபை தவிசாளர் தேர்வுடன் மானஸ்தனை தேட வேண்டிய நிலைமையேற்பட்டு விட்டது. ஈ.பி.டி.பியோடோ, சந்திரகுமாரோடோ கூட்டணி வைக்க வேண்டிய தேவை நமக்கில்லை என சொல்லி, அவர் யாருடன் கூட்டணி வைத்துள்ளார்?

புதிய உள்ளூராட்சி தேர்தல் முறைமையினால் நாட்டிலுள்ள கணிசமான சபைகளில் யாரும் தனித்து ஆட்சியமைக்க முடியாதென்பதே நிலைமை. ஆரையம்பதி பிரதேசசபையில் தவிசாளரானவர் தனது வட்டாரத்தில் வெறும் 54 வாக்குகளை பெற்று தோல்வியடைந்தவர். யாரென்றே தெரியாத லொட்டு, லொசுக்கு எல்லாம் நான்கைந்து ஆசனங்களை பெற்று, அந்தந்த பிரதேசத்தில் நான்தான் கிங்மேக்கர் என சட்டையை தூக்கிவிடும் நிலைமையை ஏற்படுத்தியிருந்த தேர்தல் முறைமையிது.

வடக்கில் அனேக சபைகளை கூட்டமைப்பு வென்றிருந்தபோதும் பூநகரியில்தான் தெளிவான பெரும்பான்மையை பெற்றிருந்தார்கள். மிகுதி அனைத்திலும் த.தே.கூட்டமைப்பு, த.தே.ம.முன்னணி, ஈ.பி.டி.பி என்பன அதிக ஆசனங்களை பெற்றிருந்தன.

இந்த சூழலில் தவிசாளர் தேர்வின் முன்னதாக கூட்டமைப்பின் சில தலைவர்கள் ஈ.பி.டி.பி செயலாளர் டக்ளஸ் தேவானந்தாவுடன் தொலைபேசியில் பேசியிருந்தார்கள். ஈ.பி.டி.பியுடன் பேச்சு நடத்தியத்திற்கு, தமிழரசுக்கட்சியின் கூட்டத்தில் பொங்குபொங்கென பொங்கினார் சிறிதரன்.

ஈ.பி.டி.பியுடனோ, ஈ.பி.டி.பியில் இருந்த சந்திரகுமாரோடோ சகவாசம் வைத்துக்கொள்ள கிளிநொச்சி மக்கள் விரும்பவில்லையென்ற ரீதியில் ஒரு அறிக்கையும் விட்டார்.

கரைச்சி பிரதேசசபையில் சிறிதரன் அணிக்கு ஆதரவளித்தது யாரென பார்த்தால் அது ஐ.தே.கவும், சு.கவும்!.

ஐ.தே.கவுடனோ, சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடனோ சகவாசம் வைத்துக்கொள்வதை பற்றி அவருக்கு எந்த பிரச்சனையும் இருக்கவில்லை. ஆக, ஈ.பி.டி.பி பூச்சாண்டி காட்டி அரசியல் செய்யலாமென சிறிதரன் நினைக்கிறார்.

நாம் ஐ.தே.கவுடனோ, சு.கவுடனோ ஆதரவு கேட்கவில்லை, அவர்கள் ஆதரித்தார்கள்... அதை தடுக்கலாமா எனஇனி நியாயம் பேசலாம். இதே நிலைமைதான் மற்றைய சபைகளிலும் இருந்தது, அங்கும் ஏனைய கட்சிகள் தாமாக முன்வந்து ஆதரவளித்தன என்று அவர்களும் சொல்லலாம்.

இப்படியான சுய சமாதானங்கள் அல்ல விவகாரம். அது தமிழ் தேசியத்துடன் தொடர்புபட்டது. அர்ப்பணிப்பான நீண்ட அகிம்சை, ஆயுத போராட்ட வரலாற்றுடன் தொடர்புடையது. அந்த வரலாற்றை தொடர வல்லமையில்லாவிட்டால் கூட பரவாயில்லை. அதை கொச்சைப்படுத்தாமல் விட்டாலே, தமிழ் தேசியம் ஓரளவாவது பிழைத்துக் கொள்ளும்.

இன்று தமிழ் தேசியம் பேசும் தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கும், தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கும் உடனடி எதிரி, பொது எதிரி யார்?

சந்தேகமேயில்லாமல் இரண்டு தரப்பும், ஒருவரையொருவர்தான் எதிரியாக கருதுகிறார்கள். கவிழ்ப்பதில் குறியாக இருக்கிறார்கள். வேறு எதிலும் கவனமில்லாமல், தமக்குள்ளான குடுமிப்பிடி சண்டையிலேயே குறியாக இருக்கிறார்கள்.

வடக்கில் முன்னெப்பொழுதும் இல்லாதளவில் தென்னிலங்கை கட்சிகளின் பிரதிநிதித்துவம் அதிகரித்துள்ளது. இதற்கு ஒரேயொரு காரணம் தமிழ் மக்களின் பிரதிநிதிகளில் பலவீனம்தான். எனக்கு மூக்கு போனாலும் பரவாயில்லை, எதிரிக்கு சகுனம் பிழைத்தால் சரியென்ற பாணியில் இவர்கள் செய்யும் அரசியல் தமிழ் மக்களை எந்த முட்டுச்சந்தியில் கொண்டுபோய் விடுமென்று தெரியவில்லை.

ஈ.பி.டி.பி மீது கடந்தகாலத்தில் விமர்சனங்கள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் இன்றுள்ள தமிழ் அமைப்புக்கள், கட்சிகளில் எது விமர்சனத்திற்கு அப்பாற்பட்டது? சிறிதரன் அங்கம் வகிக்கும் தமிழரசுக்கட்சியின் வரலாற்றில் படிந்துள்ள கறைகளை சிறிதரன் அறிவாரா? அல்லது ஏனைய அமைப்புக்கள் மீது இவர் இப்படியான குற்றச்சாட்டுக்களை வைக்கும்போது, தானும் குற்றவாளிக்கூண்டில்தான் நிற்கிறேன் என்ற உண்மையையாவது அவரது மனச்சாட்சி ஏற்றுக்கொண்டிருக்குமா?


ஈ.பி.டி.பி துரோகிகள் கட்சி, அவர்களின் கடந்தகாலம் இரத்தத்தால் எழுதப்பட்டது என பேசுவது, "பேச்சு அரசியலுக்கு" நல்ல பலனை தரும். மக்களின் பெரும்பகுதியினர் இந்தவகையான பேச்சுக்களை கேட்டு, அதில் மயங்கிவிடுவார்கள். நல்ல வாக்கு அறுவடையை பெறலாம். ஆனால், இந்த வகை அரசியல் எந்த பெறுபேற்றையும் பெற்றுத்தராது.

உள்ளூராட்சி தேர்தலில் யாழ் மாவட்டத்தில் மட்டும் ஈ.பி.டி.பியின் வாக்காளர்கள் 67,469. இவ்வளவு பெரும்தொகை மக்களை துரோகிகளாக்கி விட்டு, "சிறிதரன் பாணி அரசியல்" என்ன வரைபடத்தை வைத்துள்ளது, தீர்வை பெற?

எல்லா துரோகிகளும், எல்லா காலத்திலும் துரோகிகளாக இருப்பதில்லை. அவர்களின் நிகழ்காலமே அவர்கள் எப்படியாக அடுத்த சிலகாலத்தில் அணுகப்பட போகிறார்கள் என்பதை தீர்மானிக்கும். இன்றைய ஈ.பி.டி.பியின் அரசியலும், தமிழ் தேசிய கூட்டமைப்பின்

## இது கொஞ்சம் வில்லங்கமான பக்கம்

## வாராவாரம் வறுப்போம்



## கேள்வியும் பதிலும் நாமே

நிருபர்: வணக்கம் ஐயா... உள்ளூராட்சி தேர்தல் முடிவுகளை எப்படி பார்க்கிறீர்கள்?

சிவாஜிலிங்கம்: சாதகமாகத்தான் பார்க்கிறேன்.

நிருபர்: தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு கொஞ்சம் பின்னடைவு என்பதை ஏற்கிறீர்களா?

சிவாஜிலிங்கம்: இல்லை. அப்படி சொல்ல முடியாது. அமெரிக்காவிலும் இப்படித்தான் தேர்தல் முடிவுகள் வரும். அதற்காக அங்கு நிர்வாகம் நடக்காமல் விடுமா?

நிருபர்: சரி... இம்முறை ஜெனீவா கூட்டத்தொடர் பற்றி அவ்வளவு பரபரப்பை காணவில்லையே?

சிவாஜிலிங்கம்: உள்ளூராட்சி சபை விசயத்தில் நாங்களும், சர்வதேசமும் கொஞ்சம் பிஸியாகி விட்டோம். அதுதான் இம்முறை கொஞ்சம் சறுக்கியது. ஆனால் இதனால் ஒரு குழப்பமும் நிகழாது. ஹிலாரி கிளிங்டனின் உதவியுடன் விரைவில் அமெரிக்காவை நேரடியாக தலையிட வைத்து இனப்பிரச்சனையை தீர்க்க வைப்போம். அதற்கான செயற்திட்டங்களை விரைவில் ஆரம்பிக்கவிருக்கிறோம்.

நிருபர்: எப்படியான செயற்திட்டங்களை ஆரம்பிக்கிறீர்கள்?

சிவாஜிலிங்கம்: முதற்கட்டமாக எனது தலைமையில்தான் திட்டம் ஆரம்பிக்கிறது. அடுத்த அமெரிக்க தேர்தலில் ஹிலாரி வெற்றிபெற வேண்டுமென்பதற்காக இலங்கை, இந்தியாவிலுள்ள முக்கிய ஆலயங்களில் தேங்காய் அடிக்கவுள்ளோம்.

நிருபர்: தேங்காய் விலை இப்படி எகிறியிருக்கின்ற காலத்தில் இப்படியொரு திட்டம் தேவைதானா?

சிவாஜிலிங்கம்: அமெரிக்காவிற்கும் சீனாவிற்கும் வர்த்தக போட்டி ஏற்பட்டிருக்கும் இந்த சூழலைக்கூட நாம் சாதகமாக பாவிக்கலாம். முறையான பேச்சு நடத்தினால் சீனா கூட நமக்கு தேங்காய் கப்பல் அனுப்பிவைக்ககூடும். இது வெறும் தேங்காய் என நீங்கள் அலட்சியப்படுத்த கூடாது. இதற்கு பின்னால் பெரிய அரசியல் மறைந்திருக்கிறது. தேங்காயின் வடிவம் என்ன? உருண்டை. உலகத்தின் வடிவம் என்ன? அதுவும் உருண்டைதான். அதாவது தேங்காயின் வடிவத்தில் நாம் பூகோள அரசியல் செய்கிறோம். தம்பி கஜேந்திரகுமார் நினைக்ககூடாது, பூகோள அரசியலை அவர்கள்தான் செய்கிறார்கள் என. நாமும் அதை நன்றாகவே செய்வோம். செய்கிறோம் என்பதை சொல்லிவைக்க விரும்புகிறேன்.

நிருபர்: ஹிலாரி கிளிங்டனை அமெரிக்கா ஜனாதிபதியாக்கி தமிழர் பிரச்சனையை தீர்ப்பதென உங்கள் கட்சி ஒரு திட்டம் வைத்துள்ளது சரி. அது மட்டுமா கைவசம் உள்ள திட்டம். வேறு திட்டங்கள் கிடையாதா?


சிவாஜிலிங்கம்: தம்பி... நாங்கள் ஐம்பது வருடமாக இந்த போராட்டத்தில் இருக்கிறோம். எதையும் நன்றாக பிளான் பண்ணித்தான் செய்வோம். இப்படி ஒரு திட்டத்துடன் மட்டுமிருப்போமா? கைவசம் இன்னொரு மாஸ்டர் பிளானும் இருக்கிறது. அது நேரடியாக தமிழீழத்தை பெற்றுக்கொள்வதற்கான திட்டம்.

நிருபர்: இனியும் தமிழீழத்தை பெற வழியுண்டா? எப்படி?

சிவாஜிலிங்கம் : அது சிங்கள பேரினவாத ஆட்சியாளர்களின் கையில்தான் உள்ளது. அவர்களே தமிழீழத்தை உருவாக்கும் திட்டம். அதற்கான திட்டங்களை ஆரம்பித்து விட்டோம்.

நிருபர்: எப்படி?

தொடர்ச்சி அடுத்தபக்கம்...





# ராஜிவ் காந்தி கொலை 27
## புலிகள் சிக்கிய கதை

கே.ராகோத்தமன்

பல்பீர் சிங் என்றொரு சப் இன்ஸ்பெக்டர் அப்போது அப்பணியில் இருந்தார். அவர் தனது பணிமாற்ற உத்தரவை எடுத்துக்கொண்டு நேரே ஆர்.கே. தவானிடம் சென்றார்.

'எத்தனை நாளாக நான் இந்தப் பணியில் இருக்கிறேன்! மேடமுக்கு ஒரு கெடுதல் செய்ய நினைப்பேனா? இப்படி அசிங்கப்படுத்துகிறார்களே! நீங்களாவது கேட்கக் கூடாதா?' என்று முறையிட்டார்.

தவான் யோசித்தார். அடடா, அப்படியா உத்தரவிட்டிருக்கிறார்கள்? நான் பார்த்துக்கொள்கிறேன் என்று அந்த சப் இன்ஸ்பெக்டரை அனுப்பி விட்டு, Put them all back என்று உத்தரவைத் திருத்த உத்தரவிட்டுவிட்டார்!

தவானே எடுத்துச் சொன்னபடியால் இந்திரா காந்தியும் அதைக் கண்டு கொள்ளாமல் இருந்துவிட்டார்.

இத்தனைக்கும் 81ல் இந்திரா ஆட்சிக்கு வந்த சமயம் தவான் அத்தனை ஒன்றும் அவருக்கு நெருக்கமானவரில்லை.

முன்பொரு காலத்தில் 1977க்கு முன்னர் தவானுக்கு இந்திரா குடும்பத்துடன் இருந்த நெருக்கத்துடன் ஒப்பிட்டால் இது ஒன்றுமே இல்லை என்று சொல்லிவிடலாம். உடனிருப்பவரின் விருப்பம் என்கிற அளவில் மட்டுமே இந்திரா தவானின் கருத்துக்கு அப்போது உடன்பட்டார்.

உளவுத்துறை உயர்மட்ட அதிகாரிகள் மத்தியில் ஒரு விஷயம் பேசப்படுகிறது. உடனடி நடவடிக்கை கோரப்படுகிறது.

உத்தரவும் அனுப்பப்படுகிறது. அதைப் பிரதமர் அலுவலகப் பிரமுகர் ஒருவர் மாற்றி அமைத்துவிட முடிகிறது!

ஐ.பி. இயக்குநர் என்பவர் தினசரி பொழுது விடிந்ததும் பிரதமரை அவரது வீட்டில் சந்தித்துப் பேசக் கடமைப்பட்டவர்.

நேரடியாக அவர் இந்திராவிடம் பிரச்னையை எடுத்துச் சொல்லி, சீக்கியர்களை மாற்றச் சொன்னதன் அவசியம் பற்றி விளக்கியிருக்க முடியாதா?

ஏன் செய்யவில்லை? பின்னால் அதற்கு எத்தனை பெரிய விலை கொடுக்கவேண்டியதாகிப் போனது!

இந்தச் சம்பவத்தை இங்கே நினைவுகூர்ந்ததன் காரணம், ஒரு சப் இன்ஸ்பெக்டர் ஸ்ரீபெரும்புதூரில் செய்த தவறைச் சுட்டிக்காட்டுவதற்காக.

ஐ.பி. இயக்குநர் வரைக்கும் அதே வித மனோபாவம்தான் வேரோடியிருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுவதற்காக.

அலட்சியம். ஒவ்வொரு முறையும் அதற்கு நாம் கணிசமான விலை கொடுத்து வந்திருக்கிறோம்.

இந்திரா படுகொலைக்குப் பிறகு நியமிக்கப்பட்ட தாக்கர் கமிஷனில் தவான் மீது சந்தேகம் எழுப்பப்பட்டு இந்த விவகாரத்தை ஆராயச் சொல்லிக் கோரப்பட்டது.

உண்மையில் தவான் உள்நோக்கம் ஏதுமின்றித்தான் சீக்கியக் காவலர்கள் இந்திராவின் பாதுகாப்புப் பணியில் தொடரலாம் என்று சொல்லியிருப்பார்.

பிரச்னையின் தீவிரத்தை உணராததும் உளவுத்துறையின் எச்சரிக்கையை மதிக்காததும்தான் அவர் செய்த பிழைகள்.

இதை என்னால் நிச்சயமாகச் சொல்ல முடியும்.

1977 சமயத்தில் இந்திரா காந்திக்கு எதிரான வழக்குகளை ஜனதா அரசு ஒன்றன்பின் ஒன்றாக எங்களிடம் அனுப்பிவைத்துக்கொண்டிருந்த சமயத்தில், தவானை நான் சந்தித்திருக்கிறேன்.

இந்திராவுக்கு எதிராக அவர் அப்ரூவராக வாய்ப்பிருக்கிறதா என்று பார்ப்பதற்காக அந்தச் சந்திப்புகள் நிகழ்ந்தன. 'என்ன ஆனாலும் சரி. இந்திரா காந்தி எனக்கு என் தாயைப் போன்றவர்.

அவருக்கு எதிராகக் கனவிலும் என்னால் சாட்சி சொல்ல முடியாது' என்று சொல்லிவிட்டவர் அவர். இந்திராவும் தன் மூத்த மகன் ராஜிவிடம் காட்டிய அன்பைத்தான் அவரிடமும் காட்டினார்.

ராஜிவும் தவானும் மிக நெருங்கிய தோழர்கள். ஆனால் ஐ.பி. சொன்னபடி சீக்கியக் காவலர்களால்தான் இந்திராவின் உயிர் பறிக்கப்பட்டது என்பதனால் தவானைக் குற்றவாளிகள் பட்டியலில் சேர்த்துவிட முடியாது.

மீண்டும் அலட்சியம் மற்றும் உளவுத்துறையின் எச்சரிக்கையைப் புறக்கணித்த தவறுகள் மட்டும்தான்! ஸ்ரீபெரும்புதூர் சம்பவத்துக்கும் இதே காரணம்தான். அலட்சியம். பல மட்டங்களில். பல விதமாக. பலவேறு நபர்கள் காட்டிய அலட்சியம். பார்க்கலாம்.

ஆறாவது நபர்

ராஜிவ் காந்தி படுகொலை வழக்கைப் புலனாய்வு செய்யும் அதிகாரியாக நான் சென்றபோது, குற்றவாளிகள் விடுதலைப் புலிகள்தாம் என்று ஆதாரபூர்வமாகக் கண்டுபிடித்ததைக் காட்டிலும் நமது நிர்வாகத் தளங்களில் புரையோடிப் போயிருக்கும் அலட்சிய மனோபாவம், பொறுப்பற்ற தன்மை, எதிலும் மேம்போக்கான அணுகுமுறை, உயரதிகாரிகளின் திடுக்கிடச் செய்யும் சில முடிவுகள், அரசியல் சூழ்ச்சிகள், ரகசிய பேரங்கள் போன்றவற்றை நேருக்கு நேர் எதிர்கொண்டு சமாளிக்க வேண்டியிருந்ததை மிக முக்கியமாகக் கருதுகிறேன்.

பணியிலிருந்து ஓய்வு பெற்று வருடங்கள் ஆகிவிட்ட பிறகும், இன்னமும் மனத்தை உறுத்திக் கொண்டே இருக்கும் விஷயம் இது. மாபெரும் ஜனநாயக தேசம் என்று மார் தட்டிக்கொள்கிறோம்.

அடிப்படை ஒழுக்கங்களில் பெரும்பாலும் கோட்டை விட்டுவிடுகிறோம்!

அன்றைக்கு, 21ம் தேதி மாலை நடைபெற்ற சம்பவங்களிலிருந்தே மீண்டும் தொடங்குகிறேன். ராஜிவ் காந்தி விசாகப்பட்டணத்திலிருந்து புறப்படுவதற்குத் தாமதமாகிறது.

ஏதோ ரேடார் கோளாறு. ஆறு மணிக்கு இங்கே வந்து சேர்ந்திருக்க வேண்டியவர், ஆறு மணிக்குத்தான் அங்கே புறப்படுகிறார்.

இந்தத் தகவல், ஸ்ரீபெரும்புதூருக்கு எப்போது வந்திருக்க வேண்டும்? ராஜிவ் வருகிறார், வருகிறார், வந்துவிடுவார், வந்துகொண்டே இருக்கிறார் என்று அரசியல்வாதிகள் சொல்வது போலத்தான் காவல் துறையினரும் காத்திருந்திருக்கிறார்களே தவிர, யாருக்கும் தகவல் தெரியாது,

(தொடரும்)

---

அரசியலும் எந்தவகையில் வேறுபட்டது? குறைந்தபட்சம் ஒரு வித்தியாசத்தையாவது யாராலும் காண்பிக்க முடியுமா?

இது ஈ.பி.டி.பியை வெள்ளையடிக்கும், நியாயப்படுத்தும் பதிவல்ல. ஈ.பி.டி.பி தன்மீதான விமர்சனங்களிற்கு பகிரங்கமாக பதில் சொல்லியே... விலை கொடுத்தே ஆக வேண்டும். அதில் இரண்டு கருத்தில்லை. ஆனால், தமிழ் மக்கள் எதிர்காலத்தை புத்திசாலித்தனமாக அணுகுவதென்றால், தம்மிலிருந்து ஒரு சிறு துரும்பளவு தரப்பைகூட வெளியில் விட கூடாது. இவ்வளவு சிறிய இனம் எவ்வளவிற்கெவ்வளவு ஒற்றுமையாக, ஒருங்கிணைந்து செயற்படுகிறதென்பதிலேயே நமது எதிர்கால வெற்றி தங்கியுள்ளது.

ஈ.பி.டி.பியை மட்டும் திடீர் வில்லனாக்கி சிறிதரன் அரசியல்செய்வது ஏனென்பதொன்றும் சிதம்பர இரகசியமல்ல. கிளிநொச்சியில் சந்திரகுமாரின் ஆதரவுதளம் அவரை அச்சுறுத்துகிறது. அதனால் கிளிநொச்சியில் மட்டும் தியாகி துரோகி அரசியலை கட்டமைக்க முயல்கிறார். பொது எதிரியான தென்னிலங்கை பேரினவாத கட்சிகளின் ஆதரவுடன் கரைச்சி பிரதேசசபை ஆட்சியை கைப்பற்றிக்கொண்டு, உள்ளூர் எதிரியை தோற்கடித்து விட்டோம் என விசில் அடிப்பது எந்தளவு அரசியல் முதிர்ச்சியானது? அரசியலை புரிந்தவர்கள் தான் மக்கள் பிரதிநிதிகளாக இருக்கிறார்களா?

அரசியல் பழகுவோம்.

---

**சிவாஜிலிங்கம்:** நமது எல்லைப்புற கிராமங்களில் சிங்கள குடியேற்றங்கள் அதிகமாக நடந்தால், அது தமிழீழம் அமைவதில்தான் முடியும். எவ்வளவிற்கெவ்வளவு விரைவாகவும், அதிகமாகவும் சிங்கள குடியேற்றம் நடக்கிறதோ, அவ்வளவு விரைவில் தமிழீழம் அமையும்.

**நிருபர்:** இது வில்லங்கமான திட்டமாக இருக்கிறதே.

**சிவாஜிலிங்கம் :** கேட்க அப்படித்தான் இருக்கும். ஆனால் அதையும் சாத்தியப்படுத்துவோம். அதற்கு இரண்டு கட்ட திட்டங்கள் உள்ளன. முதலாவது, அரசாங்கத்திற்குள் நமது சிலிப்பர் செல்கள் சிலரை உருவாக்கவுள்ளோம். இரண்டாவதாக, அவர்களின் மூலம் அதிகளவான சிங்கள குடியேற்றங்களை நடத்த வைப்போம். இதன்மூலம் விரைவில் தமிழீழம் வரும்.

(தமிழீழம் வருகிறதோ இல்லையோ, நான் போகிறேன் என நிருபர் தெறித்து ஓடிவிட்டார்)

ஈஸ்வரன் சற்குணன்
BSc (Agri)MSc(Aqua)
பண்ணைத்திட்டமிடல் அதிகாரி
தென்னைப் பயிர்ச்செய்கை சபை
யாழ்ப்பாணம்

# தென்னைப் பயிர்ச்செய்கையில் பசளைப் பிரயோகமும் அவற்றின் முக்கியத்துவமும் 02

தென்னையினது வயதிற்கேற்ப நேரடிப் பசளை, அல்லது பசளைக்கலவை எவ்வாறு பிரயோகிக்கப்படுகின்றது என்பதனை அட்டவணை காண்பிக்கின்றது.

அட்டவணை 5 இளம் தென்னைகளிற்கான நேரடி பசளை அல்லது பசளைக்கலவை பிரயோகம்

நேரடிப் பசளை

| பசளை | மரத்தினது வயது வருடங்கள் | | | | |
|---|---|---|---|---|---|
| | 06 மாதம் | 01 - 1.5 வருடங்கள் | 02 - 2.5 வருடங்கள் | 3 - 3.5 வருடங்கள் | 4 வருடங்கள் காய்க்கும் வரை |
| | அளவு (g) | | | | |
| Urea | 190 | 235 | 305 | 375 | 470 |
| TSP | 160 | 200 | 300 | 360 | 400 |
| MOP | 190 | 235 | 305 | 375 | 470 |
| Dolomite | 500 | 500 | 500 | 500 | 500 |

grisf; fyit

| பசளை | மரத்தினது வயது வருடங்கள் | | | | |
|---|---|---|---|---|---|
| | 06 மாதம் | 01 - 1.5 வருடங்கள் | 02 - 2.5 வருடங்கள் | 3 - 3.5 வருடங்கள் | 4 வருடங்கள் காய்க்கும் வரை |
| | அளவு (g) | | | | |
| இளமரக் கலவை (YPM) | 540 | 670 | 910 | 1,110 | 1,340 |
| Dolomite | 500 | 500 | 500 | 500 | 500 |



இப்பசளை வட்டத்தினைச் சுற்றி ஒரு தடவை அல்லது இரு தடவை கொத்திய பின்னர் பசளையினைத் தூவுதல் வேண்டும். பின்னர் மீண்டும் ஒருமுறை கொத்தும் போது (சாறுதல்) பசளையானது மண்ணுடன் கலந்து விடும். பின்னர் பசளை வட்டத்தினைச்சுற்றி வைக்கோலினாலோ, புற்களினாலோ, தென்னை ஓலைகளினாலோ கட்டாயம் மூடிவிடுதல் வேண்டும். இதனை பத்திரக்கலவையிடல் (Mulching) என்பர்.

அட்டவணை 6 ஆனது முதிர் மரங்களிற்கு எவ்வாறு நேரடிப்பசளை, அல்லது பசளைக்கலவை பிரயோகிக்கப்டுகின்றது என்பதனைக் காண்பிக்கின்றது.

அட்டவணை 6 முதிர் தென்னைக்கான நேரடி பசளைஇ அல்லது பசளைக்கலவை பிரயோகம்

நேரடிப் பசளை

அட்டவணை 6 ஆனது முதிர் மரங்களிற்கு எவ்வாறு நேரடிப்பசளை, அல்லது பசளைக்கலவை பிரயோகிக்கப்டுகின்றது `என்பதனைக் காண்பிக்கின்றது.

| பசளை | அளவு (g) |
|---|---|
| Urea | 800 |
| TSP | 400 |
| MOP | 1,600 |
| Dolomite | 1,000 |

grisf; fyit

| பசளை | அளவு (g) |
|---|---|
| முதிர் மரக் கலவை (APM) | 2,800 |
| Dolomite | 1,000 |

தென்னைகளின் வயதிற்கேற்ப பசளை வட்டமானது வேறுபடுகின்றது. கீழ்வரும் அட்டவணை 7 ஆனது பசளை வட்டம் எவ்வாறு வேறுபடுகின்றது என்பதனைக் காண்பிக்கின்றது.

அட்டவணை 7 தென்னைகளின் வயதிற்கேற்ப பசளை வட்டத்ின் வேறுபாடு

| தென்னங்கன்றின் வயது | பசளை வட்டத்தின் ஆரை |
|---|---|
| 6 மாதம் | 1 அடி |
| 1 வருடம் | 2 அடி |
| 2 வருடம் | 3 அடி |
| 3 வருடம் | 4 அடி |
| 4 வருடம் காய்க்கும் வரை | 5 அடி |

படம் 1: தென்னைகளின் வயதிற்கேற்ப பசளை வட்டத்தின் வேறுபாடு

கலப்பினத்தென்னைகளிற்கோ (Hybrid) அல்லது வருடத்திற்கு 75 காய்களிற்கு மேல் பலன்தரும் தென்னைகளிற்கோ சிபாரிசு செய்யப்பட்டளவிலும் பார்க்க 1.5 மடங்கு பசளை பிரயோகிக்கப்படல் வேண்டும்.

ஏனைய உணவுப்பதார்த்தங்களிற்கு கலப்படம் செய்வது போல சீறிவி, கிறிவி போன்ற பசளைகளிலும் கலப்படம் இருப்பது அவதானிக்கப் பட்டுள்ளது. இதனால் தென்னைச் செய்கையாளர்கள் சீறிவி, கிறிவி கலவைகளை நம்பிக்கையான முகவர்களிடம் பெறுதல் சிறந்தது. அல்லாது விடின் YPM கலவை தயாரிப்பதாயின் Urea : TSP : MOP 1 : 1 : 1 என்ற விகிதத்திலும், APM கலவை தயாரிப்பதாயின் Urea : TSP : MOP 2 : 1 : 4 என்ற விகிதத்திலும் கலந்து பிரயோகிக்கலாம்.

அசேதனப்பசளையினை சிபாரிசு செய்யப்பட்டளவிலும் பார்க்க அதிகளவு பிரயோகிக்ககூடாது. இதனைத்தவிர்ப்பதற்கு காய்க்கும் தென்னையின் 14ம் ஓலையின் குறிப்பிட்ட சில பகுதிகளை எடுத்து தென்னை ஆராய்ச்சி நிலையம், லுணுவிலவிற்கு அனுப்புதல் வேண்டும். அவர்களின் போசணைக்கான பகுப்பாய்வு முடிவுகளிற்கமைவாக மிகப்பொருத்தமான பசளை அளவினைத் தீர்மானிக்க முடியும். துரதிஸ்டவசமாக தென்னை ஆராய்ச்சி நிலையத்தினரின் கிளைகள் ஏதும் வடபகுதியில் இல்;லை. எனினும் அடுத்த வருட முதலாம் காலாண்டிற்குள் இதனைப் பளைப்பகுதியில் அமைப்பதற்கான முஸ்தீபுகள் இடம் பெற்று வருகின்றன. அவ்வாறு இவ்வமைப்பு அங்கு உருவாக்கப்படுமாயின் தென்னைச் செய்கையாளர்களிற்கு வரப்பிரசாதமாக அமையும்.

சேதனப்பசளையாக மாட்டெரு, ஆட்டெரு, கோழிஎரு, சீமைக்கிழுவை (கிளிறிசீடியா) தென்னைக்கான கூட்டுப்பசளை என்பவற்றினைக் குறிப்பிடலாம். சேதனப்பசளைகளில் காணப்படும் போசணை எவ்வாறு வேறுபடுகின்றது என்பதனை அட்டவணை காண்பிக்கின்றது.

அட்டவணை 8 சேதனப்பசளையில் காணப்படும் போசணை பதார்த்தங்கள்

| Organic source | N% | P% | K% | Mg% | Ca% |
|---|---|---|---|---|---|
| Goat manure | 2.2-3.4 | 0.3-0.7 | 1.5-2.5 | 0.4-0.8 | 1.5-2.4 |
| Cattle manure | 1.2-1.9 | 0.2-0.5 | 0.5-1.1 | 0.5-0.6 | 1.3-1.8 |
| Poultry manure | | | | | |
| Broiler | 2.0-2.3 | 0.6-1.0 | 1.7-2.0 | 0.5-0.6 | 1.0-4.9 |
| Layers | 1.8-2.4 | 0.6-1.2 | 0.6-2.0 | 0.4-0.7 | 2.7-5.3 |
| Compost | 1.3-1.7 | 0.3-0.6 | 0.4-0.7 | 0.2-0.5 | 0.8-2.0 |
| Gliricidia | 2.5-3.5 | 0.1-0.2 | 1.3-1.7 | 0.3-0.5 | 1.0-1.9 |

தென்னைக்குரிய கூட்டுப்பசளையானது ஒரு வருடத்திற்கு ஒரு மரத்திற்கு எவ்வாறு தயாரிக்கப்படுகின்றது என்பதனை பார்ப்போம்.

சேதனப்பசளையானது இளம்மரங்களிற்கும். முதிர்மரங்களிற்கும் வருடத்திற்கு ஒருமுறை பிரயோகித்தல் போதுமானது இளம்மரங்களிற்கு பசளைவட்டத்திற்கேற்ப 10 cm ஆழத்தில் வட்டவடிவில் புதைத்தல் நல்லது. காய்க்கும் மரங்களிற்கு தென்னை அடியிலிருந்து 3 அடி சுற்றுவட்டத்தினை விட்டு 6 அடி சுற்றுவட்டத்துக்குள் 10 cm ஆழமான கிடங்கினை சுற்றி வர படம் 3ல் காட்டியவாறு வெட்டி அதற்குள் போட்டு மூடிவிடுதல் வேண்டும்.

படம் 2 காய்க்கும் மரங்களிற்கு சேதனப்பசளையிடல்



படம் 2

குப்பை, எரு தாழ்ப்பது என நினைத்து அரை வட்ட வடிவமாகவோ அல்லது ஆழக்கிடங்கினையோ வெட்டி பசளைகளை போடுவதனைத் தவிர்த்தல் வேண்டும். இவ்வாறு செய்வதனால் அகத்துறிஞ்சலிற்கு பொறுப்பான கணிசமான வேர்கள் சிதைவடைவது மட்டுமல்லாமல் வேர்களின் சீரற்ற பரம்பலும் ஏற்படும்.

அட்டவணை10: இளம் தென்னைகளிற்காக மாட்டெரு, ஆட்டெரு, கோழிஎரு, சீமைக்கிழுவை தென்னைக்கான கூட்டுப்பசளை என்பன அசேதனப்பசளைகளுடன் சேர்த்து உபயோகிக்கபபடுதல்

| பசளை | மரத்தினது வயது வருடங்கள் | | | | |
|---|---|---|---|---|---|
| | 6 மாதம் | 1 - 1.5 வருடங்கள் | 2 - 2.5 வருடங்கள் | 3 - 3.5 வருடங்கள் | 04 வருடங்கள் காய்க்கும் வரை |
| | அளவு (g) | | | | |
| மாட்டெரு (moisture con: 20% - 30%) | 5 Kg | 12 kg | 16 kg | 20 kg | 25, kg |
| TSP | 85 g | 200 g | 270 g | • 340 g | 420 g |
| MOP | 30 g | 200 g | 250 g | 325 g | 400 g |
| DOLOMITE | 250 g | 250 g | 250 g | 250 g | 250 g |

அட்டவணை 11: முதிர் தென்னைகளிற்காக மாட்டெரு, ஆட்டெரு, கோழிஎரு, சீமைக்கிழுவை தென்னைக்கான கூட்டுப்பசளை என்பன அசேதனப்பசளைகளுடன் சேர்த்து உபயோகிக்கப்படுதல்

| பசளை | மரத்தினது வயது வருடங்கள் | | | | |
|---|---|---|---|---|---|
| | 6 மாதம் | 1 - 1.5 வருடங்கள் | 2 - 2.5 வருடங்கள் | 3 - 3.5 வருடங்கள் | 04 வருடங்கள் காய்க்கும் வரை |
| | அளவு (g) | | | | |
| ஆட்டெரு (moisture con: 20% 30%) | 3 Kg | 7 kg | 9 kg | 11 kg | 13 kg |
| TSP | 85 g | 200 g | 270 g | 340 g | 420 g |
| MOP | 50 g | 120 g | 150 g | 190 g | 225 g |
| DOLOMITE | 250 g | 250 g | 250 g | 250 g | 250 g |

அட்டவணை 12: முதிர் தென்னைகளிற்காக மாட்டெரு, ஆட்டெரு, கோழிஎரு, சீமைக்கிழுவை தென்னைக்கான கூட்டுப்பசளை என்பன பொச்சு மட்டையுடன் சேர்த்து உபயோகிக்கபபடுதல்

சேதன, அசேதனப் பசளைகள் அனைத்துமே மண் ஈரலிப்பாக உள்ள போது மட்டுமே உபயோகிக்கப்படல்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

| பசளை | மரத்தினது வயது வருடங்கள் | | | | |
|---|---|---|---|---|---|
| | 6 மாதம் | 1 - 1.5 வருடங்கள் | 2 - 2.5 வருடங்கள் | 3 - 3.5 வருடங்கள் | 04 வருடங்கள் காய்க்கும் வரை |
| | அளவு (g) | | | | |
| கோழியெரு (moisture con: 20% 30%) | 5 Kg | 12 kg | 16 kg | 20 kg | 23 kg |
| DOLOMITE | 250 g | 250 g | 250 g | 250 g | 250 g |

| பசளை | மரத்தினது வயது வருடங்கள் | | | | |
|---|---|---|---|---|---|
| | 6 மாதம் | 1 1.5 வருடங்கள் | 2 2.5 வருடங்கள் | 3 3.5 வருடங்கள் | 04 வருடங்கள் காய்க்கும் வரை |
| | அளவு (g) | | | | |
| தென்னைக்குரிய கூட்டுப் பசளை (moisture con: 20% 30%) | 5 Kg | 12 kg | 15 kg | 20 kg | 25 kg |
| TSP | 70 g | 180 g | 225 g | 300 g | 340 g |
| MOP | 50 g | 125 g | 145 g | 200 g | 250 g |
| DOLOMITE | 250 g | 250 g | 250 g | 250 g | 250 g |

| பசளை | மரத்தினது வயது வருடங்கள் | | | | |
|---|---|---|---|---|---|
| | 6 மாதம் | 1 - 1.5 வருடங்கள் | 2 - 2.5 வருடங்கள் | 3 - 3.5 வருடங்கள் | 04 வருடங்கள் காய்க்கும் வரை |
| | அளவு (g) | | | | |
| சீமைக்கிழுவை (moisture con: 20% 30%) | 5 Kg | 12 kg | 16 kg | 20 kg | 25 kg |
| TSP | 120 g | 285 g | 370 g | 470 g | 580 g |
| MOP | 60 g | 150 g | 200 g | 250 g | 300 g |
| DOLOMITE | 250 g | 250 g | 250 g | 250 g | 250 g |

வேண்டும். அனேகமானோர் மழையினைக் கண்டவுடன் பசளைப் பிரயோகம் செய்யலாம் என்ற கருத்தினைக் கொண்டிருக்கின்றார்கள். நெல் அல்லது வேறு பயிர்களைப் போன்ற பசளைப்பிரயோகம் தென்னைக்கு பொருந்தாது. மழை தொடர்ச்சியாக பொழியும் போது தாவரம் அகத்துறிஞ்சும் அளவிலும் பார்க்க அப்பசளை நீருடன் கலந்து கீழ் நோக்கிப்போகும் வீதம் அதிகமாக இருப்பதனால் நாம் பிரயோகிக்கும் பசளையின் வினைத்திறன் குறைவடைந்தே இருக்கும். ஒரு கிழமைக்கு 2 அல்லது 3 மழை பெய்யும் நேரங்களில் பசளைப்பிரயோகம் செய்வது சாலச்சிறந்தது. ஆனால் சேதனப்பசளையாகிய மாட்டெரு அல்லது குப்பைகள் தாழ்ப்பதற்கு தொடர்ச்சியான மழை வீழ்ச்சியினைக் கருத்திலெடுக்கத் தேவையில்லை.

அனேகமான தென்னைச் செய்கையாளர்கள் தென்னைக்கு பசளையிட்டவுடன் 3 4 மாதத்திற்குள் அல்லது அடுத்த வருடமாவது காய்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என நினைக்கிறார்கள். இது தவறானதாகும். கீழ்வரும் படம் 3 ஆனது தேங்காயினது விருத்தி நிலைகளைக் காண்பிக்கின்றது.

இதனடிப்படையில் பாளை கண்ணிற்குத் தெரிவதற்கு 20 மாதங்களிற்கு முன்பாகவே தேங்காயிற்குரிய விருத்தி நிலைகள் தொடங்கி விட்டன என்பதனைக் காண்பிக்கின்றது. அத்துடன் பாளை திறந்து கருக்கட்டல் நிகழ்ந்து தேங்காய் பிடுங்குவதற்கு மேலும் 18 மாதங்கள் தேவை.

ஆகையால் நாம் விளைச்சலை அதிகரிப்பதற்கு பசளைப் பிரயோகம் செய்து ஏறத்தாள 3 வருடங்களின் பிறகுதான் நாம் பாவித்த பசளையின் தார்ப்பரியம் தெரிய ஆரம்பிக்கும் என்பதுபடம்3இலிருந்துதெளிவாகிறது. எனவே தென்னைக்கு ஏற்கனவே கூறப்பட்டமைக்கு அமைவாக 6 மாதத்திற்கு ஒருமுறையோ அல்லது வருடாந்தமாகவோ கட்டாயமாகப் பசளைப் பிரயோகம் செய்யப்படல் வேண்டும்.

தென்னைச்செய்கையாளர்கள் பசளைப்பிரயோகம் தொடர்பாகவோ அல்லது தென்னை தொடர்பான மேலதிக விளக்கங்களினைப் பெறுவதற்கு உங்களது கமநலசேவைப் பிரிவிலியங்கும் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்களையோ அல்லது நாவலர் வீதி, நல்லூரில் இயங்கி வரும் தென்னைப்பயிர்ச்செய்கை சபையின் யாழ் பிராந்திய கரரியாலயத்திலோ (021 222 6014) தொடர்பினை ஏற்படுத்தவும்.

உங்கள் பிரதேசத்தவர்களிற்கு பசளையிடல், மண்ணீர் பாதுகாப்பு, ஊடுபயிர்ச்செய்கை, நீர்ப்பாசனம், வண்டுத்தாக்கங்கள், நோய்க்கட்டுப்பாடு போன்ற பல பெறுமதியான தகவல்கள் தேவைப்படின் தாங்கள் குறைந்தது 30 ஆர்வமுடையோர்களைத் திரட்டி எமக்கு அறிவித்தால் அவர்களிற்குரிய பயிற்சி வகுப்புக்களை அவர்களுடைய இடத்திற்கே சென்று தேவையான செயன்முறை விளக்கங்களுடனும் வீடியோ காட்சிகள் மூலமாகவும் இலவசமாக வழங்குவதற்கு யாழ் பிராந்திய தென்னைப்பயிர்ச் செய்கை சபை என்றுமே தயார் நிலையிலுள்ளது என்பதனை தெரிவித்துக்கொள்கின்றேன்..

| சேதன பசளை | | MOP இற்கு பதிலாக | |
|---|---|---|---|
| சேதன பசளை | அளவு (kg) | பொச்சு மட்டை OR | SOP (g) |
| மாட்டெரு (moisture con: 20% - 30%) | 30 | 175 OR | 1500 |
| ஆட்டெரு (moisture con: 20% - 30%) | 25 | 120 OR | 960 |
| கோழியெரு (moisture con: 20% - 30%) | 30 | 115 OR | 900 |
| சீமைக்கிழுவை (moisture con: 50% - 60%) | 50 | 150 OR | 1200 |
| ERP | 525 | | |
| DOLOMITE | 500 | | |
| தென்னைக்குரிய கூட்டுப் பசளை (moisture con: 20% - 30%) | 30 | 175 OR | 1500 |

| சேதன பசளை | | மேலதிக அசேதன பசளை | |
|---|---|---|---|
| சேதன பசளை | அளவு (kg) | அசேதன பசளை | அளவு (g) |
| மாட்டெரு (moisture con: 20% - 30%) | 30 | MOP | 1250 |
| ஆட்டெரு (moisture con: 20% - 30%) | 25 | MOP | 800 |
| கோழியெரு (moisture con: 20% - 30%) | 30 | MOP | 750 |
| சீமைக்கிழுவை (moisture con: 50% - 60%) | 50 | MOP | 1000 |
| | | TSP | 240 |
| | | DOLOMITE | 500 |
| தென்னைக்குரிய கூட்டுப் பசளை moisture con: 20% - 30%) | 30 | MOP | 1250 |

3-ம் பக்க தொடர்ச்சி...


இரண்டாம் மட்ட தலைவர்கள். அனேகமாக எல்லோரும் மாகாண சபைக்குள் இருப்பவர்கள். சம்பந்தனின் முடிவை ஏற்கமாட்டோம் என அவர்கள் விடாப்பிடியாக நிற்பார்கள். விக்னேஸ்வரன்தான் முதலமைச்சர் வேட்பாளர் எனில், தமிழரசுக்கட்சி கூட்டமைப்பை விட்டு வெளியேற வேண்டுமென அறிவித்து, சம்பந்தனிற்கு பயங்கர பிரஷர் கொடுப்பார்கள்.

ஒரு வேளை சம்பந்தன் இந்த அழுத்தத்திற்கு மசியாவிட்டால்?

ஒன்றுக்கும் யோசிக்க வேண்டியதில்லை... கூட்டமைப்பை விட்டு வெளியேறி சம்பந்தரின் பிடியில் இருந்து வெளியேறி மாவையை முதல்வர் வேட்பாளராக அறிவிக்க முயல்வார்கள். தனது பிடி நழுவக்கூடாதென்பதற்காக சம்பந்தன் பணிவார் என்பதே பிளான் B!

சில வாரங்களின் முன்னர் தீபத்தில் வெளியிட்ட இன்னொரு செய்தியையும் நினைவூட்டுகிறோம்.

வடமாகாணசபை தேர்தலில் நான்தான் போட்டியிட வேண்டுமென கட்சிக்குள் கேட்கிறார்கள் என, கூட்டமைப்பின் முக்கியஸ்தர்கள் சிலரிடம் மாவை சேனாதிராசாவே நேரில் கூறியிருந்தார்.



இன்னொரு சம்பவம். சில வாரத்திற்கு முன்னர் கொழும்பில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர்கள் சந்தித்து பேசினர். சந்திப்பு முடிய, பங்காளிக்கட்சியொன்றின் தலைவர் சினேகபூர்வமாக சுமந்திரனிற்கும், மாவை சேனாதிராசாவிற்கும் சில ஆலோசனைகள் கூறினார். விக்னேஸ்வரனையே அடுத்த முலமைச்சர் வேட்பாளராக்க வேண்டுமென அவர் கூற, சுமந்திரன் அதை மறுத்துள்ளார். "நாங்கள் (தமிழரசுக்கட்சி) கடைசிவரை அதை ஏற்கமாட்டோம்" என தெளிவாக கூறிவிட்டார்.

இதெல்லாம் சரி, இப்பொழுது ஏன் இந்த விசயத்தை விக்னேஸ்வரன் நமது தெரிவல்ல என்பதை சுமந்திரன் பகிரங்கமாக கூறினார்.

அதுதான் சுமந்திரனின் Strategy.

யாழ் மாநாகரசபை மேயர் யார் என யாரும் கனவே காணத் தொடங்காத நிலையில் நமது வேட்பாளர் ஆனோல்ட்தான் என சுமந்திரன் அறிவித்தார். ஆரம்பத்திலேயே அறிவித்து, இது தான் எனது நமது நிலைப்பாடு என காண்பித்து விட்டால் கட்சிக்குள், கூட்டமைப்பிற்குள் எழும் சிக்கல்களை சமாளித்து விடலாமல்லவா. யாழ் மேயர் என்ற சிறிய விசயத்திலேயே தமிழரசுக்கட்சிக்குள் எழுந்த பிச்சல் பிடுங்கள் பயங்கரமாக இருந்தது. முதலமைச்சர் விசயத்தில் கூட்டமைப்பிற்குள் பிய்ச்சல் பிடுங்கள் எந்த ரகத்தில் வரும் என்பது சுமந்திரனிற்கு தெரியாதா என்ன. அதனால்தான் முன்கூட்டியே தனது பிளான் A ஐ பற்றி பகிரங்கமாக பேசியுள்ளார்.

ஆனோல்ட்டை யாழ் மேயராக்கவதற்கு பாவித்த அதே Strategyயைத்தான், மாவையை வடக்கு முதல்வராக்குவதற்கும் சுமந்திரன் பாவிக்கிறார்.

இப்பொழுது அடுத்த பெரிய கேள்வி, சுமந்திரனின் பிளான்களை எதிர்கொள்ள விக்னேஸ்வரனிடம் ஏதாவது திட்டமுள்ளதா?

இதற்கு நாம் தெளிவாக சொல்லக் கூடிய ஒரே பதில் ஆம் என்பதே!

இதை பற்றி தீபத்திடம் நிறைய தகவல்கள் உள்ளன. தனிக்கட்சி தொடங்குவதாக விக்னேஸ்வரனே சூசகமாக அறிவித்து விட்டார், இதைவிட வெளியில் வராத எவ்வளவு தகவல்கள் உள்ளதென யாராவது கேட்டால் விக்னேஸ்வரனிடம் உள்ள பிளான் A-C, அவற்றின் உள்ளடக்கம் பற்றியெல்லாம் நிறைய தகவல் வைத்துள்ளோம். அதை பற்றி அடுத்த வாரம் குறிப்பிடுகிறோம்.



பிரபாகரன் என்ற ஒருவர் இருந்தார், மக்களுடன் கண்ணியமாக நடந்தார், பல விசயங்களை ஒருங்கிணைத்து பிரமாண்டமான இயக்கத்தை கட்டியெழுப்பினார், பொது நிர்வாகத்தை நடத்தினார் என்ற பிரமிப்பு எனக்கிருந்தது. தமிழ்நாட்டில் சாதாரண நிர்வாக செயற்பாட்டிலேயே தடுமாறிக்கொண்டிருக்க, பிரபாகரன் எவ்வளவு சாதாரணமாக இவ்வளவு பெரிய கட்டமைப்பை உருவாக்கினார்

# “விடுதலைப்புலிகளின் பெண் போராளிகள்தான் எனக்கு வழிகாட்டிகள்”

## சமூக போராளி கௌசல்யா சங்கர்

நேர்காணல் நம்மாழ்வார்

**கௌ**சல்யா சங்கரிற்கு அதிக அறிமுகம் தேவையில்லை. தமிழகத்தின் உடுமலைப்பேட்டை என்ற இடத்தில் சங்கர் என்ற ஒடுக்கப்பட்ட சமூகத்தை சேர்ந்த இளைஞனை காதலித்து திருமணம் புரிந்ததால், பெண்ணின் பெற்றோராலேயே நடுவீதியில் கூலிப்படையால் அந்த ஜோடி வெட்டி சரிக்கப்பட்டது. சங்கர் அந்த இடத்திலேயே உயிரிழக்க, குற்றுயிரும் குறையுயிருமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, உயிர்பிழைத்தவரே கௌசல்யா. தனது காதலனின் மரணத்திற்காக நீண்ட சட்டப் போராட்டம் நடத்தி, கொலைக் குற்றவாளிகளிற்கு தண்டனை கிடைக்க செய்துள்ளார்.

தற்போது சமூக விடுதலைக்காகவும், ஆணவப்படுகொலைகளிற்கு எதிராகவும் தமிழகத்தில் தீவிரமாக செயற்பட்டு வரும் கௌசல்யா, சங்கர் சமூக நீதி அறக்கட்டளை என்ற தன்னார்வ அமைப்பை நிறுவி செயற்பட்டு வருகிறார். கடந்தவாரம் யாழ்ப்பாணம் வந்திருந்த கௌசல்யாவை தீபம் பிரத்தியேகமாக செவ்வி கண்டிருந்தது.

**தீபம்: நீண்ட சமூக நீதி போராட்டமொன்றை நடத்தி, நீதிப் போராட்டத்தில் வெற்றியும் பெற்றிருக்கிறீர்கள். இப்போது திரும்பி பார்க்க, இந்த போராட்டத்தைஎப்படி பார்க்கிறீர்கள்?**

**கௌசல்யா:** இந்த நீதி, சட்ட போராட்டமெல்லாம் சங்கர் கொலையென்ற சம்பவத்தால் உருவாகியவை. அந்த மாற்றங்கள் என்னை மக்கள் மத்தியில் கொண்டு போயுள்ளது. மக்களுக்கான ஒருத்தியாகத்தான் நிற்கிறேன். எந்தவொரு அரசியல் பார்வையும் இல்லாமல் சாதாரண பெண்ணாகத்தான் இருந்தேன். இந்த மாற்றத்தின் பின், மக்களின் பிரச்சனைகளை புரிந்து கொண்டு அதற்காக குரல் கொடுக்க முடிகிறது.

**தீபம்: புதிய இலங்கை வாசகர்களிற்காக கௌசல்யா என்றால் யார்? அவரது கதை என்னவென்பதை சுருக்கமாக சொல்ல முடியுமா?**

**கௌசல்யா:** கௌசல்யா முதலில் சாதாரண பெண்ணாகத்தான் இருந்தேன். பின்னர் சங்கர் என்ற தாழ்த்தப்பட்ட சமூகத்தை சேர்ந்த ஒருவரை கல்யாணம் செய்ததால், எனது பெற்றோரே ஒரு கூலிப்படையை வைத்து ஆணவப் படுகொலை செய்ய துணிந்தார்கள். என்னையும் சங்கரையும் நடுவீதியில் வைத்தே கூலிப்படையினர் வெட்டினார்கள். சங்கர் அந்த இடத்திலேயே உயிரிழந்து விட்டார். நான் படுகாயத்துடன் உயிர்பிழைத்தேன். சங்கரிற்கு நான் நீதி வாங்கி கொடுத்துள்ளேன். இதுதான் கௌசல்யாவின் பிரதான அடையாளம். உயிர் போனதெனதற்கு சாதிய கட்டமைப்புத்தான் காரணம். எனக்கு நடந்தது இன்னொருவருக்கு நடக்ககூடாது. அதற்கு அந்த சாதிய கட்டமைப்பை உடைக்க வேண்டும். அதற்காகத்தான் உழைத்துக் கொண்டிருக்கிறேன்.

**தீபம்: சங்கர் கொலைக்கும், நீதிமன்ற தீர்ப்பிற்குமான இடைப்பட்ட நாட்களில், தமது தவறுக்காக உங்கள் பெற்றோர் என்றாவது வருந்தியதாக உங்களிடம் சொன்னார்களா?**

**கௌசல்யா:**, இல்லை. இன்றுவரை அதற்காக அவர்கள் வருந்தியது கிடையாது. நாங்கள் தப்பு செய்தோம் என யாரிடமும் ஒரு வார்த்தையும் அவர்கள் சொன்னதில்லை. சாதி மாறி திருமணம்செய்ததுதான் தவறு என்றுதான் இப்பொழுது வரை நினைக்கிறார்கள். ஒரு கொலையை செய்வதை விட, சாதி மாறி திருமணம் செய்வதுதான் அவர்களை பொறுத்தவரை குற்றமாக உள்ளது. சாதியொழிப்பு போராட்டத்தில் நான் ஈடுபட்டிருப்பதே அவர்களிற்கு தவறாகத்தான் தெரிகிறது. நீ ஒருத்தி போராடி இந்த சாதியை ஒழித்து விடுவாயா என்பதுதான் அவர்களின் கேள்வி.

**தீபம்: இந்த சம்பவம் உங்கள் வாழ்க்கையில் அல்லது எண்ணத்தில் எப்படியான மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தது?**

**கௌசல்யா:** சங்கர் கொல்லப்பட்டபோது, இனி உயிர்வாழவே கூடாது, இனி வாழ்க்கையென்று எதுவுமில்லையென நினைத்தேன். ஆனால் இப்பொழுது அது அப்படியே மாறிவிட்டது. எனக்கு எவ்வளவு வலிகள் ஏற்பட்டதோ, அது இன்னொரு பெண்ணிற்கு வந்துவிடக்கூடாது, காதலர்களிற்கு இப்படியான கொடுமை நிகழ்ந்து விடக் கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறேன்.

இந்த அரசியல்பார்வைகள்,என்னையும் குடும்பத்தில் ஒரு அங்கத்தவராக பார்க்கும் உறவுகள் எல்லாம் இந்த சம்பவத்தின் பின்னால் கிடைத்ததுதான். இவர்கள் எல்லாம் முற்போக்கானவர்கள். சாதி மறுத்து திருமணம் செய்பவர்களிற்கு, திருமணம் செய்யும்போதே இந்த உலகத்தை கொடுக்க வேண்டுமென

தொடர்ச்சி 18-ம் பக்கம்...

# மட்டக்களப்பில் வாழும் நெடுந்தீவார் எனும் சமூகத்தினர்



பொ.வருண்ராஜ்
உதவிவிரிவுரையாளர்(தற்காலிகம்)
தொல்லியல்பாடஅலகு
யாழ் பல்கலைக்கழகம்.

இனத்தொல்லியல்(EthnoArchaeology) என்பது சமகாலத்தில் வளர்ச்சியடைந்து வரும் ஒரு துறையாகவும் தொல்பொருளியில் செயன்முறைகளை ஆராய்வதற்கான தகவல் வழங்கும் ஒரு துறையாகவும் காணப்படுகின்றது. இனத்தொல்லியலானது மனிதனுடைய உறவுமுறைகள் மற்றும் அளவிடக்கூடிய மாற்றங்கள்,அவர்களுடை சூழல், கண்ணுக்கு புலப்படாத அல்லது எளிதில் அளவிட முடியாத சமூகமற்றம் கருத்தியல் மாற்றங்கள் பற்றி கவனத்தில் கொள்கின்றது. இனவியல் சார்ந்த ஆய்வின் மூலமாக இன அடிப்படையை மக்கள் வேறுபட்டவர்கள் என்பதை விட பண்பாட்டு அடிப்படையிலே இன வேறுபாடு தோன்றியதென்ற புதிய பண்பாட்டுச்சூழல் உருவானது. ஏங்கெல்லாம் இவ்வாய்வுக்கு தேவையான மனிதனுடைய எச்சங்கள் காணப்படுகிறதோ அவ் ஆதாரங்களை அடிப்படையாக கொண்டு வயது, பால்வேறுபாடு, மக்களது எண்ணிக்கை, சமகால மக்கள் சராசரியாக வாழ்கின்ற காலம், நோய்கள், இயற்கை அனர்த்தங்கள், சமூக உறவுகள், பண்பாடுகள் போன்றவற்றை கண்டறிய உதவுகின்றன. அதுமட்டுமன்றி நவீன மரபணுபரிசோதனை முறையும் இவ்வாய்வில் இணைந்து பண்டைய மக்கள் தொடர்பான பல்வேறு விடயங்களை வெளிப்படுத்த இனத்தொல்லியலுக்கு உதவுகின்றது. இவ்வாய்வில் இனத் தொல்லியலாளரும் இன வரையியலாளரும் கட்டாயமாக இடம்பெறுவர். இவர்களாலேயே மக்களது பாரம்பரிய வரலாறுகள் கட்டமைக்கப்படுவதனைக் காணலாம். அவ்வகையில் நெடுந்தீவில் இருந்து இடம்பெயர்ந்து மட்டக்களப்பல் வாழ்ந்து வரும் நெடுந்தீவார் என்னும் சாதி மக்களுடைய பண்பாடு தொடர்பாக நோக்குவோம்.

அண்மைய தொல்லியல் ஆய்வுகள் நெடுந்தீவின் ஆதிகால வரலாறு யாழ் குடா நாட்டைப் போல பெருங்கற்கால மக்களுடனேயே ஆரம்பிப்பதாக சான்றுபகர்கின்றது. இப் பெருங்கற்கால பண்பாடு தென்னிந்தியாவில் இருந்து இலங்கை தீவெங்கும் பரவுவதற்கு முன்னர் வடஇலங்கையிலுள்ள தீவுகளுக்கு பரவியே பின்னர்; வட இலங்கை பூராகவும் அதிலிருந்து தென்னிலங்கை பூராகவும் பெருங்கற்கால பண்பாடு தோன்ற காரணமாக அமைந்தது. "காக்கை போகாத ஊருமில்லை நெடுந்தீவார் போகாத இடமும் இல்லை" என்ற பழமொழிக்கிணங்க நெடுந்தீவில் இருந்து மக்களின் இடப்பெயர்வானது பெருங்கற்கால பண்பாட்டுடனேயே ஆரம்பித்துள்ளதைக் காணலாம். இதனைத் தொடர்ந்து இற்றைக்கு 2000 வருடங்களுக்கு முன்னர் நெடுந்தீவை ஆட்சி புரிந்த வெடியரசன் போரில் இறந்ததன் பின்னர் அவனது உறவினர்கள் கடல்வழியாக மட்டக்களப்பு பகுதிக்குச் சென்று குடியேறியதாக ஈழத்து முஸ்லிம் அறிஞர் குறிப்பிட்டிருந்த போதும் இதனை உறுதிப்படுத்தும் வகையில் பழுகாமத்திற்கு அருகில் நெடுந்தீவார் என்னும் ஒரு பகுதியினர் வாழ்ந்து வருகின்றனர்.

. பின்னர் 1950 இன் பின்னர் விவசாயக் குடியேற்றத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப் பட்டதன் விளைவாக கிளிநொச்சியில் இரணைமடுவை மையமாகக் கொண்ட பகுதியிலும் முல்லைத்தீவு, மன்னார், புத்தளம், வவுனியா போன்ற பகுதிகளிலும் நெடுந்தீவில் இருந்து இடம் பெயர்ந்தனர். அதுமட்டுமன்றி தொழில் வாய்ப்புத் தேடியும் 1980 இன் பின்னர் உள்நாட்டு யுத்தம் காரணமாக மேலத்தேய நாடுகளுக்கு இவ் நெடுந்தீவு மக்கள் இடம் பெயர்ந்தனர். இவ்வாறாக நெடுந்தீவிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்தாலும் இவர்களில் பழுகாமத்தில் வாழ்ந்து வரும் நெடுந்தீவை மூதாதையினராகக் கொண்ட மக்கள் 'நெடுந்தீவார்' என்ற சாதியாக வகுக்கப்படடு வாழ்ந்து வருகின்றனர். இவ் மக்கள்கூ ட்டம் இன்று நெடுந்தீவுடன் எவ்வித தொடர்பும் இல்லாமல் வாழ்ந்து வருகின்றனர். ஏனைய உள்நாடு வெளிநாடுகளில் வாழும் நெடுந்தீவு மக்கள் நெடுந்தீவை விட்டு இடம்பெயர்ந்தாலும் ஏதோ ஒரு விதத்தில் நெடுந்தீவுடன் இன்றும் தொடர்புடையவர்களாவே காணப்படுகின்றனர்.

ஆனால், நெடுந்தீவார் என்ற பட்டப்பெயருடன் பழுகாமத்தில் வாழும் மக்கள் கூட்டம் முதன் முதலில் பழுகாமத்தில் வந்திறங்கிய இடம் கொக்குபீச்சை எனப்படும் ஆற்றுப் பகுதியாகும். பின்னர் பழுகாமத்தில் குடியேறி பின்னர் மட்டக்களப்பில் கல்லடி, குருக்கள் மடம், களுவாஞ்சிக்குடி, பட்டிருப்பு போன்ற இடங்களிலும் பரவி வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கு தாம் நெடுந்தீவில் இருந்து வந்து குடியேறியவர்கள் என்ற வரலாறு மட்டும் தெரிந்துள்ளதோடு மக்களோடு எவ்வித தொடர்பும் இன்றி தமக்கு என்றயொரு கட்டுக்கோப்புடன் நெடுந்தீவு மக்களது பண்பாடுகளையும் மட்டக்களப்பு மக்களுடைய பண்பாடுகளையும் பின்பற்றி தமக்கென ஒரு தனித்துவமான வாழ்க்கை முறையினை வாழ்ந்து வருவதனை காணலாம்.

இப் பழுகாமமானது மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 13 பிரதேச செயலர் பிரிவு களில் கோரதீவுபற்று பிரதேசம் படுவான்கரை ஒரு பகுதியை பிரதிபலிப்பதோடு மட்டூ, நவகீரி என்னும் உப அலுவலகப்பிரிவுகளோடு உள்டக்கியதாக காணப்படுகின்றது. இங்கும் சமூகமானது சாதியினை மையப்படுத்தியதாக நெடுந்தீவைப் போன்றே கட்டமைக்கப்பட்டு அந்தந்தக் குடிகள் அதாவது சாதிகள் குறிக்கப்பட்ட பிரதேசத்திலே வாழவேண்டும் ஏனை குடிகளின் பகுதிகளில் வாழக்கூடாத என்ற நிலையை இறுக்கமாக கடைப்பிடிக்கப்படுகின்றது. எனினும் ஒவ்வொரு குடியினரும் சமூக நல்லு றவுடன் வாழ்ந்துவருவதனைக் காணலாம். பழுகாமத்தில் வேளாளர், மூக்குவர், பண்டாரப்பிள்ளை, வேடவேளாளர், நெடுந்தீவார், மூலவேலன் கத்தறை, வண்ணார், நாவிதர் எனப்பல சாதிப் பிரிவுகள் காணப்படுகின்றது. இதில் நெடுந்தீவார் என்ற சாதியானது அவர்கள் நெடுந்தீவிலிருந்து இங்கு வந்து குடியேறியதன் காரணமாக அவ்வாறு சிறப்பாக அழைக்கப்படுகிறது.

நெடுந்தீவு மக்கள் உள்ளூர், வெளிநாடுகளில் இவர்கள் வாழ்ந்தாலும் நெடுந்தீவார் என்ற பொதுமைச் சாதிப்பெயரால் எவரையும் அழைக்கப்படவில்லை. ஆனால் பழுகாமத்தில் (மட்டக்களப்பு) உள்ள நெடுந்தீவாரையே அவர்கள் வேளாளர்களாக காணப்பட்டாலும் சிறப்பாக நெடுந்தீவார் என அழைப்பதனைக் காணலாம். பழுகாமத்தில் நெடுந்தீவைப் போன்று ஒவ்வொரு சாதியினருக்குரியதாக கோவில் களும் சாதிக்குரியதான பூசைகளும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக இங்குள்ள கண்ணன் கோயிலில் ஏழுகுடி மூக்குவர்களும், மாவேற்குடா பிள்ளையார் கோவில், காத்தான்குடி வேளாளரும் மாரியம்மன் கோவிலினை நெடுந்தீவாரும் பரிபாலித்து வருகின்றனர். இம்மரபு நெடுந்தீவிலுள்ள இந்து, கிறிஸ்த மக்களிடம் இன்று காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இவ் நெடுந்தீவார் சில வரலாற்று ஆசிரியர்களால் வெடியரசனோடு தொடர்புபடுத்தப்படுகிறது. ஆனால் எனது களஆய்வின் ஊடாக அவர்கள் கலிங்கமாகனது ஆட்சிக்காலத்தில் நெடுந்தீவுக்கு பழுகா மத்திற்கும் இடையில் ஏற்பட்ட உறவின காரணமாகவே பழுகாமத்தில் வந்து முதல் குடியேறியதாக மக்களால் கூறப்படுகிறது. வெடியசன் தொடர்பான வரலாறு அம்மக்கள் யாருக்குமே தெரியவில்லை. இதற்கு இம்மக்கள் சந்ததி சந்ததியாக தமக்கான வரலாற்று மரபை தொடர்ச்சியாக பேணாமை ஒரு காரணமாக இருக்கலாம்.

பழுகாமத்தில் வாழுகின்ற நெடுந்தீவார் இந்து மதத்தவர்களாக காணப்படுவதனால் வயது வந்தவர்கள் எங்காவது செல்வதாக இருந்தால் திருநீற்றுக் குறியும் பொட்டும் அவர்களது நெற்றியை அலங்கரிக்கும். இவர்களும் நெடுந்தீவாரைப் போன்று அம்மான் என்ற தெய்வத்தை ஆகம மரபுசராத வகையிலே வழிபாடு ஆற்றுவதனைக் காணலாம். இவ்வாலயத்திற்கு பூசகர்களாக இச்சமூகத்தில் உள்ளவர்களே முறைப்படி பூநூல் தரித்து பூசை செய்கின்றமை ஒரு முக்கிய விடயமாகும். மேலும் நெடுந்தீவில் பிடாரி அம்மன் வழிபாடும் பழுகாமத்தில் முத்துமாரியம்மன் வழிபாடும் சிறப்பாகக் கைக்கொள்ளப்படுகின்றது. பழுகாமத்திலுள்ள முத்துமாரியம்மன் ஆலயத் திருவிழாவின் போது தான் நெடுந்தீவார் என்ற சாதிக் கட்டமைப்புடைய மக்கள் கூட்டம் அனைவரும் ஏனைய பிரதேசங்களிலிருந்து முத்துமாரிஅம்மன்கோவில் ஒன்றிணைந்து கொள்வர்.

நெடுந்தீவார் பழுகாமத்தில் குடியேறி பின்னர் வேறு பிரதேசங்களில் குடியேறிய போது அதற்கு தமது தாய்கிராமமான நெடுந்தீவிலுள்ள பெயர்களையே சூட்டினார். குறிப்பாக மட்டக்களப்பில் குருக்கள்மடம் என்ற இடத்திலும் நெடுந்தீவார் என்ற குடியினர் வாழ்கின்றனர். இவ்வாறாக நெடுந்தீவில் உள்ள குருக்கள்மடம் என்ற கிராமத்திலிருந்த மக்கள் தான் மட்டக்களப்பிற்கு இடம்பெயர்ந்து தமது இடத்தின் பெயரை வைத்திருப்பார்களோ என எண்ணத்தோன்றுகின்றது.

இவர்களும் நெடுந்தீவைப் போன்று பனையை தமது வாழ்வாதாரமாக கொண்டு வாழ்ந்து வருவதுடன் காலத்தின் தேவையை உணர்ந்து விவசாயம், மீன்பிடித்தல், கள்வடித்தல், மந்தை வளர்ப்பு போன்ற தொழில்களை பாரபட்சமின்றி செய்வதுடன் தமது கோயில்களை பூசை செய்வதற்காக தம் சாதிக்குள்ளேயே பூநூல் தரித்து ஆலய பூசை செய்து வாழ்ந்து வருகின்றமையை காணலாம். இவர்கள் முதன் முதலில் பழுகாமத்தில் வந்திறங்கிய இடம் கொக்குபீச்சை எனப்படும் ஆற்றுப் பகுதியாகும். அப்பகுதியில் இன்றும் அவர்கள் தமது உணவிற்காகவும் பொழுதுபோக்கிற்காகவும் மீன்பிடித்து வருகின்றமையை காணலாம்.

இவர்களின் வாழ்வியலும் நெடுந்தீவாரைப் போன்று பாரம்பரியமான பனம்பொருள் உணவுகள், மீன், பிட்டு நெல் அரிசிச்சோறு என்பனவற்றுடன் மட்டக்களப்பு தேசத்திற் குரிய சிலவகையான உணவுகளும் உட்கொண்டு வருகின்றனா. நெடுந்தீவார் பழுகாமத்தில் அதிகமானோர் ஓலையால் வேயப்பட்ட குடிசைவீடுகளிலேயே வாழ்ந்துவருகின்றனர். எனினும் இவர்கள்மத்தியில் பாரம்பரிய சமயலறைப்பொருட்கள் வீட்டு அம்சங்கள் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்க தாகும். மேலும் இவர்களது சடங்குகள், நம்பிக் கைகள், சமூகக்கொண்டாட்டங்கள் என்பனவும் நெடுந்தீவில் உள்ளவர்களைப்போன்று கடைப் பிடிக்கப்படுவதுடன் மரணவீடு நெடுந்தீவைப் போன்று பழமைமாறாதவகையில் தொடர்ந்து பின்பற்றி வருவதனைக்காணலாம். குறிப்பாக இங்கு பிணத்திற்கு பாடை கட்டும்மரபு இன்று அழியாமலேயே காணப்படுகின்றது.

இவர்களின் பேச்சுவழக்கில் நெடுந் தீவைவிட பாரியமாற்றம் ஏற்பட்டாலும் உறவு முறைப்பெயர்கள் அப்படியே நெடுந்தீவையே பிரதிபலிப்பதோடு, இவர்களது உரையாடலின் போது 'ங்க' என்ற சத்ததுடன் முடிவடையும். குறிப்பா வாங்க, போங்க, அமருங்க போன்ற சொற்களைக் குறிப்பிடலாம். மேலும் இவர்களதுபண்பாட்டில் திருமணம்செய்வதாக இருந்தால் இரத்த உறவுகளுக்குள் சாதகப் பொருத்தம் பார்க்காது திருமணம் செய்வதுடன் வேறு முறையிலான திருமண பந்தமும் உளளது. ஆதாவது நெடுந்தீவார் குடிக்குள்ளேயே தமது சாதியினர் எங்கெல்லாம் இருக்கிறார்களோ அவர்களோடு தமது திருமண பந்தத்தினை வைத்துக்கொள்வார்கள். அத்துடன் திருமணத்தின் போது சீதன முறைமை என்பது இவர்களிடம் குறைவாகவே காணப்படுகின்றது. அத்துடன் சமூகக்கொண்டாட்டங்களின் போது உறவுகள் ஒன்றாக சேர்ந்து நின்று கொண்டாடி மகிழ்வதுடன் கூட்டுக்குடும்ப வாழ்க்கையே இன்று சில குடும்பங்களில் காணப்படுகிறது.

இவ்வாறு நெடுந்தீவில் இருந்து மட்டக் களப்பில் குறிப்பாக பழுகாமத்தில் வாழும் மக்கள் கூட்டம் தம்மை சிறப்பாக நெடுந்தீவார் என்று அடையாளப்படுத்தி தமக்கென்று தனித்துவ பண்புகளையும் தமது பிறந்த மண்வாடையின் பண்பாடுகளை மறக்காது பின்பற்றி வாழ்ந்து வருகின்றமையை காணலாம். இங்கு வாழ்கின்றவர்களில் சிலர் தமது தாயகமான நெடுந்தீவு மக்களுடன் தொடர்பினை பேணவேண்டும் என்ற ஆவலுடன் வாழ்ந்து வருகின்றனர்.

# ஆலோசகர் அவசியமா?



இறுதிச்சுற்று திரைப்படம் பாத்திருப்பீர்கள். அதில் ரித்திகா சிங்கின் வெற்றிக்குக் காரணம் அவருடைய ஆற்றலா அல்லது மாதவனின் கோச்சிங் திறமையா என ஒரு பட்டிமன்றமே வைக்கலாம்.

ரித்திகாவின் ஆற்றலை முறைப் படுத்தி, அவரை ஒரு நேர்க்கோட்டில் நிறுத்தி இலக்கை அடைய வைத்தவர் அவருடைய கோச் மாதவன்தான். முதலீட்டு ஆலோசகர்கள் பணியும் இத்தகையதே.

நம்மிடம் சம்பாதிக்கும் ஆற்றல் உள்ளது. அதில் நம் தேவைகள் போக மிச்சமிருக்கும் பணத்தை எப்படிப் பெருக்குவது என்பது பலருக்கும் தெரிவதேயில்லை. இங்குதான் ஆலோசகரின் தேவை வருகிறது.

முதலீட்டுக் கல்விக்கான உலகின் முதல் நிறுவனத்தைத் தொடங்கிய லோரென் டுன்டன் (Loren Dunton) சொன்னது போல, ஆலோசகர் தேவைப்படாத அளவுக்கு முதலீடு குறித்து ஞானம் உடையவர்கள்தான் கண்டிப்பாக ஆலோசகர்கள் உதவியை நாடுகின்றனர். அதுவே அவர்களின் வெற்றியின் ரகசியம்.

### உங்களுக்கு ஆலோசகர் தேவையா?

1. குடும்பத்தில் கணவரோ அல்லது மனைவியுமே நன்கு சம்பாதிக்கிறார்கள். ஆனால், அவர்களின் கையிருப்பு மட்டும் அதிகரிப்பதில்லை ஏன் என்று தெரியவில்லையா?
2. வருமானத்தில் பெரும் பகுதியை காப்பீடு நிறுவனங்களின் திட்டங்களில் 'முதலீடு' செய்துவிட்டு ஓய்வுக்காலத்துக்கு எவ்வளவு பணம் கையிலிருக்கும் என்று தெரியவில்லையா?
3. அதிகச் செலவு பிடிக்கும் விஷயங்களான பிள்ளைகளின் படிப்பு, திருமணம் வாழ்வின் முக்கிய நிகழ்வுகளை நோக்கி நகர திடமான திட்டம் இல்லையா?
4. உங்கள் சம்பாதியத்துக்கு இணையாகச் சம்பாதிக்கும் உங்கள் அண்டை வீட்டுக்காரர் கட்டும் வருமான வரி, எப்படி உங்கள் வரியைவிடக் குறைவாக இருக்கிறது என்று யோசித்ததுண்டா?
5. அறுபது வயதில் ஓய்வுபெறும்போது மாதாந்திரச் செலவுகளுக்கு எவ்வளவு பணம் தேவைப்படும், அதைப் பெற ஓய்வுபெறும்போது எவ்வளவு பணம் இருக்க வேண்டும் என்று தெரியவில்லையா?
6. வங்கிகள் தரும் வட்டி விகிதம் குறைந்துகொண்டே போகிறதே. இனியும் வங்கிகளில் நிரந்தர வைப்பு நிதியில் பணம் போடலாமா என்ற சிந்தனையா?
7. ஷேர் மார்க்கெட் சூதாட்டம் போன்றது என்று அதிலிருந்து விலகியே இருக்கிறீர்களா?
8. நேரடியாக நிறுவனங்களின் பங்குகளை வாங்கலாமா அல்லது மியூச்சுவல் ஃபண்டுகளில் முதலீடு செய்யலாமா என்று குழப்பமா?
9. முதலீடு செய்யலாம் என்று இறங்கினால், ஈக்விட்டி, லார்ஜ் கேப், மிட் கேப் பாண்ட், ஆனுயுட்டி எனப் புரியாத பாஷையில் சொல்கிறார்கள். எதில் முதலீடு செய்வது எனப் புரியாமல் திணறுகிறீர்களா?
10. ஓரளவுக்குப் புரிந்து முதலீடு செய்து வரும்போது வீழ்ச்சியடையும் மார்க்கெட்டுக்கு ஏற்ப பிளான் ஏதும் இல்லையா?

இவற்றில் ஒன்றுக்கு மேற்பட்ட கேள்விகளுக்கு 'ஆம்' என்று பதில் சொல்பவர்களுக்கு ஆலோசகர் அவசியம் தேவை.

ஆலோசகர் வேலை கிட்டத்தட்ட ஜிம் ட்ரெயினர் வேலை போன்றது. உடல் எடையைக் குறைக்க, எடையைப் பராமரிக்க, மரத்தன் ஓட பயிற்சி, மாரடைப்பு வராமல் தடுக்க என்று ஜிம்முக்குப் போகும் நோக்கமானது ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்றாக இருக்கும்.

அதையறிந்த ட்ரெயினர் உங்களுக்கு என்ன தேவையோ அந்த உடற்பயிற்சிகளைச் சொல்வார், எதை எவ்வளவு நேரம் செய்ய வேண்டும், எப்போது செய்ய வேண்டும், என்ன சாப்பிட வேண்டும், என்ன சாப்பிடக்கூடாது என்றெல்லாம் பரிந்துரைப்பார், இலக்கை அடையும் வரை உங்களுடன் பயணிப்பார். அதேபோல முதலீட்டு ஆலோசகரும் இலக்கை நிர்ணயித்துவிட்டு அதை அடைய் எங்கு முதலீடு செய்ய வேண்டும், எவ்வளவு செய்ய வேண்டும், காப்பீட்டின் முக்கியத்துவம் என்ன, முதலீட்டில் செய்ய வேண்டியது செய்யக் கூடாதது என்ன என எல்லாவற்றையும் அடையாளம் காட்டி இலக்கை அடையும்வரை உங்களுடன் பயணிப்பார்.

### நல்ல ஆலோசகர் யார்?

ஆம்ஃபி சான்றிதழ் பெற்றவர்கள், மியூச்சுவல் ஃபண்டுகளை விற்கலாம். நிதி நிபுணர்கள், பிறருக்கு முதலீட்டு ஆலோசனைகள் சொல்லும் தகுதி பெற்றவர்கள். எல்லாத் தொழில்களையும்போல, இதிலும் படிப்பு மூலமான அறிவு, 10-20 ஆண்டுகள் நடைமுறையில் கற்ற அனுபவம் தேவை. எனவே, சான்றிதழ் பெற்றவர்களையோ அல்லது அனுபவம் உடையவர்களையோ தேர்ந்தெடுக்கலாம்.

ஆலோசகர், எந்த ஒரு நிதி நிறுவனத்தின் ஊழியராக இல்லாதவராக இருக்கட்டும். அப்படியிருந்தால், அவர் அந்த நிறுவனத்தின் முதலீட்டு திட்டங்களை மட்டுமே முன்னிறுத்துவார்.

சென்செக்ஸ் அல்லது நிஃப்டியின் வளர்ச்சியை விட இருமடங்கு மும்மடங்கு வருமானத்துக்கு உத்தரவாதம் தருகிறேன் என்பவர்களிடமிருந்து விலகியே இருங்கள்.


ஆலோசகரின் முதலீட்டுச் சித்தாந்தம் என்ன என்று கேளுங்கள். முழுக்க அக்ரசிவ் ஆகவும் இல்லாமல், கன்சர்வேட்டிவ் ஆகவும் இல்லாமல் ஒவ்வொருவரின் தேவைக் கேற்ப சரிவிகிதத்தில் போர்ட்ஃபோலியோவை வடிவமைப்பவராக இருக்கட்டும்.

ஆலோசகர், கடந்த பத்தாண்டுகளில் தன்னுடைய வாடிக்கையாளர்களுக்குப் பெற்று தந்த வருமானத்தைக் கேட்டறியுங்கள். முக்கியமாக மார்க்கெட் வீழ்ச்சியடந்த 2008ம் ஆண்டு அவருடைய செயல்பாடு என்ன என்பதைப்பாருங்கள். முடிந்தால் அவருடைய வாடிக்கையாளர்கள் ஓரிருவருடன் பேசி அவர்கள் கருத்தைக் கேளுங்கள்.

### என்ன நன்மை?

நம் சொத்தின் மீது எமோசனல் அட்டாச்மென்ட் வைப்பது மனித இயல்பு. அதை விலக்கச் சிறந்த தீர்வு, ஆலோசனை கேட்பது. ஆலோசனை சொல்பவருக்கு உங்க முதலீட்டின் மீது எமோசனல் அட்டாச்மென்ட் கிடையாது. அவரிடமிருந்து வரும் ஆலோசனை பகுத்தறிந்ததாக இருக்கும்.

பங்குச் சந்தையின் போக்கை முழுமையாக யாராலும் கணிக்க முடியாது. விலை ஏறும் காலத்தில் விற்பதும் விலை இறங்கும்போது வாங்குவதும்தான் சிறந்த ஸ்ட்ராடஜி. சிறு முதலீட்டார்கள் பலரும் செய்யும் தவறு இதை மாற்றிச் செய்வதுதான். மார்க்கெட் ஏறிக்கொண்டே போகிறதே என்று முதலீடு செய்வோம். சந்தை பலமா அடி வாங்கி 20% வீழ்ந்ததும் ஓடிப் போய் முதல் ஆளாக பணத்தை வெளியில் எடுப்போம். நல்ல ஆலோசகரின் துணை, மார்க்கெட் வீழும்போது சமாளிக்க பக்கபலமாய் இருக்கும்.



### கட்டணம் எவ்வளவு?

மருத்துவர்களைப்போல, வழக்கறிஞர்களைப்போல முதலீட்டு ஆலோசர்களின் சேவைக்கும் கட்டணம் உண்டு. முதல்முறை உங்களைப் பற்றி அறிய ஓரிரு மணி நேரங்கள் அவர் செலவிட வேண்டும், அதற்கு ஒரு முறைக் கட்டணமும், தொடர்ந்து உங்கள் போர்ட்ஃபோலியோவின் அளவிற்கேற்ப 0.5% முதல் 2% வரையும் கட்டணம் இருக்கும். மருத்துவர் தரும் மருந்துகள் நோயைத் தற்காலிகமாகத் தீர்க்கலாம்; தொடர்ந்து உடல் நலம் காப்பது உங்கள் கையில்தான். அதுபோல முதலீட்டு ஆலோசகர் எல்லாவற்றையும் பார்த்துக்கொள்வார் என்று இருக்காதீர்கள். செலவைக் கட்டுப்படுத்தி சேமிப்பை அதிகரிப்பது உங்கள் கையிலேயே இருக்கிறது. ஆண்டுக்கொரு முறையாவது ' போர்ட்ஃபோலியோ சரியான பாதையில் செல்கிறதா என்று பார்த்துக் கொள்வது அவசியம்.

# பிரிட்டன் நச்சுவாயு தாக்குதல்.... பின்னணியில் ரஷ்யாவின் அழகிய ஆபத்து!

## உளவுத்துறை விளையாட்டுக்கள்

முதலில் பிரிட்டன்தான் 23 ரஷ்ய தூதரக அதிகாரிகளை தனது நாட்டை விட்டு வெளியேற்றியது. பதிலடியாக ரஷ்யா தனது நாட்டில் இருந்து அதே எண்ணிக்கையிலான பிரிட்டன் தூதரக அதிகாரிகளை வெளியேற்றியது. அடுத்து அமெரிக்காவும் தனது பங்குக்கு 60 ரஷ்ய தூதரக அதிகாரிகளை வெளியேற்றியது. பிரிட்டனுக்கு ஆதரவாக, பிரான்ஸ், ஜெர்மனி, போலந்து, இத்தாலி உள்ளிட்ட நாடுகளும் ரஷ்ய தூதரக அதிகாரிகளை வெளியேற்றி வருகின்றன. கவலையே படாமல் ரஷ்யாவும் பதிலுக்கு பதில் தனது நாட்டில் உள்ள அந்த நாட்டு தூதர்களை வெளியே அனுப்பி வருகிறது.

என்ன ஆச்சு..? ஏன் இந்த தூதரக வெளியேற்ற நடவடிக்கை..?

பிரிட்டனின் சாலிஸ்பரி பகுதியில் வசிக்கும் ரஷ்யாவை சேர்ந்த டபுள் ஏஜெண்ட் செர்ஜி ஸ்கிரிபால், அவரது மகள் யூலியா மீது நடத்தப்பட்ட விஷவாயு தாக்குதல்தான் இத்தனைக்கும் காரணம்.

கடந்த மார்ச் 4ம் திகதி சாலிஸ்பரியில் மகள் யூலியாவுடன் ஷொப்பிங் மோல் செல்கிறார் ஸ்கிரிபால். இத்தாலியன் உணவகத்தில் இருவரும் சாப்பிடுகிறார்கள். அங்கிருந்து வெளியேறி ஒரு பாரில் சிறிதுநேரம் செலவிடுகிறார்கள். அங்கிருந்து வெளியே வந்ததும் திடீரென அங்கிருக்கும் பெஞ்சில் இருவரும் மயங்கி சரிகிறார்கள். பொலிஸார் அவர்களை மருத்துவமனையில் சேர்க்கிறார்கள். விசாரணையில் இருவருமே நரம்பு மண்டலத்தைத் தாக்கும் நோவிசோக் எனப்படும் விஷவாயுவால் தாக்கப்பட்டிருப்பது தெரிய வருகிறது. கோமா நிலைக்கு சென்ற இருவரும் அதில் இருந்து இன்னும் மீளவில்லை. சிசிடிவி கமரா பதிவுகளில் அவர்களை யாரும் பின்தொடர்ந்து தாக்குதல் நடத்தியதாகத் தெரியவில்லை. எனினும் ரஷ்யாதான் இருவரையும் இந்த நிலைக்கு ஆளாக்கியது என்பது பிரிட்டனின் குற்றச்சாட்டு. இதை ரஷ்யா மறுத்துள்ளது.




அன்னா சாப்மேன்

**யார் இந்த ஸ்கிரிபால்?**

ரஷ்ய ராணுவ உளவுப் பிரிவில் கேணலாக இருந்தவர் செர்ஜி ஸ்கிரிபால். இங்கிலாந்தின் உளவுப் பிரிவுக்கு (எம்ஐ16) ரஷ்யாவின் முக்கிய ராணுவ தகவல்களைக் கொடுத்ததாக இவர் மீது புகார் எழுந்தது. 1990 முதல் இங்கிலாந்துக்கு உளவு பார்த்து பல லட்சம் டொலருக்கு மேல் பணம் பெற்றதாக ரஷ்யா குற்றம் சுமத்தியது.

ஐரோப்பிய நாடுகளில் இருந்த 300க்கும் மேற்பட்ட ரஷ்ய உளவாளிகள் குறித்த தகவல்களைக் கொடுத்து, அங்கிருந்து அவர்கள் வெளியேற்றப்படக் காரணமாக இருந்தார் என்பது இவர் மீதான குற்றச்சாட்டு. 1990ம் ஆண்டு ராணுவத்தில் இருந்து இவர் ஓய்வு பெற்ற பிறகும் ரஷ்ய ராணுவம் தொடர்பான முக்கிய ரகசியங்களை தொடர்ந்து பிரிட்டனுக்கு அளித்து வந்தார் என ரஷ்ய ராணுவம் கூறியது. 2004ம் ஆண்டு அவர் கைது செய்யப்பட்டார். ராணுவ கோர்ட்டில் நடந்த விசாரணையில் உளவாளியாக செயல்பட்டதை ஸ்கிரிபால் ஒப்புக் கொண்டார். 2006ல் இவருக்கு 13 ஆண்டு சிறை தண்டனை விதிக்கப்பட்டது. அவருக்கு வழங்கிய ராணுவ பட்டங்கள் பறிக்கப்பட்டன. ரஷ்ய செய்தித்தாள்கள், டிவியில் பரபரப்பாக பேசப்பட்ட வழக்கு இது. இதுபோன்ற உளவு வேலைக்கு ரஷ்யாவில் கொடுக்கப்பட்ட மிகக் குறைந்த தண்டனை இதுதான்.





2010ம் ஆண்டில் அமெரிக்காவில் உளவு வேலை பார்த்ததாக 10 ரஷ்ய உளவாளிகளை எப்பிஐ கைது செய்தது. அவர்களில் முக்கியமானவர் அன்னா சாப்மேன் எனப்படும் பெண் உளவாளி. ரஷ்யாவின் மிக அழகான இளம் உளவாளி என்ற பெயர் அவருக்கு உண்டு. அன்னா உட்பட அனைவரையும் விடுதலை செய்யும்படி ரஷ்யா வலியுறுத்தியது. அப்படி செய்வதற்கு, ரஷ்ய சிறைகளில் இருக்கும் 3 பேரை விடுதலை செய்து தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என அமெரிக்கா நிபந்தனை விதித்தது. அந்த 3 பேரில் ஒருவர் இங்கிலாந்துக்கு உளவு பார்த்த செர்ஜி ஸ்கிரிபால்.

உயிரை பணயம் வைத்து வேலை பார்க்கும் உளவாளிகளை இதுபோல் பரிமாறிக் கொள்வது உலக நாடுகளிடையே வழக்கம்தான். தங்கள் நாட்டு உளவாளியைக் காப்பாற்ற எந்த அளவுக்கு முயற்சி செய்வார்களோ அதேபோல், தங்களுக்காக உளவு பார்த்து கைது செய்யப்பட்டு சிறையில் இருக்கும் உளவாளிகளையும் காப்பாற்ற முயற்சி எடுப்பார்கள். அந்த வகையில், ஸ்கிரிபால் ரஷ்யராக இருந்தாலும், அவரைக் கைவிடாமல் காப்பாற்ற முடிவு செய்தது இங்கிலாந்து. ஆஸ்திரியாவின் வியன்னா விமான நிலையத்தில் இந்த உளவாளிகள் பரிமாற்றம் நடந்தது. தங்களிடம் இருந்த 10 ரஷ்ய உளவாளிகளையும் ரஷ்யாவிடம் ஒப்படைத்தது அமெரிக்கா. ரஷ்ய சிறைகளில் இருந்த ஸ்கிரிபால் உள்பட 3 பேரை அமெரிக்காவிடம் ஒப்படைத்தது ரஷ்யா. அப்படி மீண்டு வந்தவர் தான் ஸ்கிரிபால்.

ஸ்கிரிபால் இங்கிலாந்தின் சாலிஸ்பரி பகுதியில் மனைவி லூட்மிலாவுடன் தங்கியிருந்தார். அங்கு குற்றங்கள் நடப்பது குறைவு என்பதால் அந்தப் பகுதியை தேர்வு செய்து அங்கு வசித்தார். அடுத்த ஆண்டே லூட்மிலா புற்றுநோயால் இறந்தார். அடுத்தும் சோகம் தொடர்ந்தது. ரஷ்யாவில் தங்கியிருந்த அவரின் 43 வயது மகன் அலெக்ஸாண்டர் திடீரென மரணமடைந்தார். செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நகருக்கு காதலியுடன் சுற்றுலா சென்றபோது திடீரென மயங்கி விழுந்தார். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட உடனேயே மரணமடைந்தார். இவருடைய மரணத்தில் சந்தேகம் இருப்பதாக பரவலாக பேச்சு எழுந்தது. ஆனால் தந்தையின் மீது சுமத்தப்பட்ட தேசத் துரோக புகாரால் மனம் உடைந்து குடிப் பழக்கத்துக்கு அடிமையானதால் கல்லீரல் பாதிக்கப்பட்டு அலெக்ஸாண்டர் இறந்ததாக அவருடைய அத்தையே சொன்ன பிறகுதான் பேச்சு நின்றது.

ஸ்கிரிபாலின் மகள் யூலியா தந்தையுடன் இங்கிலாந்தில்தான் தங்கியிருந்தார். ஆனால் மாஸ்கோ நினைப்பு அடிக்கடி வந்ததால் மீண்டும் ரஷ்யா திரும்பினார். தந்தையை பார்க்க அடிக்கடி இங்கிலாந்துவருவார். அப்படி வந்த நேரத்தில்தான் தந்தையுடன் சேர்ந்து விஷவாயு தாக்குதலில் நினைவிழந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.


தனக்கும் இதற்கும் சம்பந்தமில்லை என ரஷ்யா மறுத்தாலும் இதற்கு முன்பு நடைபெற்ற பல மர்ம மரணங்களைப் பார்த்தால் ரஷ்யாவை நோக்கித்தான் சந்தேகக் கரம் நீளும். தமக்கு எதிராகப் பேசும் ரஷ்யர்களை காலி செய்வது ரஷ்யாவுக்கு புதிதல்ல என்கிறது அமெரிக்கா. இங்கிலாந்தில் இதுபோல் 14 பேரை தீர்த்துக் கட்டியுள்ளது ரஷ்யா என்கிறார் சிஐஏவின் முன்னாள் அதிகாரி ஸ்டீவன் ஹால். அவர்களில் ஒருவர்தான் அலெக்ஸாண்டர் லிட்விநெங்கோ. சுருக்கமாக லிட்.

முன்னாள் ரஷ்ய உளவாளியான லிட் இங்கிலாந்தில் செட்டில் ஆனவர். கடந்த 2006ம் ஆண்டு லண்டன் ஹோட்டல் பாரில் லிட் அருந்திய

தொடர்ச்சி 18-ம் பக்கம்...

# புலனாய்வு அதிகாரியின் ராஜதந்திர விளையாட்டு!

5




ஈரானிற்கு ஆயுதம் கொடுப்பதால், அமெரிக்க பயணக்கைதிகளை கடத்திய இயக்கத்தை கட்டுப்படுத்த லாமா என்பதை உறுதியாக சொல்ல முடியாதென டேவிட் கிம்சி சொன்னதையும், இதனால் அப்செற் ஆன அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் கஸ்பர் வீன்பெர்க்கர் கொஞ்ச நேரம் தீவிரமாக யோசித்தார். பின்னர் “இது கொஞ்சம் சீரியசான சிற்றிவேசன்தான். நமக்கு இன்னும் கொஞ்சம் அவகாசம் தேவை. ஜனாதிபதியுடன் விவாதித்து விட்டு மேற்கொண்டு என்ன செய்வதென முடிவுசெய்யலாம். நாம் நாளை சந்திப்போமா?” என்றார்.

கிம்சியும் அதற்கு சம்மதித்தார் என கடந்த வாரம் குறிப்பிட்டிருந்தோம்.


கிம்சியை ஓய்விற்கு அனுப்பிவிட்டு வெள்ளை மாளிகை பரபரப்பானது. ஜனாதிபதி ரீகனின் மேசைக்கு நேரடியாகவே விவகாரம் போனது. பாதுகாப்பு செயலாளர், இராஜாங்க செயலாளர், உளவுத்துறை ஆலோசகர் என மூன்று பேருடன் மட்டும் விசயத்தை மட்டுப்படுத்தி, ஆலோசனைக்கூட்டத்தை நடத்தினார்.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான கருத்துக்களை சொல்ல, முடிவில்லாமல் இழுபட்டுக்கொண்டே போனது. ஆயுதங்களை வாங்கும்வரை நல்லபிள்ளையாக ஈரான் இருந்துவிட்டு, ஆயுதம் கிடைத்ததும் விசயத்தை உளவுத்துறை வட்டாரங்களில் லீக் ஆக்கினால் விளைவுகள் விபரீதமாகும். அப்போது ஈராக்குடன் ஈரான் போரிட்டு கொண்டிருந்தது. அமெரிக்காவின் ஆயுதம் ஈரானிடம் இருப்பது தெரிந்தால், ஈராக் முழுமையாக ரஷ்யாவின் பிடிக்குள் தஞ்சமடைந்து விடும். மத்திய கிழக்கில் உள்ள மற்ற நாடுகளும், சிரியா, லிபியா போன்றவையும் முழுமையாக ரஷ்ய முகாமில் தஞ்சமடைந்துவிடும் என்றுதான் எல்லோரும் அப்பிராயப்பட்டனர்.

அப்படியானால் மாற்று வழி?

எவ்வளவு நேரம் தலையை பிய்த்தும் எந்த வழியும் திறக்காததால், ரிஸ்க் எடுப்பதென அமெரிக்கா தீர்மானித்தது. அதாவது ஈரானிற்கு ஆயுதம் வழங்கும் முடிவில் மாற்றம் கிடையாது!

ஈரானிற்கு எப்படி ஆயுதம் வழங்குவது என்பதை திட்டமிட்டது மக்பார்லேன். அது அட்டகாசமான திட்டம். அமெரக்காவிடம் இருந்த இரண்டு கவலைகளையும் தீர்த்து வைக்கும்விதமான திட்டம். முதலாவது, ஈரானுக்கு ஆயுதம் போன விசயம் லீக் ஆனாலும், அது அமெரிக்காவிலிருந்து வந்தது என்பது தெரியவராது. இரண்டு, ஆயுதங்களை வாங்கினால் எப்படியும் அந்த தீவிரவாத இயக்கத்திற்கு அழுத்தம் கொடுத்தே தீர வேண்டிய நிர்ப்பந்தம் ஈரானிற்கு ஏற்படும். அமெரிக்காவிற்கு இருந்த இரண்டு கவலைகளையும் தீர்த்து வைக்கும் விதமான திட்டம் தயாரானது.


டேவிட் கிம்சி

## திட்டம் இதுதான்

இந்த பகுதியின் ஆரம்பத்தில் சொன்ன ஒரு விசயத்தை இப்பொழுது மீளவும் நினைவுபடுத்துகிறோம். இந்த சம்பவம் நடந்து கொண்டிருக்கும் காலத்திற்கு சற்று முன்னதாக இஸ்ரேல் கொஞ்ச ஆயுதங்களை ஈரானிற்கு வழங்கியிருந்தோம் என குறிப்பிட்டிருந்தோம். கிட்டத்தட்ட இரண்டு வருடத்தில் பகுதிபகுதியாக அந்த ஆயுதங்கள் வழங்கப்பட்டிருந்தன. ஏவுகணை அல்லாத மோட்டார்கள், துப்பாக்கிகள், டாங்கி எதிர்ப்பு எறிகணைகள், துப்பாக்கிகள், கைக்குண்டுகள்தான் இஸ்ரேல் வழங்கியது. இஸ்ரேலில் இருந்து வழங்கப்பட்ட ஆயுதங்களின் லிஸ்றை சி.ஐ.ஏ பெற்றிருந்தது. அந்த லிஸ்றை வைத்துத்தான் மக்பார்லேனின் திட்டம் தயாரானது.

இரண்டு வருடத்தில் கொஞ்சம் கொஞ்சமாக இஸ்ரேல் வழங்கிய ஆயுதத்தைவிட பலமடங்கு ஆயுதத்தை அமெரிக்கா வழங்குமென்பதே திட்டம்!

எவ்வளவு ஆயுதங்கள் வழங்கப்படப் போகின்றன என்ற விபரத்தை முன்னரே கிம்சீ மூலம் அறிவிக்கப்படும். இதில் கவனிக்கப்பட வேண்டிய விசயம் என்னவென்றால், சிலவகை விமான எதிர்ப்பு ஏவுகணைகள் கூட அமெரிக்கா வழங்கும் பட்டியலில் இருந்தன.

இப்படியொரு ஆயுத விநியோகத்தை ஈரான் கனவில் கூட நினைத்திருக்காதென்பது நிச்சயம். இவ்வளவு ஆயுதங்கள் கிடைக்கும்போது, அமெரிக்கா என்ன சொன்னாலும் செய்வதற்கு ஈரான் தயாராக இருக்கும். அந்த தீவிரவாத இயக்கத்தை எப்படியும் கட்டுப்படுத்தி, கடத்தப்பட்ட அமெரிக்கர்களை விடுதலை செய்விப்பார்கள் என்பதுதான் அமெரிக்காவின் நம்பிக்கை. ஆயுதங்களை வாங்கியபின் ஈரானால் பணயக் கைதிகளை விடுவிக்க முடியாவிட்டால்?

மக்பார்லேனின் திட்டத்தில் அதற்கும் வழி இருக்கிறது.

கொடுப்பதாகக் கூறப்படும் ஆயுதங்கள் முழுவதும் ஒரேயடியாகக் கொடுக்கப்பட மாட்டாது. முதலில் ஒருபகுதி ஆயுதங்கள் ஈரான்வரை சென்று சேரும். அந்த ஆயுதங்கள் கிடைத்தவுடன் ஈரான் நிர்ப்பந்தம் செய்து குறைந்தது ஒரு பணயக் கைதியையாவது விடுதலை செய்ய வைத்து காட்ட வேண்டும்.

அதன் பின்னர் மேலும் ஒரு பகுதி ஆயுதங்கள் கொடுக்கப்படும். மற்றும் ஒரு செட் பணயக்கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும். அதன்பின் அடுத்த பகுதி ஆயுதங்கள் ஈரானில் போய் இறங்கும். சரி. இப்போது அடுத்த சந்தேகம். ஏதோ ஒரு காலத்தில் அமெரிக்கா ஆயுதம் கொடுத்ததை ஈரான் பகிரங்கப்படுத்தி விட்டால் என்ன செய்வது?

இந்தக் கேள்விக்கும் மக்பார்லேனின் திட்டத்தில் பதில் இருந்தது. அதுதான், இந்த திட்டமிடலின் உச்சம்.

ஈரானுக்குக் கொடுக்கப்படும் ஆயுதங்கள் எதுவுமே அமெரிக்கத் தயாரிப்பு ஆயுதங்களாக இருக்காது. இஸ்ரேலியத் தயாரிப்பு ஆயுதங்கள். அவற்றை இஸ்ரேலிய அரசிடம் இருந்து விலைக்கு வாங்கி ஈரானுக்குக் கொடுப்பதுதான் திட்டம்.

ஆயுதங்களுக்கான விலையை அமெரிக்கா, கொடுத்துவிடும். இப்படியான வேலைகளுக்காக அமெரிக்காவிடம் ரகசிய பட்ஜெட் ஒன்று உள்ளது. அதில் செலவு செய்யப்படும் பணம் பற்றிய விபரங்களை அமெரிக்க செனட்டுன்னு தெரியப்படுத்தி, அனுமதி பெற வேண்டிய அவசியமில்லை.

இஸ்ரேலிடம் இருந்து வாங்கப்படும் ஆயுதங்கள், அமெரிக்கா வரை வரத் தேவையில்லை. இஸ்ரேலியரான டேவிட் கிம்சீ, மூன்றாவது நபர் ஒருவர் ஊடாக ஆயுதங்களை ரகசியமாக ஈரானுக்குள் கொண்டுபோக வேண்டும். மூன்றாவது பார்ட்டிக்கு, ஆயுதப் பெறுமதியின் 10 சதவிகிதம்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...




டி.நாராயண ரெட்டி,
செக்ஸாலஜிஸ்ட்

# சொல்லித் தெரிவதே மன்மதக் கலை!

'ஒரு பெண் தொட்டுப் பேசுகிறாளா? அவளுக்கு செக்ஸ் உணர்வு அதிகமிருக்கும்' என நினைக்கும் ஆண்கள் இருக்கிறார்கள். இது அறியாமை. ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவானது செக்ஸ். 'என் மனைவி செக்ஸ் வைத்துக்கொள்ள அடிக்கடி அழைக்கிறாள். என்ன செய்யலாம்?' என்று என்னிடமே பலர் கேட்டிருக்கிறார்கள். இந்த ஆணாதிக்க மனநிலையைத் தூக்கி எறிந்துவிட்டு, பெண்ணின் எதிர்பார்ப்பைத் தெரிந்து கொள்ளவேண்டியது அவசியம்.

காரணத்தைத் தெரிந்துகொள்ளாமல், மனைவிமீது பழிபோடுவது தவறு. தினமும் செக்ஸ் வைத்துக் கொண்டால்தான் குழந்தை பிறக்கும் என்ற மூடநம்பிக்கை... கணவன் வேறு பெண்ணுடன் உறவு வைத்துக் கொள்வதைத் தடுக்க... பெண்ணுக்கு செக்ஸில் ஆர்வம் இருந்து, ஆணுக்குக் குறைவாக இருப்பதால் ஏற்படும் தவறான புரிந்துணர்வு... செக்ஸின் போது ஆணுக்கு சீக்கிரமாக விந்து வெளியேறி (Premature ejaculation) பெண்ணுக்கு முழுமையான இன்பம் கிடைக்காமல் போவது... எனக் காரணங்கள் எத்தனையோ இருக்கின்றன அல்லது அப்படி உங்களுக்குத் தோன்றலாம். உடல் ரீதியாக சிலருக்கு செக்ஸ் ஈடுபாடு அதிகமாகவோ, குறைவாகவோ இருப்பது இயல்பு. செக்ஸில் ஆண்தான் ஃபர்ஸ்ட் ஸ்டெப் எடுத்து வைக்க வேண்டும் என்ற ஆணாதிக்க மனநிலை பெண்ணைக் குறை சொல்ல முக்கியக் காரணம். அதிக செக்ஸ் உணர்வுக்கு சில நோய்களும் காரணங்களாகின்றன. ஃபெர்சனாலிட்டி டிஸ்ஓர்டர் (Personality disorder) பிரச்னையாக இருக்கலாம்; மூளையின் சில இடங்களில் கட்டி (Brain tumour) இருக்கலாம்.

'முதலிரவில் என் மனைவிதான் முதலில் செக்ஸைத் தூண்டும்விதமாக முத்தமிட்டாள், கட்டியணைத்தாள். அவளுக்கு ஏன் இத்தனை ஆசை, அவள் வெர்ஜினா (Virgin) இல்லையா என்பதை எப்படிக் கண்டுபிடிப்பது?' என்று பல இளைஞர்கள் என்னிடம் கேட்கிறார்கள். இவர்களின் மனநிலை வேதனையளிக்கிறது. செக்ஸ் உணர்வு ஒருவருக்கொருவர் மாறுபடக்கூடியது. மனைவிமீது சந்தேகப்படாதீர்கள். மனம்விட்டுப் பேசுங்கள். அவளின் தேவையைப் புரிந்துகொள்ளுங்கள். மனைவிக்கு எந்த இடம் இன்பம் கொடுக்கும், எப்படியெல்லாம் செக்ஸில் ஈடுபட விரும்புகிறாள் என்பதைக் கவனிக்க வேண்டும். சின்னச் சின்ன தொடுதல்கள், சீண்டல்கள்கூட அவளைத் திருப்திப்படுத்தலாம். உதாரணமாக, காதைக் கடிப்பது, விரலுக்குச் சொடுக்கு எடுப்பது..! பிறகென்ன... தாம்பத்தியத்தில் இன்பம் காணுங்கள்.'

**கேள்வி: டொக்டர் எனக்கு 27 வயது. ஒரு வருடத்துக்கு முன்பாகத் தான் என் மனைவிக்குக் குழந்தை பிறந்தது. இப்போது, இரண்டாவது குழந்தைக்காக முயற்சி செய்கிறோம். ஆனால், ஒவ்வொரு முறை செக்ஸில் ஈடுபடும்போதும், என் மனைவி 'அதிகமாக வலிக்கிறது' என்கிறார். என்ன பிரச்னையாக இருக்கும்?**

*பதில்:* முதலில் உங்கள் மனைவியை நல்ல மகப்பேறு மருத்துவரிடம் அழைத்துச் சென்று இதற்கான காரணத்தைத் தெரிந்துகொள்ளுங்கள். முதல் குழந்தை பிறக்கும்போது, பெண்ணுறுப்புக்கும், ஆசனவாய்க்கும் இடைப்பட்ட பகுதி கிழிந்துவிடும். இதைச் சரிசெய்ய, எபிசியோடமி (Episiotomy) ஒப்ரேஷன் செய்து, கிழிந்த இடத்தைத் தைத்துவிடுவார்கள். ஒப்ரேஷனைச் சரியாகச் செய்யவில்லையென்றாலும் வலி ஏற்படும். அப்படி இருந்தால் நல்ல மருத்துவரிடம் சென்று ஒப்ரேஷன் செய்துகொள்வது நல்லது. கர்ப்பப்பை, யோனிக் குழாயில் ஏதாவது பிரச்னை இருந்தாலும் வலி ஏற்படலாம். மருத்துவரிடம் சென்று வலிக்கான காரணத்தைத் தெரிந்துகொண்டு சிகிச்சை எடுத்துக்கொள்வதே சிறந்தது.

**(இன்னும் கற்றுத் தருகிறேன்...)**

---

கமிஷனாகக் கொடுக்கப்படும்.

. எப்படி திட்டமிடல்?

நாளைக்கே இந்த ரகசிய டீல் வெளியே தெரியவந்தால், ஆயுத தயாரிப்பில் நம்பர்1 யார? அமெரிக்கா. இப்படியான நாடு எதற்காக இஸ்ரேலிடம் இருந்து ஆயுதம் வாங்க வேண்டும். இஸ்ரேலிடம் இருந்து அமெரிக்கா ஆயுதம் வாங்கியதென நீங்கள் கற்பூரம் கொளுத்தி சத்தியம் செய்தாலும் யாரும் நம்ப மாட்டார்கள். திட்டம் டேவிட் கிம்சீக்கும் விளங்கப்படுத்தப்பட்டது. அவருக்கும் சம்மதம். உடனே, இஸ்ரேல் புறப்பட்டுச் சென்றார்.

அமெரிக்கா ஆயுதம் கேட்ட விபரத்தை இஸ்ரேல் பிரதமரிடம் சொன்னார் கிம்சீ. இஸ்ரேலில் சிலபல ஆலோசனைக்கூட்டங்கள் நடந்து, இறுதியில் ஆயுதம் வழங்குவதென முடிவெடுத்தார்கள்.

இனி, ஆயுதங்களை ரகசியமாக ஈரானுக்குகொடுக்கவேண்டும். ஈரானிய அரசிடம் சில உறுதிமொழிகளும் பெறப்படவேண்டும்.

இதற்கு சரியான நபர் ஒருவர் தேவை. அவருக்கு சர்வதேச அளவில் செல்வாக்கு இருக்கவேண்டம். டேவிட் கிம்சீ இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சில் இருப்பதால், அவர் நேரடியாக இந்த அலுவலைச் செய்ய முடியாது. எந்த அரசு பதவியிலும் இல்லாத மூன்றாவது நபர் ஒருவர் தான் இதைச் செய்து கொடுக்க வேண்டும்.

செய்யப்போகும் மூன்றாவது நபருக்கு ஆயுதங்களின் பெறுமதியில் 10 சதவிகிதம் கமிஷனாக இருப்பதால் (கமிஷன் மாத்திரம் மில்லியன் கணக்கில் கிடைக்கும்) இதைச் செய்து கொடுக்க யாரும் முன்வருவார்கள்.

ஆனால் தனியொருவரிடம் இந்த பொறுப்பை வழங்க கிம்சீ விரும்பவில்லை. ஒரு நபரை நம்பி இறங்கி ஏதாவது சிக்கல் வந்தால் என்ன செய்வது என்று யோசித்து, ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்கள் ஒரு நபரின் தலைமையில் செயற்பட வேண்டும். டேவிட் கிம்சீ வெளியே இருந்து இந்த குழுவினரின் நடவடிக்கையைக் கண்காணித்துக் கொண்டிருப்பார்.

மூன்றாவது நபர்களின் குழுவுக்குத் தலைவராக இருப்பதற்கு டேவிட் கிம்சீ தேர்ந்தெடுத்த நபர் அட்னான் கஷோகி!

அட்னான் கஷோகி ஒரு சவுதி அரேபிய கோடீஸ்வரர். வெளிப் படையாகச் செய்வது பெற்ரோலியத் துடன் சம்மந்தப்பட்ட வியாபாரங்கள். ஆனால் மறைமுகமாக சில நிழலான டீல்களிலும் சம்மந்தப்படும் ஆள். மொசாத்துக்காக கடந்த காலத்தில் சில ஆயுத டீல்களை முடித்து கொடுத்தவர்.

கஷோகி, தன்னைப்பற்றிய செய்திகள் அவ்வப்போது வெளியாவதை விரும்பும் நபர். தன்னைச் சுற்றி எப்போதும் கவர்ச்சிகரமான நங்கைகள் சிலரை வைத்திருப்பார்.

இந்த நங்கைகள் வெறும் பொம்மைகள் அல்ல. கஷோகி தமது ரகசிய டீல்களில் ஈடுபடுத்துவது, இந்த பெண்களைத்தான். தனது உளவாளிகளாக இவர் வைத்திருப்பதும் மொடல் அழகிகளைத்தான்.

(தொடரும்)

## அஜித்தை இயக்கும் பிரபுதேவா?

போக்கிரி படத்தை இயக்கி ஹிட் கொடுத்த பிரபுதேவா அடுத்ததாக அஜித்தை இயக்க திட்டமிட்டுள்ளார். இந்த படத்திலும் அஜித்துக்கு ஜோடியாக நயன்தாராவே நடிப்பார் என்று கோலிவுட் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தமிழ், தெலுங்கு, இந்தி படங்களில் நடிப்பு மற்றும் இயக்கத்திலும் பிசியாக உள்ளார் பிரபுதேவா. நடிகர் அஜித் இயக்குனர் சிவாவும் தற்போது நான்காவது முறையாக விஸ்வாசம் படத்தில் இணைந்துள்ளனர். இந்த படத்தை அடுத்து பிரபுதேவா இயக்கத்தில் நடிக்க உள்ளதாக தெரிகிறது. இது தொடர்பாக அஜித்தை அடிக்கடி பிரபுதேவா சந்தித்து வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. விஸ்வாசம் பட வேலைகள் முடியும் முன்னரே அஜீத் பிரபுதேவா கூட்டணி குறித்த தகவல் வெளியாகலாம் என்கிற தகவல் அடிபடுகிறது.

## ஸ்ருதிஹாசன் விட்ட வாய்ப்பை பறித்தார் திஷா

கோலிவுட் ஹீரோயின்களில் ஒரு சில நடிகைகள் இந்தி படங்களில் நடித்தாலும் தாக்குபிடிக்க முடியாமல் மீண்டும் தென்னிந்திய சினிமாவுக்கே திரும்பினர். ஆனால் தமிழ், தெலுங்கு, இந்தி ஆகிய 3 மொழிகளில் அடுத்தடுத்து நடித்ததுடன் இசை அமைப்பாளர், பாடகி என பிற பணிகளிலும் ஆர்வம் காட்டி வருகிறார் ஸ்ருதிஹாசன். கடந்த 1 வருடமாக அவர் எந்த படமும் ஒப்புக்கொள்ளாமல் இருக்கிறார். சுந்தர்.சி இயக்கத்தில், 'சங்கமித்ரா' படத்தில் டைட்டில் வேடத்தில் நடிக்க கடந்த ஆண்டு ஒப்புக்கொண்டவர் அதற்காக வாள் பயிற்சியுபெற்றார். ஆனால் திடீரென்று அப்படத்திலிருந்து விலகினார். தந்தை கமலுடன் நடிப்பதாக இருந்த 'சபாஷ் நாயுடு' படமும் முதல்கட்ட படப்பிடிப்போடு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இதற்கிடையில் லண்டன் பாய்பிரண்ட் மைக்கேல் கோர்சேலுடன் டேட்டிங்கில் ஈடுபட்டார். அது தொடர்கிறது. ஸ்ருதிஹாசன் விலகிய 'சங்கமித்ரா' படத்தில் தற்போது திஷா பதானி நடிக்கிறார். இவர் இந்தியில் டோனி வாழ்க்கை படமான, 'எம்.எஸ்.டோனி தி அன்டோல்ட் ஸ்டோரி' படத்தில் நடித்தவர். ஏற்கனவே ஆர்யா, ஜெயம் ரவி 'சங்கமித்ரா' படத்தில் இணைந்து நடிக்க ஒப்புக்கொண்டிருக்கின்றனர். மன்னர் கெட் அப் அணிந்து சமீபத்தில் அவர்கள் ஒத்திகை பார்த்தனர். ஸ்ருதிஹாசன் படங்களில் நடிக்காமல் ஒதுங்கி இருந்தாலும் இணைய தள டுவிட்டர் பக்கத்தில் எந்த நடிகையும் எட்டாத அளவுக்கு 70 லட்சம் ஃபாலேயர்களை பெற்று சாதனை படைத்திருக்கிறார். இந்த ஆண்டில் அவர் மீண்டும் படத்தில் நடிக்க வருவார் என்பதற்கு அறிகுறியாக இந்தியில் வித்யூத் ஜம்வல் உடன் புதிய் படத்தில் நடிக்க ஒப்புக்கொண்டிருக்கிறார்.

## நடிகையை பூட்டி வைத்த காதலன்!

இந்தியில் 'சிக்ஸ் டென்' படத்தில் நடித்திருப்பவர் யாஸ்மின் பதன். பல்வேறு டிவி சீரியல்களிலும் நடித்திருக்கிறார். அவருடன் இணைந்து நடித்திருப்பவர் கிரண் ராஜ். நெருக்கமாக பழகி வந்த இவர்களுக்குள் கருத்துவேறுபாடு ஏற்பட்டது. சில தினங்களுக்கு முன் பெங்களூரில் இருந்தபோது இவர்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டது. இதில் யாஸ்மினை கிரண்ராஜ் தாக்கி அறையில் வைத்து பூட்டியதாக கூறப்படுகிறது. யாஸ்மின் செல்போனையும் பிடுங்கி சென்றார். பூட்டிய அறையிலிருந்து சாதுர்யமாக தப்பிய யாஸ்மின் மும்பை சென்று அங்குள்ள போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். பின்னர் பெங்களூர் போலீசிலும் புகார் அளித்தார். முன்னதாக, 'முதலில் பெங்களூர் போலீசில் புகார் அளிக்க விடாமல் கிரணும் அவரது நண்பர்களும் என்னை தடுத்துவிட்டனர். எனவேதான் மும்பை போலீசில் புகார் அளித்தேன்' என்று யாஸ்மின் கூறினார். நடிகை அளித்த புகாரின் பேரில் கிரண்ராஜை போலீசார் கைது செய்தனர். இதுபற்றி கிரண் கூறும்போது,'யாஸ்மின் எனது அம்மாவை தாக்கியதுடன் பெற்றோரை தரக்குறைவாக பேசினார்' என்றார்.

## இந்தி விக்ரம் வேதாவில் ஷாருக்கான்?

விஜய் சேதுபதி, மாதவன், வரலட்சுமி, ஸ்ரத்தா ஸ்ரீநாத் நடிப்பில் வெளிவந்த படம் விக்ரம் வேதா. புஷ்கர் காயத்ரி இயக்கி இருந்தனர். இந்த படத்தை இந்தியில் ரீமேக் செய்கிறார்கள். இந்தியிலும் புஷ்கர் காயத்ரி இப்படத்தை இயக்க இருக்கிறார்கள். படம் வெளியானபோது, இதை பார்த்துவிட்டு ஷாருக்கான் பாராட்டி இருந்தார். அப்போதே இதன் ரீமேக்கில் அவர் நடிப்பார் என கூறப்பட்டது. இப்போது மீண்டும் தயாரிப்பாளர்கள் தரப்பில் ஷாருக்கிடம் பேச்சு நடந்து வருகிறது. மாதவன் கேரக்டரில் அவரே நடிப்பார் என்றும் தெரிகிறது. இதற்கிடையே இன்னொரு இந்தி பட வாய்ப்பும் மாதவனுக்கு வந்தது. ஆனால் அவர் அதில் நடிக்கவில்லை. ரன்வீர் சிங் நடிப்பில் உருவாகும் இந்தி படம் சிம்பா. இது தெலுங்கு டெம்பர் படத்தின் ரீமேக். இந்த படத்தில் வில்லன் வேடத்தில் நடிக்க மாதவன் ஒப்புக்கொண்டிருந்தார். ஆனால் இப்போது தோள்பட்டையில் ஏற்பட்ட காயம் காரணமாக அவர் பெட் ரெஸ்ட்டில் இருக்கிறார். மேலும் ஒரு மாதம் அவர் ஓய்வில் இருக்க வேண்டுமாம். இதனால் சிம்பா படத்திலிருந்து விலகியுள்ளார். விக்ரம் வேதா ரீமேக் ஷூட்டிங் ஜூலையில் தான் துவங்குகிறது. இதனால் அதில் மாதவன் நடிப்பார்.



## PACIFIC RIM UPRISING

### சினி விமர்சனம்

பசிபிக் கடலின் ஆழத்திலிருந்து வெளிவரும் ராட்சத மிருகம், அதனை அழிக்க உருவாக்கப்பட்ட மிகப்பிரம்மாண்ட ரோபேர்க்கள். அதனை இயக்கி மிருகத்தை அழிப்பதோடு பசிபிக்கில் ஏற்பட்ட பிளவையும் உயிரைக் கொடுத்து சரி செய்து அடைப்பதுடன் முதல் பாகம் முடிவடைய அங்கிருந்து துவங்குகிறது இரண்டாம் பாகம். தன்னை யாரும் மதிக்கவில்லை என்னும் கோபத்தில் ஒரு விஞ்ஞானி அந்தப் பிளவை மீண்டும் திறந்துவிட மிருகம் உலகை அழிக்க களம் இறங்குகிறது. ஏகர்ஸ் ரோபோக்களுடன் சக்திவாய்ந்த இளம் குழு இணைந்து அந்த மிருகத்தை அழித்து உலகை அழிவிலிருந்து மீட்டார்களா இல்லையா என்பது ஆக்ஷன் பரபர க்ளைமாக்ஸ்.

படம் நெடுக ரோபோக்களின் ராஜ்ஜியம் என்பதால் பெரும்பாலும் நடிகர்களுக்கு பெரிதாக வேலையில்லை. எனினும் கேப்டன்களாக வ்ரும் ஜான் பொயேகா, ஸ்காட் ஈஸ்ட்வுட் மற்றும் புதிதாக குழுவில் சேரும் கெய்லீ ஸ்பேனி இவர்கள் மூவரும் நடிப்பில் ஸ்கோர் செய்கிறார்கள். முந்தைய பாகம் அளவிற்கு விறு விறு இல்லையென்றாலும் பிரம்மாண்டத்தால் 3டியில் நம்மைக் கட்டிப் போடுகிறது படம்.

அதி வேகமான திரைகதை , ஆக்ஷன் காட்சிகளுக்கு ஏற்ப டான் மிண்டெலின் ஒளிபதிவு அருமை, அதற்கேற்ப பின்னணியில் பிரமாதம் காட்டுகிறார் லோர்ன் பல்ஃபி. பனிபிரதேசத்தில் சண்டையிடும் அதி நவீன ரோபோ, குழுவாக சேர்ந்து மிருகத்தை துவம்சம் செய்யும் க்ளைமாக்ஸ் காட்சிகள் என படம் முழுக்க விஷுவல் ட்ரீட்க்கு பஞ்சமில்லை. முந்தைய பாகத்திற்கும் இந்தப் பாகத்திற்கும் பெரிதாக வித்யாசமில்லை என்பதால் இரண்டாம் பாகம் மற்றுமொரு படமாக கடந்து செல்கிறது. எனினும் கோலிவுட் உலகம் அமைதி காக்கும் வேளையில் கொஞ்சம் ஆறுதலாக இருக்கிறது இந்த பசிபிக் ரிம்: அப்ரைஸிங்.



# வண்ணத் திரை



## ஹரியுடன் இணையும் சூர்யா

இயக்குனர் ஹரி நடிகர் சூர்யா மீண்டும் ஒரு படத்தில் இணைய உள்ளனர். இந்த புதிய புதிய படம் நிச்சயம் சிங்கம் படம் வரிசையில் இருக்காது என்று கூறப்படுகிறது. விரைவில் புதிய படத்திற்கான அறிவிப்பு வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது ஹரி சாமி 2 படத்தை இயக்கி வருகிறார். இதன் இறுதிகட்ட படப்பிடிப்பு ஸ்டிரைக் முடிந்த பின் தொடங்க உள்ளது. இதன்பின் ஹரி இயக்கும் படத்தில் சூர்யா நடிப்பார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளது.

## தமிழிலும் தாராளம் காட்டும் ரெஜினா!

நான் சிகப்பு மனிதன் படத்திற்கு பிறகு திரு இயக்கும் படம் மிஸ்டர்.சந்திரமவுலி. இதில் கௌதம் கார்த்திக், அவரது தந்தை கார்த்திக், ரெஜினா கெசண்ட்ரா, வரலட்சுமி சரத்குமார், சந்தோஷ் பிரதாப், சதீஷ் உள்பட பலர் நடிக்கிறார்கள். ரிச்சர்ட் எம்.நாதன் ஒளிப்பதிவு செய்கிறார், சாம் சி.எஸ் இசை அமைக்கிறார். போப்டா மீடியா ஓர்க் சார்பில் தனஞ்செயன் தயாரிக்கிறார். இதன் படப்பிடிப்புகள் கடைசியாக தாய்லாந்தில் நடந்தது. வேலை நிறுத்தத்திற்கு முன்பே படப்பிடிப்பை முடித்து விட்டு திரும்பி விட்டனர். அங்கு கவுதம் கார்த்தி, ரெஜினா நடித்த பாடல் காட்சிகள் படமாக்கப்பட்டது. அதில் ரெஜினா படு கவர்ச்சியாகவும், கௌதமுடன் மிக நெருக்கமாகவும் நடித்திருப்பதாக கூறப்பட்டது. இப்போது அதன் படங்களை வெளியிட்டு அதனை உறுதி செய்துள்ளனர். ரெஜினா தெலுங்கு படங்களில் தான் கவர்ச்சியாக நடிக்கிறார். தமிழில் அப்படி நடிப்பதில்லை என்ற கருத்து இருந்தது. அதை உடைக்கும் வகையில் மிஸ்டர்.சந்திரமவுலியில் தாராளமாக நடித்திருக்கிறார்.

## ரஜினியை குத்திக்காட்டிய கமல்

அண்ணா பல்கலைழகத்திற்கு புதிய துணை வேந்தராக கர்நாடகாவை சேர்ந்த சூரப்பா நியமிக்கப்பட்டிருக்கிறார். இதனை விமர்சித்த கமல் தனது டுவிட்டரில் "கர்நாடகாவிலிருந்து தண்ணீர் கேட்டால் துணை வேந்தரை அனுப்பி வைக்கிறார்கள்" என்று குறிப்பிட்டிருந்தார். இது கடுமையாக விமர்சிக்கப்பட்டது. இதற்கு விளக்கம் அளித்து இன்னொரு டுவிட் போட்டார் கமல் அதில் "நடிகர் நாகேஷ் எனது குருநாதர்களில் ஒருவர். ராஜ்குமார் அண்ணா, சரோஜாதேவி என்னுடைய நண்பர்கள், ரஜினிகாந்த், அம்ரீஷ்பூரி என்னவர்கள். எனவே நான் சொன்னது மத்திய மாநில அரசுகள் தொடர்பான ஒரு நகைச்சுவை கருத்து. அது கவர்னரை சாடும் கருத்தல்ல. எது என்ன ஆனாலும் தமிழகத்துக்கு தண்ணீர் வேண்டும்" என்று குறிப்பிட்டிருக்கிறார். கமல் குறிப்பிட்டுள்ள அனைவரும் கர்நாடகத்திலிருந்து வந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. தன்னுடய கன்னட நண்பர்களின் பட்டியலில் கமல், ரஜினியையும் சேர்த்திருப்பது அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## 100 கோடி வசூலித்துள்ள ரங்கஸ்தலம்

தெலுங்கில் வெளியான ரங்கஸ்தலம் படம் அதிவேகத்தில் ரூ.100 கோடி வசூலித்துள்ளது. இந்த படத்தை சுகுமார் இயக்கியுள்ளார். ராம் சரணுக்கு ஜோடியாக சமந்தா நடித்துள்ள படம் அரங்கு நிறைந்த காட்சிகளாகவே ஆந்திராவில் சக்கை போடு போடுகிறது. இதனால் ரங்கஸ்தலம் படக்குழு அளவில்லா மகிழ்ச்சியில் உள்ளனர். தமிழகத்திலும் இப்படம் கணிசமான தொகையை இப்படம் ஈட்டிவருகிறது. திருமணமான பின்னும் சமந்தாவிற்கு இருக்கும் வரவேற்பு மற்ற இளம் நடிகைகளை பொறாமைப்பட வைத்திருக்கிறது. சமந்தா நடித்து இந்த வருடத்தின் முதல் படமான 'ரங்கஸ்தலம்' தெலுங்குப் படம் நல்ல வரவேற்புடன் ஓடிக் கொண்டிருக்கிறது.

## ஸ்வாதிஷ்டாவுக்கு டைரக்டர் கண்டிஷன்

சவரக்கத்தி, கீ படங்களில் நடித்துள்ள ஸ்வாதிஷ்டா கூறுகையில், 'சினிமாவில் யாருடைய ஆதரவும் இல்லாமல் ஜெயிப்பது சவாலான விஷயம். சவரக்கத்தி படத்தில் நடித்தேன். இதற்குமுன் இன்ஜினியரிங் மற்றும் ஜர்னலிசம் படித்துள்ள நான், டி.வி தொகுப்பாளராகவும் இருந்துள்ளேன். ஜீவாவின் கீ படத்தில் முக்கிய கேரக்டரில் நடிக்கிறேன். கதை பற்றி வெளியில் சொல்லக்கூடாது என்று இயக்குனர் கண்டிஷன் போட்டுள்ளார். மதம் என்ற படத்தில் ஹீரோயினாக நடிக்கிறேன். சினிமாவில் ஷாலினி அஜீத், அனுஷ்கா, ஐஸ்வர்யா ராஜேஷ் எனக்கு இன்ஸ்பிரேஷன்' என்றார்.

## தனுஷ் படம் என்னானது?

ரஜினியை வைத்து கார்த்திக் சுப்பராஜ், இயக்கும் படம் குறித்த அதிகாரபூர்வ தகவல் வெளியான பிறகு, கார்த்திக் சுப்பராஜ் இயக்கத்தில் தனுஷ் நடிப்பதாக அறிவிக்கப்பட்ட படம் என்னவாயிற்று என்ற கேள்வி படத்துறையில் எழுந்திருக்கிறது. கார்த்திக் சுப்பராஜ் அடுத்து ரஜினி நடிக்கும் படத்தைத் தான் இயக்கவிருக்கிறார் என்றும் இந்த படத்தை முடித்த பிறகே தனுஷ் நடிக்கும் படத்தை இயக்கவிருக்கிறார் என்றும் கார்த்திக் சுப்பராஜ் தரப்பில் சொல்லப்படுகிறது. தனுஷ் நடிக்கும் படத்தை தள்ளி வைக்க இன்னொரு காரணமும் இருக்கிறது. அந்த படத்தில் முக்கிய வேடங்களில் சில ஹாலிவுட் நடிகர்களை நடிக்க வைக்க கார்த்திக் சுப்பராஜ் முயற்சி செய்து வருகிறார். அவருடைய முயற்சி கைகூடும் நேரத்தில் அந்தப்படத்தை தயாரிப்பதாக இருந்த தேனாண்டாள் பிலிம்ஸ் பின்வாங்கிவிட்டது. தனுஷையே தயாரிக்கும்படி கேட்டார் கார்த்திக் சுப்பாராஜ். அவரோ வட சென்னை படத்தை தயாரிப்பதால் அவரிடமிருந்து கார்த்திக்கு இன்னும் பாசிட்டிவான பதில் வரவில்லை. இதனால் தான் ரஜினி நடிக்கும் படத்தை முதலில் இயக்கிவிட்டு, பிறகு தனுஷ் நடிக்கும் படத்தை இயக்க முடிவு செய்துள்ளார் கார்த்திக் சுப்பராஜ்

## எல்லைமீறும் நடிகைகள்!

சமீபகாலமாக கவர்ச்சி என்ற பெயரில் சில நடிகைகள் ரொம்பவே அத்து மீறுகின்றனர். அதிலும் பேஸ்புக், டுவிட்டர், இன்ஸ்டிராகிராம் போன்ற சமூகவலைதளங்கள் வந்த பின்னர் சகட்டுமேனிக்கு கவர்ச்சி போட்டோக்களை வெளியிடுகின்றனர் நடிகைகள். நடிகை எமி ஜாக்சன், அவ்வப்போது கவர்ச்சியான படங்களை வெளியிடுவார். சமீபத்தில் கவர்ச்சியான நீச்சல் உடை படத்தை வெளியிட்டிருந்தார். அவரை தொடர்ந்து பாலிவுட் நடிகையான ஷெர்லின் சோப்ரா, ஆடையே இல்லாமல் டெடி பியர் பொம்மையுடன் போஸ் கொடுத்து வீடியோ வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தினார். இப்போது, அஜித்துடன் பில்லா 2 படத்தில் நடித்த நடிகை புரூனா அப்துல்லா, மிகவும் கவர்ச்சியான டாப்லெஸ் போட்டோக்களை தனது சமூகவலைதள பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.





# இணையம் எனும் அதிகாரம் மக்களின் கையில்தான் இருக்க வேண்டும்!

ஜோனாதன் ஃப்ரீலாண்ட்

எல்லாவற்றுக்கும் காரணம் அவர்கள் அணியும் டீஷர்ட்டுகள்தான். தொழில்நுட்பத் துறையில் சாதித்த இளம் சாதனையாளர்கள் பலரும் சகஜமான இந்த உடையை அணிந்து கொண்டுதான் நம்மை வசீகரித்திருக்கிறார்கள்; அதன் மூலம் ஒருவிதப் போலி நம்பகத்தன்மையை/நெருக்கத்தை நமக்குத் தந்திருக்கிறார்கள். மார்க் ஜக்கர்பெர்க் (ஃபேஸ்புக்), ஸ்டீவ் ஜாப்ஸ் (ஆப்பிள்), செர்கெய் பிரின், லாரி பேஜ் (கூகுள் நிறுவனர்கள்) போன்றவர்களை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம்.

இணையம் ஒரு மழலைபோல தவழ ஆரம்பித்த காலத்தில் அதை சமத்துவத்தின், சுதந்திரத்தின் ரட்சகராக எல்லோரும் கொண்டாடினார்கள். “எல்லாரையும்போல தகவல் பகிர்தலும், தகவலைப் பெறுதலும் எல்லோருக்கும் உரிய உரிமையாக விடுதலை பெற விரும்புகிறது” என்பது புதுயுகத்தின் முழக்கம்; எதை, எப்படி மக்களுக்குத் தருவது என்ற தணிக்கையிலிருந்து



விடுதலை, செய்திகளைப் பெறுவதற்கு அளிக்கும் கட்டணத்திலிருந்து விடுதலை சாத்தியம் ஆகிவிட்டதாக ஆரம்பத்தில் தோன்றியது. புதிய தொழில்நுட்பப் பொன்னுலகம் நம் கைகளில் எட்டிவிட்டதுபோல் தோன்றியது. ஜக்கர்பெர்க்கும்கூட தனது நிறுவனத்தின் நோக்கத்தைப் பற்றிச் சொல்லும்போது, “இந்த உலகை மேலும் வெளிப்படையாக ஆக்குவதற்கும் ஒருவரையொருவர் எளிதில் தொடர்புகொள்வதற்குமான அதிகாரத்தை ஃபேஸ்புக் மக்களுக்கு அளிக்கிறது” என்றார்.

அதிகாரம் மிக்கவர்களை ஒடுக்கி, பலவீனமானவர்களாக இருக்கும் சாதாரண மக்களை வலுப்படுத்தும் சக்திகளாக இணையமும், குறிப்பாக சமூக ஊடகங்களும் கொஞ்சநாளுக்கு முன்புவரை பார்க்கப்பட்டன. கேம்பிரிட்ஜ் அனலிட்டிக்கா நிறுவனத்துக்கு 50 கோடி பயனர்களின் தகவல்களை ஃபேஸ்புக் ஒப்படைத்ததை கேரல் காட்வாலட்ர் என்ற பெண் பத்திரிகையாளர் அம்பலப்படுத்திய பிறகுதான், ஃபேஸ்புக்கின் நோக்கமாக ஜக்கர்பர்க் கூறிய வார்த்தைகள் நமக்குக் கசக்க ஆரம்பித்திருக்கின்றன.

டேவிட் பேட்ரிக்கரகோஸ் ‘140 எழுத்துக்களில் போர் குறித்த சித்தரிப்பு...’ என்ற புத்தகம் எழுதி இருக்கிறார். ‘ஹோமோ டிஜிட்டலிஸ்’ என்று ஒரு தனி இனமே உருவாகி, எழுச்சி கொண்டிருப்பதாக அதில் அதிசயித்துப்போயிருக்கிறார். ‘ஹோமோ டிஜிட்டலிஸ்’ என்பது தனிநபரைக் குறிக்கும் புதுச்சொல்; ஸ்மார்ட் போன்தான் அவர்களின் ஆயுதம். பாலஸ்தீனத்தின் காசாவைச் சேர்ந்த 16 வயது இளம் பெண் ஃபாரா பேக்கரை இந்தப் புத்தகத்தில் உதாரணமாகக் காட்டுகிறார் டேவிட். 2014ல் காசாமீது தினமும் குண்டுவீசப்பட்டதை நேரடிக் களச்செய்திகளாக தினமும் தனது ட்விட்டரில் வெளியிட்டு, சர்வதேசக் கவனத்தை ஈர்த்தார் ஃபாரா. அவரைப் ‘பின்தொடர்பவர்’களின் எண்ணிக்கை லட்சக்கணக்கில் அதிகரித்தது. இதன் மூலம் சர்வவல்லமை மிக்க இஸ்ரேல் கண்ணிலேயே ஃபாரா எப்படி விரலை விட்டு ஆட்டினார் என்பதைப் பற்றி டேவிட் எழுதியிருக்கிறார். இதேபோல், எகிப்தின் இளைஞர்கள் ஃபேஸ்புக்கைப் பயன்படுத்தி முபாரக்கின் அரசையே அகற்றினார்கள். இப்படிப் பல உதாரணங்கள்!

சமூக ஊடகங்களின் வரவால் இணையத்தின் அதிகாரம் பரவலாக்கப்பட்டிருக்கிறது. முன்பெல்லாம் தகவல் என்பது மேலிருந்து வழங்கப்பட்டுக் கீழே மக்களை நோக்கி வரும்; அதாவது, தகவல் என்பது அரசாங்கம் வழங்குவதாகவோ செய்தி நிறுவனங்கள் வழங்குவதாகவோ இருக்கும். இப்போதோ, மக்கள் கூட்டமே தங்களுக்குள்ளேயே செய்திகளைப் பரிமாறிக்கொள்ள முடிகிறது. ‘தொழில்நுட்பப் பொன்னுலம்’ என்ற நம்பிக்கை அதன்மூலம்தான் உருவானது.

அந்த நம்பிக்கையைத்தான் தற்போது கேம்பிரிட்ஜ் அனலிட்டிக்கா சுக்குநூறாக ஆக்கியிருக்கிறது. சமூகத்தில் அதிகாரத்தின் உச்சத்தில் இருப்பவர்கள் அதிகாரத்தை மறுபடியும் மையத்தில்குவிக்கும்செயலில் ஈடுபட்டிருக்கிற்ார்கள் என்றுதான் இதைப் புரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. சமூக ஊடகங்கள் தனிநபர்களுக்கு அதிகாரம் அளிப்பதை அவர்கள் பார்த்தார்கள்; ஆகவே, அந்த ஆயுதங்களைத் திருடி தங்கள் சுயநலத்துக்காகப் பயன்படுத்திக்கொள்ளும் வேலையில் இறங்கிவிட்டார்கள். “டிஜிட்டல் ரீதியாகச் சொல்வதென்றால் 21ம் நூற்றாண்டு என்பது சுதந்திரச் சிந்தனை உள்ளவர்களுக்குக் கேடானது” என்கிறார் டேவிட் பேட்ரிக்கரகோஸ்.

இணையத்தில் நாம் விட்டுச் செல்லும் கால்தடங்கள் ஏராளமான விஷயங்களைச் சொல்லக் கூடியவை. ஃபேஸ்புக்கில் நீங்கள் போடும் ‘லைக்’குகளைப் பார்த்தே உங்களைப் பற்றித் துல்லியமாக மதிப்பிட முடியும். உங்களின் 10 ‘லைக்’குகளைப் பார்த்தால் போதும், உங்கள் சக ஊழியர்களுக்கு உங்களைப் பற்றி என்ன தெரியுமோ... அதைவிட அதிகமாக உங்களைப் பற்றி ஒரு கணினி அறிந்துகொண்டுவிடும். உங்கள் பெற்றோர் உங்களைப் பற்றி அறிந்து வைத்திருப்பதைவிட அதிகமாக ஒரு

> **ஃபேஸ்புக்கில் நீங்கள் போடும் ‘லைக்’குகளைப் பார்த்தே உங்களைப் பற்றித் துல்லியமாக மதிப்பிட முடியும். உங்களின் 10 ‘லைக்’குகளைப் பார்த்தால் போதும், உங்கள் சக ஊழியர்களுக்கு உங்களைப் பற்றி என்ன தெரியுமோ... அதைவிட அதிகமாக உங்களைப் பற்றி ஒரு கணினி அறிந்துகொண்டுவிடும்.**

கணினி உங்களைப் பற்றி அறிந்துகொள்வதற்கு உங்களின் 150 ‘லைக்’குகள் போதும், இதுவே 300 லைக் என்றால் உங்கள் மனைவியைவிட அதிகமாக உங்களைப் பற்றி யாரோ, எங்கேயோ உட்கார்ந்து தெரிந்துகொண்டுவிட முடியும். கேம்பிரிட்ஜ் அனலிட்டிக்காவுக்கு ட்ரம்ப்பும், அவரைப் பேரல பலரும் பெருந்தொகையை ஏன் கொடுத்தார்கள், கொடுக்கிறார்கள் என்பது இப்போது புரிகிறதா?

‘ஈரானின் வலைப் பிதாமகன்’ என்று அழைக்கப்படுபவர் ஹொஸைன் தரக்ஷான்... அவரை சமீபத்தில் சந்தித்தேன். அவரது இணையச் செயல்பாடுகளால் ஆறு ஆண்டுகள் சிறையில் இருந்தார். “ஒருவரது செயல்பாடுகளையும் எதிர்வினைகளையும் பற்றி உங்களால் கணிக்க முடியும் என்றால் அவர்களை எளிதில் நீங்கள் உங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள முடியும்” என்று விளக்கமாகச்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...



# செல்ஃபி: சுய(ம்) நலமா?

ஒரு நல்ல போட்டோவுக்காக நீங்கள் என்ன விலை தருவீர்கள்? இன்றைய இளைஞர்கள் தங்கள் வாழ்க்கையின் அதிகபட்ச விலையை, அதாவது உயிரையே தருகிறார்கள். சுற்றுலாத் தலங்களில் சமீபகாலமாகக் காவல்துறைக்குப் பெரும் தலைவலியாக இருப்பது செல்ஃபி மரணங்கள்தாம். ஒரு நல்ல செல்ஃபி எடுத்து, தனது ஃபேஸ்புக்கிலோ இன்ஸ்டாகிராமிலோ பகிர்ந்து சில லைக்குகள் வாங்கும் ஆர்வத்தில் அல்லது, வெறியில் மதியிழந்து இவர்கள் மரணமடைகிறார்கள். சமீபத்திய ஆண்டுகளில் செல்ஃபி மோகம் காரணமாக இத்தகைய பலிகள் அதிகரித்து வருவதைப் புள்ளிவிவரங்கள் உறுதிப்படுத்துகின்றன.

ஒரு பக்கம் மரணம் பயமுறுத்துகிறது என்றால், உளவியல் ஆய்வாளர்களோ செல்ஃபி வெறியால் நார்சிஸம் (சுயமோகம்), சைக்கோபாத் (ஆளுமைக் கோளாறு) போன்ற மனநோய்கள் அதிகமாகி வருவதாகக் கவலையுடன் குறிப்பிடுகிறார்கள். குறிப்பாகப் பதின் வயது இளைஞர்கள் தங்கள் படங்கள் சமூக ஊடகங்களில் ஏற்படுத்தும் வினைகள், எதிர்வினைகளால் மன உளைச்சலுக்கு ஆளாவதும் அதிகரித்துள்ளது.

**உளவியல் காரணம் என்ன?**

அமெரிக்காவில் ஒரு வகுப்பறையில் ஆசிரியரும் ஒரே ஒரு மாணவரும் மட்டும் இருந்தார்கள். அந்த ஆசிரியர் கர்ப்பமாக இருந்தார். திடீரென்று அந்த ஆசிரியருக்குப் பிரசவ வலி வந்துவிட்டது. வலியால் துடித்துக்கொண்டிருந்தார். உடனே அங்கே இருந்த மாணவன் செய்த முதல் காரியம் செல்ஃபி எடுத்துச் சமூக ஊடகங்களில் பகிர்ந்ததுதான்!

இந்தச் செய்தியை மறுநாள் பிரசுரித்த பத்திரிகைகள் ஆங்கிலத்தில் 'செல்ஃபி'ஷ்' (சுயநல செல்ஃபி) எனத் தலைப்பிட்டிருந்தன. ஒருவர் பிரசவ வலியில் துடித்துக்கொண்டிருந்தபோது, அதை செல்ஃபி எடுத்த அந்த மாணவனின் மனநிலை என்ன? அவன் ஏன் அப்படிச் செய்தான்? உளவியல்ரீதியாக இதற்குக் காரணம் இருக்கிறது.

பதின் வயது என்பது ஒருவருக்குச் சுய அடையாளத்தை உருவாக்கும் பருவம். நான் யார், இந்த உலகில் என் அடையாளம் என்ன என்று மனது சிந்திக்கத் தொடங்கும். அது மட்டுமல்ல. பதின் பருவம் என்பது தன் இணையைத் தேடும் பருவமும்கூட. தன்னைச் சுற்றி உள்ளவர்கள் மத்தியில், இந்த இரு காரணங்களுக்காக எதையாவது செய்து தம் இருப்பைப் பதின் வயதினர் உறுதிசெய்வது வழக்கம்.

**படமாகவே காட்டும் ஆர்வம்**

ஒரு நிகழ்ச்சி நடக்கும்போது தன் இருப்பை உணர்த்துவது, அதாவது, 'ஏய்ஞ் நான் அங்கேதான் இருந்தேன்!' என்று சொல்ல முனைவதுதான் செல்ஃபி மோகத்துக்கு அடிப்படை. அநாவசியத் தகவல் நிறைந்திருக்கும் இந்தக் காலத்தில், தான் ஒரு தகவலைப் பற்றித் தெரிந்து வைத்திருக்கிறேன் என்பது மட்டுமல்ல, 'நான் அந்த இடத்திலேயே இருந்தேன்' என்று செல்ஃபி நிரூபிப்பதால், கூடுதலாகத் தன் மீது மற்றவர்களின் கவனத்தைக் குவிக்க முடியும் என்று நினைக்கிறார்கள்.

ஒரு இடத்தில் பேருந்து பள்ளத்தில் விழுகிறது, அதை செல்ஃபி எடுத்துச் சமூக ஊடகங்களில் பகிர்ந்தால் மற்றவர்களின் கவனம் தன் மீது திரும்பும் என்ற ஒரு அற்ப மகிழ்ச்சி. இது போன்ற பல உதாரணங்களை அடுக்கிக்கொண்டே போகலாம்.

**காட்சிப் பொருளா நாம்..?**

அடுத்து, செல்ஃபி எடுத்துக்கொள்வதற்கு இன்னொரு முக்கியக் காரணம், 'என்னை இப்படி ஏற்றுக்கொள்வாயா?' என்று பிறரின் அங்கீகாரத்துக்காக ஏங்குகிற மனநிலை. இது மற்றவர்கள் முன் நம்மைக் காட்சிப் பொருளாக்கும் மனநிலை. இது ஒருவரின் சுயகவுரவத்தைக் கூட்ட மேற்கொள்ளும் நடவடிக்கை. அழகான இடத்திலோ ஒரு பிரபலத்துடனோ செல்ஃபி எடுத்து மற்றவர்கள் முன் தன்னைக் காட்சிப் பொருளாகப் பகிர்வது. அது பெறும் 'லைக்'குகளைக் கொண்டு தன்னுடைய சுயகவுரவம் அதிகரித்துவிட்டதாக நம்பிக்கொள்வது.

அப்படி மற்றவர்கள் 'லைக்' செய்யவில்லை என்றால், மனச்சோர்வு கொள்கிறார்கள் இளைஞர்கள். இந்த செல்ஃபி மனச்சோர்வு என்பது இன்னொரு புதிய பிரச்சினை.

---

சொன்னார் அவர்.

கேம்பிரிட்ஜ் அனலிட்டிக்கா/ ஃபேஸ்புக் செயல்பாடுகள் இன்னும் எதையெல்லாம் 'உணர்த்துகின்றன? இண்யம் வருவதற்கு முன்பு செய்தி வழங்கும் முறை மேலிருந்து கீழாக என்று மட்டும் இருந்தது அல்லவா? அந்த நிலையை நோக்கி மறுபடியும் அழைத்துச்செல்லும் முயற்சி இது. இனி நடக்கப் போவதில் ஒரு வித்தியாசம் என்னவென்றால்... தகவலானது மேலிருந்து வழங்கப்பட்டாலும்... அது கீழிருந்து, அதாவது மக்களிடமிருந்தே உருவானதுபோல் ஒரு பிரமை இருக்கும். ஒரு தகவல், ஒரு கருத்து, ஒரு கோஷம் மக்களிடையே பரப்பப்பட்டு... அது மக்களின் குரல் என்றே தவறாகக் கருதப்பட்டு... காட்டுத்தீயாகப் பரவும். மேலிருந்து இந்தத் தகவலை உள்நோக்கத்துடன் பரப்பியவரின் தடமே எங்கும் இருக்காது.

கேம்பிரிட்ஜ் அனலிட்டிக்காவின் செயல் அதிகாரி ஒருவர் இப்படிக் கூறினார்: "இணையத்தின் ரத்த ஓட்டத்தில் நாங்கள் தகவலை சர்வ சாதாரணமாகக் கலந்து விடுவோம், அதற்குப் பிறகு அது பூதாகரமாக உருவெடுப்பதைப் பார்த்துக் கொண்டே இருப்போம்... அந்தத் தகவல் எங்கிருந்து புறப்பட்டது, யார் காரணம் என்பதையெல்லாம் கண்டுபிடிக்கவே முடியாது."

இந்த விஷயம் ஒரு அதிபரின் வெற்றியோடு, அரசியல் லாபத்தோடு முடிந்துவிடாது; இணையத்தில் நாம் வெளிப்படுத்தும் நம்பிக்கைகள், அச்சங்கள் போன்ற உணர்வுகளைப் பல்வேறு பெருநிறுவனங்களும் தங்களுடைய பொருட்களை நம்மிடம் விற்பதற்காகப் பயன்படுத்திக்கொண்டிருக்கின்றன. இதையும் கூடிய சீக்கிரம் நாம் தெரிந்துகொள்ளப்போகிறோம்.

அதிர்ச்சி மேல் அதிர்ச்சியாக வருவதற்கு முன்பு, நாம் செயலில் இறங்க வேண்டும். அரசு சிலக் கட்டுப்பாடுகளை விதிக்கலாம்; இணைய உலகில் ஏகாதிபத்தியம் செலுத்தும் தொழில்நுட்ப அரக்கர்களை முடக்குவதற்கு 'நம்பிக்கை இழப்பு' சட்டம் கொண்டுவரலாம். நான் சந்தித்த ஹொஸைன் தரக்ஷான் ஒரு யோசனையைச் சொல்கிறார்.

பல்வேறு வகையான அல்காரிதங்கள் கிடைக்கக் கூடிய ஒரு இணையச் சந்தையைத் திறக்க வேண்டும் என்று ஃபேஸ்புக் போன்ற நிறுவனங்களுக்கு நாம் நெருக்கடி கொடுத்து இணங்கச்செய்யலாம். அதாவது, ஒரு சமூக ஊடகத்தில் 'பிரபலம்' (ரீட்வீட்ஸ் போன்ற அடிப்படையில்), புதியது (லேட்டஸ்ட்) போன்ற தெரிவுகளை நாம் விரும்பவில்லையென்றால், வேறு வகையான மதிப்பீடுகளைக் கொண்டு இயங்கும் விதமான அல்காரிதத்தை நாம் தேர்ந்தெடுத்துக்கொள்ளும் நிலை வர வேண்டும்.

நடப்பவற்றைப் பார்த்துவிட்டு முழுவதுமாக நம்பிக்கை இழந்து போகவும் தேவையில்லை. ஏராளமான வெற்றிக் கதைகளும் இணைய உலகில் நிறையவே இருக்கின்றன. கூட்டுப் பங்களிப்பாக நடத்தப்படும் விக்கிப்பீடியா இதற்குச் சிறந்த உதாரணம். அவற்றின் முதலாளிகள் தங்கள் அலுவலகத்துக்கு 'ஸ்கேட்டிங்' பலகையில் வந்து நம்மைக் கவர்ந்தாலும் சரி... 'உங்களில் ஒருவன்' என்று ஏமாற்றும் டீஷர்ட்டை அணிந்திருந்தாலும் சரி! நாம் புரிந்துகொள்ள வேண்டியதெல்லாம் ஒன்றுதான்...

தொழில்நுட்ப நிறுவனங்கள் யாவும் பேராசை பிடித்தவை, அவற்றை நாம் கவனத்தோடு இருந்து அடக்கியே ஆக வேண்டும்.

8-ம் பக்க தொடர்ச்சி...

நினைக்கிறேன். இந்த உறவுகளின் மூலம் அந்த காதலர்களை பாதுகாக்கலாமென நம்புகிறேன்.

**தீபம்: ஆணவக்கொலை மற்றும் சாதி ஒடுக்குமுறைக்கு எதிராக தமிழகத்தில் அமைப்புரீதியான செயற்பாடு எந்தளவில் உள்ளது?**

**கௌசல்யா:** அமைப்புரீதியான செயற்பாடுகள் வலுவாகவே உள்ளன. ஆணவப்படுகொலைக்கு எதிரான தனிச்சட்டம் ஒன்று அவசியமென பலமான குரல்கள் இருக்கின்றன. அதற்கான முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. தனிச் சட்டம் உருவானால் ஆணவப்படு கொலைகளை கட்டுப்படுத்தலாமென நம்புகிறோம்.

**தீபம்: திடீரென இலங்கை வந்திருக்கிறீர்கள். என்ன காரணம்?**

**கௌசல்யா:** இங்கிருக்கின்ற நிலைமையை நேரில் பார்த்து, அறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆர்வம்தான் காரணம். எனது வயது காரணமாக இங்கு நடந்த பிரச்சனைகள் அவ்வளவாக எனக்கு தெரியாது. பிரபாகரன் என்ற ஒருவர் இருந்தார், மக்களுடன் கண்ணியமாக நடந்தார், பல விசயங்களை ஒருங்கிணைத்து பிரமாண்டமான இயக்கத்தை கட்டியெழுப்பினார், பொது நிர்வாகத்தை நடத்தினார் என்ற பிரமிப்பு எனக்கிருந்தது. தமிழ்நாட்டில் சாதாரண நிர்வாக செயற்பாட்டிலேயே தடுமாறிக்கொண்டிருக்க, பிரபாகரன் எவ்வளவு சாதாரணமாக இவ்வளவு பெரிய கட்டமைப்பை உருவாக்கினார் என்றபோது, அந்த வரலாறுகளை தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆர்வம்தான் எங்களை இங்கு கொண்டுவந்து நிறுத்தியுள்ளது.

**தீபம்: இலங்கை தொடர்பாக செய்திகள் மூலம் ஏற்படுத்திக் கொண்ட மனப்பதிவிற்கும், நேரில் காணும் இலங்கைக்குமிடையில்**





**ஏதாவது வித்தியாசத்தை காண்கிறீர்களா?**

**கௌசல்யா :** ஒரு வீடியோ பார்த்தேன். இறுதியுத்தத்தில் சரணடைந்தவர்களை கண்களை கட்டி, வரிசையாக உட்கார வைத்து சுடுவார்கள். அந்த காட்சி மனத்தில் உள்ளது. இலங்கைக்கு வந்து ஒவ்வொரு வீதியைக்கடக்கும் போதும் அப்படியான காட்சிகள்தான் நினைவிற்கு வந்தபடியிருந்தது. நான் செய்திகள் மூலம் அறிந்த இலங்கைதான் என் மனக்கண்ணில் நிழலாடிக் கொண்டிருக்கிறது.

ஆனால், யுத்தம் நடந்ததற்கான எந்த அடையாளமும் இல்லை, மக்களிற்கு சிறு ஜனநாயக இடைவெளி கிடைத்திருக்கிறது என்றாலும், இன்னும் நிரந்தரமான தீர்வொன்று ஏற்படாதது கவலையளிக்கிறது.

**தீபம்: சாதாரண கௌசல்யாக இருந்த நீங்கள் சமூக அடக்குமுறைக்கு எதிராக போராடி, ஒரு தனி அடையாளமாக மாறியுள்ளீர்கள். சமூக போராளி கௌசல்யாவாக வாழ்வதில் எப்படியான சவால்களை சந்திக்கிறீர்கள்?**

**கௌசல்யா:** கௌசல்யா நான் எதை செய்தாலும் இது தவறானது, உன்னை யாரோ இயக்குகிறார்கள் என சொல்வார்கள். எனது குறைந்த வயது காரணமாக, வெறும் இரண்டு வருடத்தில் எப்படி இவ்வளவையும் கற்றுக்கொண்டேன் என்ற கேள்வியின் காரணமாக அப்படி சொல்லலாம். யாரும், எப்பொழுது வேண்டுமானாலும், எதை வேண்டுமானாலும் கற்கலாம். ஆனால் அவர்கள் நினைக்கிறார்கள் என்னை யாரோ இயக்குவதாக.

யாரோ இயக்க நான் என்ன இயந்திரமா? எனக்குள்ளும் உணர்வுகள், கோபங்கள் உள்ளன. அதைதான் போராட்டமாக முன்னெடுக்கிறேன். அதில் யாருக்கும் முரண்பாடு இருந்தால் விவாதிக்க தயாராக இருக்கிறேன். குற்றம் சொல்லி, ஆபாசமாக பேசி பெண்களை முடக்கிவிடலாம் என நினைக்கிறார்கள். அதையெல்லாம் உடைக்க வேண்டுமென நினைக்கிறேன்.

**தீபம்: ஈழத்திலுள்ள பெண்களிற்கு கௌசல்யாவின் செய்தி என்ன?**

**கௌசல்யா:** இவர்கள் எல்லோரும் தான் என் ரோல் மொடல். அங்கயற்கண்ணியை பற்றி நான் படித்திருக்கிறேன். அவரைப்பற்றி படிக்கும்போதெல்லாம் புது நம்பிக்கையும், புத்துணர்வும் ஏற்படும். எவ்வளவு விசயத்தை அவர்கள் செய்திருக்கிறார்கள்.

இப்பொழுதே இவ்வளவு ஒடுக்குமுறைகள் பெண்களிற்கு இருக்கிறதென்றால், முன்னர் இன்னும் அதிகமாக ஒடுக்குமுறைகள் இருந்திருக்கும். அப்பொழுதே அவர்கள் இதையெல்லாம் கடந்து செயற்பட்டிருக்கிறார்கள். இப்பொழுது உள்ள பெண்களும் அப்படியான செயற்பாட்டு வரலாற்றை கொண்டவர்களாகத்தான் இருப்பார்கள். இவர்கள் அனைவரும்தான் என்னுடைய ரோல்மொடல். அவர்களை முன்னிறுத்தி, அவர்களின் செயற்திட்டங்களைத்தான் நான் செயற்படுத்திக் கொண்டிருக்கிறேன். ●

---

11-ம் பக்க தொடர்ச்சி...

டீயில் பொலோனியம் 210 என்ற கதிரியக்க ரசாயனத்தைக் கலந்தனர். இந்த ரசாயனத்தால் உடனே மரணம் வராது. உடல் நலக் குறைவால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட லிட், ஒரு வாரம் கழித்து இறந்தார். ரஷ்ய அதிபர் புதினுக்கு எதிராகப் பேசி வந்ததால், இந்தத் தாக்குதல் நடந்ததாகக் கூறப்படுகிறது. சாகும் தருவாயில் பேசிய லிட், என்னை நீங்கள் கொலை செய்து எனது குரலை அடக்கலாம். ஆனால் உலகம் முழுவதும் உங்களுக்கு எதிராக எழும் குரல்கள் நீங்கள் சாகும் வரை உங்கள் காதில் ஒலித்துக் கொண்டே இருக்கும் என்றார். இதையும் வழக்கம் போல் மறுத்தது ரஷ்யா.

இந்நிலையில்தான் அதிரடியாக ரஷ்ய டிவிக்களில் யூலியா பேசும் ஒரு ஒலி நாடா ஒளிபரப்பானது. அதில், தான் நலமுடன் இருப்பதாகவும் தந்தையின் உடல் நலம் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார். இது பிரிட்டனுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இருவரும் தங்கள் பாதுகாப்பில் இருக்கும்போது, எப்படி இந்த பேட்டி எடுக்கப்பட்டது என விசாரணை மேற்கொண்டது. வேறு வழியில்லாமல் பிரிட்டனும் யூலியா மற்றும் ஸ்கிரிபாலின் உடல்நிலை குறித்த மருத்துவ அறிக்கையை வெளியிட்டுள்ளது.

### மெல்லக் கொல்லும் விஷ வாயுக்கள்

கடந்த 1971 முதல் 1993 வரை ரஷ்ய விஞ்ஞானிகள் தயாரித்த கொடிய



விஷவாயுக்கள் நோவிசோக் என அழைக்கப்படுகின்றன. ஏற்கனவே புழக்கத்தில் இருந்த விஎக்ஸ், சோமன் போன்ற விஷவாயுக்களை விட பல மடங்கு வீரிய விஷத்தன்மை கொண்டவை. பிரிட்டனில் ஸ்கிரிபால், யூலியா மீது நடந்த தாக்குதலில் இந்த விஷவாயுதான் பயன்பட்டிருப்பதாக இங்கிலாந்து அதிகாரிகள் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

நேட்டோ நாடுகளில் விஷவாயுக்களைக் கண்டுபிடிக்கப் பயன்படுத்தப்பட்ட கருவிகளின் மூலம் இதைக் கண்டறிய முடியாது. மேலும் நேட்டோ நாடுகளின் விஷவாயு தடுப்பு முகமூடிகளை அணிந்திருந்தாலும் அதையும் தாண்டி ஊடுருவி தாக்கிக் கொல்லக் கூடியவை இந்த விஷவாயுக்கள். பயன்படுத்துவதற்கும் எளிதானவை என்பதால் இவை மிகவும் பிரபலம். இவை உடனே ஆளைக் கொல்வதில்லை. யாருக்கும் சந்தேகம் வராத வகையில் வீட்டில் கைப்பிடியில், தினமும் பயன்படுத்தும் டீ கோப்பையின் கைப்பிடியில், போன் ரிசீவரில் இந்த வாயுக்களை உமிழும் பொருட்கள் தேய்க்கப்படும். இதை சுவாசிக்கும்போது படிப்படியாக நரம்பு மண்டலம் பாதிக்கப்படும். சுவாச மண்டலம் பாதிக்கப்பட்டு 4 முதல் 6 வாரங்களில் மரணத்தை ஏற்படுத்தக் கூடியவை இந்த வாயுக்கள்.

### அழகிய உளவாளி அன்னா சாப்மேன்

ரஷ்யாவின் பெண் உளவாளிகளிலேயே மிகவும் அழகானவர் அன்னா வாசிலியேவ்னா சாப்மேன். சுருக்கமாக அன்னா. இவரின் தந்தை கேஜிபி உளவு அமைப்பில் அதிகாரி. மொஸ்கோ பல்கலை.யில் பொருளாதாரத்தில் முதுகலை பட்டம் பெற்றவர். சிறந்த ஆங்கிலப் புலமையுடன் மொடல் அழகியாகவும் இருந்திருக்கிறார். லண்டனில் நடந்த ஒரு பார்ட்டியில் அலெக்ஸ் சாப்மேன் என்பவரை சந்தித்தார். காதல் மலர்ந்தது. அவரை திருமணம் செய்து கொண்டார். அதன் மூலம் பிரிட்டன் குடியுரிமை கிடைத்தது. 2003, 2004ம் ஆண்டுகளில் நெட்ஜெட்ஸ், பார்க்கிளேஸ் போன்ற நிறுவனங்களில் பணியாற்றினார்.

அவர் 2009ல் நியூயோர்க்கில் குடியேறினார். பிராப்பர்ட்டி பைண்டர் என்ற நிறுவனத்தைத் தொடங்கினார். உண்மையில் அவர் செய்தது உளவுத் தொழில். அரசு அதிகாரிகளுடன் நெருங்கி பழகி, ராணுவ ரகசியங்களைப் பெற்று அவற்றை ரஷ்யாவுக்கு அளித்து வந்தார். 2010ல் உளவு பார்த்ததாகக் கைது செய்யப்பட்டு ரஷ்யாவுக்கு திருப்பி அனுப்பப்பட்டார். ரஷ்யா திரும்பிய அவர் டிவி ஷோ நடத்துகிறார். ●

# ஏற்றுமதித் தொழிலின் வெற்றி ரகசியம்!




ஏற்றுமதித் தொழிலுக்கான முக்கியமான ஆரம்பப் புள்ளியை இந்தப் பகுதியில் சொல்லப் போவதாகக் கடந்த இதழிலேயே கூறியிருந்தேன். அதைப்பற்றி இப்போது பார்ப்போம்.

ஏற்றுமதித் தொழில் பெரும்பாலானோருக்கு அறிமுகம் ஆகியிருந்தாலும், அதில் பல குழப்பங்கள் நீடிக்கவே செய்கின்றன. பலர் ஏதாவது ஒன்றை செய்து வருமானத்தைப் பெருக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் ஏற்றுமதித் தொழிலைத் தேர்ந்தெடுக்கிறார்கள். இப்படி நினைப்பதில் தவறில்லை. ஆனால், ஏற்றுமதித் தொழிலைப் பற்றி தெளிவான பார்வையும், அதுகுறித்த போதுமான அறிவும் இருந்தால்தான், அதில் ஜெயிக்க முடியும்.

ஏற்றுமதி/இறக்குமதித் தொழில் செய்வதற்கான ஆரம்பப் புள்ளி என்பது, ஐஇ கோட் வாங்குவதுதான் என்று நினைத்திருந்தால், அது தவறு. ஏற்றுமதி செய்வதற்கு ஐஇ கோட் அவசியம்தான். ஆனால், அதை வாங்கிவிட்டு ஏற்றுமதித் தொழிலைச் செய்வதற்கான எந்த முயற்சியையும் எடுக்காமல் ஆயிரக்கணக்கானோர் இருக்கிறார்கள். ஆகவே, ஐஇ கோட் மட்டும் வைத்திருப்ப தல்ல, ஏற்றுமதித் தொழிலுக்கான ஆரம்பப் புள்ளி. ஏற்றுமதித் தொழிலின் தொடக்கப் புள்ளி என்பது தொழிலை முடிவுசெய்வது. அதாவது, என்னென்ன பொருள்களை ஏற்றுமதி செய்யப்போகிறீர்கள் என்று முடிவு செய்வதுதான்.

அட, இவ்வளவுதானா... எனக் கேட்பதற்குச் சாதாரணமாக இருந்தாலும், ஏற்றுமதித் தொழிலின் ரகசியமே எந்தப் பொருள் என்று முடிவு செய்வதில் தான் இருக்கிறது. ஏற்றுமதித் தொழிலைப்பற்றி தெரிந்துகொள்ள வரும் பலரும், "இறக்குமதியாளர் (Buyer) குறித்த விவரங்களைத் தருவீர்களா?" என்ற கேள்வியைத்தான் முதலில் கேட்கிறார்கள். "உங்களிடம் என்ன பொருள் இருக்கிறது என்று சொல்லுங்கள்?" என்று கேட்டால், "என்ன பொருள் கேட்டாலும் தருவேன்" என்பார்கள். "என்ன பொருள் கேட்டாலும் தருவீர்கள் என்றால், உங்களுக்கு ஏன் இறக்குமதியாளர் கிடைக்க வில்லை?" என்று கேட்டால், அவர்களிடம் எந்தப் பதிலும் இருக்காது.

ஏற்றுமதித் தொழிலில் இருக்கும் எல்லோருக்கும் வரும் குழப்பம், முதலில் நாட்டைத் தேர்ந்தெடுப்பதா அல்லது பொருளைத் தேர்ந்தெடுப்பதா என்பதுதான். ஏற்றுமதித் தொழில் செய்ய வருபவர்கள் முதலில், தங்களிடம் என்ன பொருள் அல்லது சேவை இருக்கிறது என்று பார்க்க வேண்டும். முதலில், பொருளைத் தேர்ந்தெடுப்பதைக் காட்டிலும், எந்த நாட்டுக்கு என்ன பொருள் தேவைப்படுகிறது என்று ஒரு பட்டியல் போட்டு வைத்துக்கொண்டு, அதில் நாம் எந்தப் பொருள்களையெல்லாம் ஏற்றுமதி செய்ய முடியும் என்று பார்க்க வேண்டும்.

ஒரு நாடு மூன்று காரணங்களுக்காகப் பொருள்களை இறக்குமதி செய்யும். ஒன்று, பொருள் உற்பத்தி ஆகாமல் இருக்கும். இரண்டு, உற்பத்திச் செலவு அதிகமாக இருக்கும். மூன்று, அதற்கான தொழில்நுட்பம், மனிதவளம் போன்றவை இல்லாமல் இருக்கும். ஒரு பொருளை உற்பத்தி செய்ய தொழில்நுட்பம், மனித்வளம், மூலப்பொருள்கள் என அனைத்தும் தேவை. இவற்றில் ஏதோவொரு விஷயம் இல்லாவிட்டாலும், அங்கு உற்பத்தி என்பது சாத்தியமில்லை. அதனால்தான் ஒரு நாடு, தனக்குத் தேவையான பொருள்களை இன்னொருநாட்டிலிருந்து வாங்குகிறது.

இதேபோல், ஒரு பொருளை உற்பத்தி செய்யும் செலவு ஒவ்வொரு நாட்டுக்கும் வித்தியாசப்படுகிறது. எனவே, ஒரு பொருளை உற்பத்தி செய்வதைக் காட்டிலும் இன்னொரு நாட்டிலிருந்து வாங்கிவிடுவது மேல் என்றும் நினைக்கிறார்கள்.

அப்படி ஒவ்வொரு நாடும் பிற நாடுகளிலிருந்து வாங்க விரும்பும் பொருள்கள் என்னென்ன என்று பட்டியல் போட்டாலே நமக்கான பொருளை நாம் கண்டுபிடித்துவிட முடியும். பிறகு அந்தப் பொருள்களை எங்கு வாங்குவது என்று பார்க்க வேண்டும். எனவே, கையில் பொருள் எதுவும் இல்லாதவர்கள், முதலில் நாடுகளைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் பொருள்களைத் தீர்மானிக்க வேண்டும்.

நம் நாட்டிலிருந்து பிற நாடுகளுக்கு அதிகமாகத் துணி வகைகளும், தேயிலையும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. 'என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில்...' என்று நாம்பெருமிதப்பட்டுக்கொள்ளும் அதே நேரம், எண்ணெய் வளம் நம் நாட்டில் இல்லாததால் அதனைப் பெருமளவில் இறக்குமதி செய்கிறோம். எனவே, ஒரு நாட்டின் தேவை என்ன என்பதை அறிந்துவைத்திருந்தால் ஏற்றுமதியின் முதல்படியை வெற்றிகரமாகக் கடந்துவிடலாம்.

மேலும், நாம் தேர்ந்தெடுத்த ஒரு பொருள் பிறநாடுகளில் என்ன விலைக்கு விற்பனையாகிறது, அங்கு உற்பத்திச் செலவு என்ன, அதிலிருந்து நம்முடைய உற்பத்திச் செலவும், விலையும் எவ்வளவு வித்தியாசப்படுகிறது என்பதையெல்லாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். எந்த அளவுக்கு நம்மால் குறைவான விலையில் பொருளைத் தரமுடிகிறதோ, அதற்கேற்ப இறக்குமதியாளர்களை எளிதில் பிடித்துவிடலாம்.

மற்றொரு முக்கியமான விஷயம், ஏற்றுமதி என்று வந்துவிட்டால் பொருளைத்தான் ஏற்றுமதி செய்ய வேண்டும் என்பதில்லை. மாறாக, முதலீடு, சேவை போன்றவற்றையும் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்கு ஏற்றுமதி/இறக்குமதி செய்யலாம். இங்கிருந்து பொருள்களை ஏற்றுமதி செய்பவர்கள், ஏற்றுமதி மட்டுமே செய்வதில்லை. அவர்களே அந்த நாட்டில் முதலீடு செய்து ஒரு உற்பத்தி மையத்தையோ, ரீடெய்ல் கடையையோ வைத்து பிசினஸ் செய்கிறார்கள். அதேபோல், நம் நாட்டில் பிற நாட்டவர் வந்து முதலீடு செய்து, அவர்களுடைய பொருள்களை உற்பத்தி செய்து இங்கே விற்பதும் ஏற்றுமதி/இறக்குமதி வர்த்தகத்தில் அடங்கும்.

அதேபோல், உலக அளவில் வர்த்தகமாகும் சேவைகள் என்று கிட்டத்தட்ட 161 சேவைகள் அடையாளம் காணப்பட்டிருக்கின்றன. ஒரு கம்ப்யூட்டரும், கொஞ்சம் மூளையும் இருந்தாலே போதும்; வெப் டிசைன், புராடக்ட் டெவலப்மென்ட் டிசைன், லே அவுட் டிசைன் என்று பல விஷயுங்களை ஏற்றுமதி செய்து அசத்தலாம். எனவே, பொருள் மட்டுமின்றி, மனிதவளம், சேவை, முதலீடு என எதுவும் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்குப் போனாலும் அதுவும் சர்வதேச வர்த்தகம்தான்.

முன்பெல்லாம் பொருள்களை தேவையின்பேரில் மட்டுமே வாங்கி வந்ததன் மூலம் உலக வர்த்தகம் நடந்துகொண்டிருந்தது. ஆனால், வாங்குபவர்களே விற்பனையாளர்களாக இருக்கிறார்கள். அதேபோல், முன்பு ஓர்டர் கொடுத்து எத்தனை நாளில் பொருளைக் கொடுப்பீர்கள் என்று கேட்டார்கள். ஆனால், இப்போதெல்லாம் இன்று ஆர்டர் கொடுத்துவிட்டு, 'நாளைக்கு பொருள்களை டெலிவரி தர முடியுமா' என்று கேட்கிறார்கள்.


பெரும்பாலான இறக்குமதியாளர்கள், தங்களுக்குத் தேவைப்படும் நேரத்தில் பொருள்களைத் தந்தால் போதும் என்று நினைக்கிறார்கள். அவர்கள் பொருள்களை வாங்கிவைத்து காவல் காக்க விரும்புவதில்லை. குறித்த நேரத்தில் தர முடியுமா என்பதே அவர்களின் ஒரே கோரிக்கை.

ஏற்றுமதியாளர்களும் புத்திசாலித்தனமாக அந்த நாட்டிலேயே குடோன் ஒன்றை நிறுவி, இங்கிருந்து பொருள்களை அனுப்பி அங்கே வைத்திருந்து, வாங்குபவர் கேட்கும்போது உடனடியாகப் பொருள்களை டெலிவரி தந்துவிடுகிறார்கள்.

இப்படி ஏற்றுமதி பிஸ்னஸில் வாய்ப்புகள் கொட்டிக் கிடக்கின்றன. அதில் உங்களுக்கான பொருளை நீங்கள் தேர்வு செய்துவிட்டால் போதும், நிச்சயம் உங்களுக்கான இறக்குமதியாளர் உலகின் ஏதோ ஒரு நாட்டில் உங்களுக்காகவே காத்துக் கொண்டிருப்பார். தொடரும்...

# கால்விலங்குகள் போடும் கற்பனைக் குதிரைகள்

சாள்ஸ் ஜே போர்மன்




வாகனங்களை, அதன் வேகத்தை அதிகரிக்கச் செய்யப்பட்ட கண்டுபிடிப்புக்கள், வாகனங்களை இயக்குவதற்கான பெற்றோலியப் பொருட்களைப் பாவிப்பு, வாகனங்களை உடமைப்படுத்துதல் தனிமனித அடையாளமாகியது, வாகனங்களின் பல்வேறு தேவைகளுக்காக நிலங்களை ஆக்கிரமித்தது, அவைகளால் ஏற்பட்ட பொருளாதார, சமூக, தனி மனித முன்னேற்றங்கள் பற்றி நான் கடந்த ஏற்கனவே எழுதியிருக்கிறேன். சர்வதேசரீதியின் மனிதகுலத்தின் வாழ்க்கை வசதிகள் பொதுவாகவே உயர அவை உதவியதால் முன்னேற்றங்களின் மறுபக்கமான பல பாதிப்புக்களை எப்படி மனிதர்கள் கண்டும் அசட்டையாக இருந்தார்கள் என்பதையும் சுருக்கமாக எழுதி அப்பாதிப்புக்கள் சிலவற்றையும் குறிப்பிட்டிருந்தேன்.

இத் தொடரை நான் எழுத ஆரம்பித்ததன் நோக்கம் வாகனங்கள், முக்கியமாக தனியார் வாகனங்கள் எங்களது சமூகத் தர அடையாளமாகிதால், அக் கற்பனைக் குதிரை எங்கள் வாழ்வை நிர்ணயிக்க ஆரம்பித்து விட்டன, ஆனால், அவைகளின் கடிவாளங்களை நாங்கள் பலமாக இழுத்து வாகனங்கள் பற்றிய , எங்கள் கனவுகளை மாற்றிக் கொள்ள ஆரம்பிக்க வேண்டிய காலம் வந்திருப்பதைப் பற்றி விபரிப்பதற்காகவே.

நச்சுக் காற்றுக்களை வளிமண்டலத்தில் உமிழ்வதில் சர்வதேசரீதியில் பார்த்தால் போக்குவரத்துக்கள் நான்காவது இடத்தில் இருக்கின்றன. நாங்கள் சுவாசிக்கும் காற்றில் கலக்கப்படும் நச்சுக் காற்றுக்களில் 14 விகிதத்தை உலகின் சகலவிதமான போக்குவரத்துக்களும் சேர்ந்து உண்டாக்குகின்றன.

பிராந்திய ரீதியாகக் கவனித்தால் அவைகளின் விகிதம் வெவ்வேறாக இருக்கும். முக்கியமாக நகரங்களில், மக்கள் செறிவாக வாழும் இடங்களில் இதன் விகிதம் மிகவும் அதிகம். அது நாளின் வெவ்வேறு நேரங்களில் போக்குவரத்தின் அளவுக்கேற்றபடி வித்தியாசப்படுகிறது. அதிக போக்குவரத்து வழமையாக இருக்கும் சமயங்களில் அதன் விகிதம் மிக அதிகமாகி சுற்றுப்புறத்தில் வாழும் மக்களின் ஆரோக்கியத்துக்கு மிகவும் கேடாக அமைகிறது. இவற்றில் முக்கிய பங்குவகிப்பவை தனியார் வாகனங்கள்தான் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

பாரிய வாகனங்களினால் பாதிப்புக்கள் இல்லாமலில்லை. அவை பற்றி வேறுவிதமாகக் கவனிக்க வேண்டும், காரணம் அவைகள் சமூகத்தின் வெவ்வேறு தேவைகளுக்காகப் பாவிக்கப்படுகின்றன் என்பதால் அவற்றை வேறுவழியில் கவனிக்க வேண்டும். அதற்காகவும் பல நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அந்த நடவடிக்கைகளை நான் வேறொரு பகுதியில் எழுதுவேன்.

தனியார் வாகனங்கள் உமிழும் நச்சுக்காற்று மட்டுமல்ல, அவை வீதிகளில் ஓடும்போது பெற்றோலியப் பொருட்களால் போடப்பட்டிருக்கும் வீதியில் கிளறப்படும் நச்சுக்காற்றும், அதன் ரப்பர் சக்கரங்கள் தேய்வதால் உண்டாகும் நச்சுக்காற்றும் என்று நகரவாசிகளின் சூழலைக் கவனிக்க வேண்டும்.

இதன் காரணம் தனியார் வாகனங்களா அல்லது அவைகளின் பாவிப்புக்கு மனிதர்களை அடிமையாக்கிய வாழ்க்கை தரமா என்று பல கோணங்களில் இக் கேள்வியை ஆராயலாம். மோட்டார் வாகனங்கள் பாவனைக்கு வர முதல் இருந்த ஒவ்வொரு மாட்டு வண்டிக்கும் அல்லது குதிரை வண்டிகளுக்கும் பதிலாக பத்து மோட்டார் வாகனங்களை நகருக்குள் பாவிக்கும் விதமாக நகரங்கள் அமைப்பட்டப்பமை தவறு என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். பத்துக்குதிரை வண்டிகளுக்குப் பதிலாக ஒரு வாகனம் பயன்படுத்தப்படக் கூடியதான நகர அமைப்புக்களை அமைத்து நிர்வகித்திருக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டுகிறார்கள் அவர்கள். தனி மனிதர்களைப் பொறுத்தவரை சொந்தமாக வாகனம் வைத்திருப்பது என்பது ஒரு சமூக அந்தஸ்தாகி அவ் வாகனத்தை சுற்றி அவர்கள் தமது வாழ்க்கையை அமைத்துக் கொண்டார்கள். அதுவே நாளடைவில் அவர்களது தினசரி வாழ்க்கையைக் கட்டுப்படுத்தி, நிர்வகிக்கிறது என்றால் மிகையல்ல.

குடும்பத்துடன் வாழும் ஒரு சாதாரண நகரவாசி குடும்பத்தினரின் வாழ்க்கையைக் கவனியுங்கள்!

காலையில் அவர்கள் தூக்கத்திலிருந்து எழும்பும் நேரத்தை நிச்சயிப்பதே அத்தினத்தில் அவர்களுடைய போக்குவரத்து வசதிகளின்படி குறிப்பிட்ட நேரத்தில்வேலைத்தளத்தை அடைவதற்காக எந்த நிமிடத்தில் அவ்வாகனத்தை வீட்டுக்கருகிலிருந்து எடுக்க வேண்டும் என்பதாகத்தான் இருக்கும். அதற்கேற்ப பிள்ளைகளைத் தூக்கத்திலிருந்து எழுப்பித் தயாராக்குகிறார்கள் பெற்றோர்கள்.

பிள்ளைகளின் பாடசாலைத் தெரிவு, வசிக்கும் இடத்தெரிவு எல்லாமே கூட அனேகமாக போக்குவரத்து வசதிகள் எப்படி குறிப்பிட்ட குடும்பத்துக்குப் பொருந்தும் என்ற முடிவில் முக்கிய இடத்தைப் பெறுகிறது. குடும்பத்தினர் அன்றைய நாளில் வீட்டுக்குத் திரும்பி வருவதிலும் போக்குவரத்து எத்தனை ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது என்பதை நான் தனியாகச் சொல்லத் தேவையில்லை.

குறிப்பிட்ட நேரத்தில் சொந்த வாகனமோ அல்லது பொதுப்போக்குவரத்து வசதியோ, எதை அக் குடும்பத்தின் அங்கத்தவர்கள் பாவித்தாலும் அது குறிப்பிட்ட உறுப்பினரின் நாளை நிச்சயமாகப் பாதிக்கிறது. அதாவது அவ்வாகனம் போகும் வீதியில் நெருக்கம், சாலை விபத்து போன்று எது நிகழ்ந்தாலும் அது அந்தக் குடும்ப உறுப்பினரைப் பாதித்து அதன்மூலம் மற்றைய குடும்ப உறுப்பினரின் நாளில் மாற்றங்களை ஏற்படுத்துகிறது.

மேற்கண்ட சிறிய உதாரணம் மூலம் நான் சொல்ல வருவதை மாற்றி அக் குடும்பத்தினரின் பொருளாதார வசதியை உயர்த்தினாலும்கூட அவர்களது தினசரியில் போக்குவரத்து பெறும் முக்கிய இடத்தை மாற்ற முடியாது என்பதே உண்மை.

தனி மனிதர்களின் நிலைமை இன்று இப்படியிருக்கும்போது நான் ஏற்கனவே குறிப்பிட்ட சுற்றுப்புற சூழல் பற்றிய காரணிகள் காரணமாக சர்வதேச மட்டத்தில் போக்குவரத்து மற்றும் வாகனங்கள் பற்றிய மாற்றுநோக்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இரண்டு வெவ்வேறு விதமான காரணிகள் இக்காலகட்டத்தில் ஒரே இடத்தில் சந்திப்பதன் மூலம் எடுக்கப்படும் நடவடிக்கைகள் வாகனங்களை உரிமையாக்குதல், பாவித்தல் பற்றிய எங்கள் வழக்கங்களை படிப்படியாக மாற்றப் போகின்றன.

அன்று வாகனங்கள் அறிமுகப் படுத்தப்பட்டபோது எப்படி அன்றைய சமயத்திற்குப் புதிய தொழில்நுட்பங்கள் பல பாவனைக்கு வந்தனவோ மாறிக்கொண்டிருக்கும் இப்போதைய புதிய நோக்குகளுக்கு அடித்தளம் இடுபவை புதிய தொழில்நுட்பங்கள்தான். தொலைத் தொடர்புப் போக்குவரத்துக்களை எங்கள் விரல் நுனிகளுக்குக் கொண்டு வந்திருக்கும் டிஜிடல் தொழில்நுட்பம்தான்.

ஒருகாலத்தில் உலகின் ஒரு குறிப்பிட்ட புள்ளியில் இருக்கும் நபர் இன்னொரு புள்ளியில் இருக்கும் நபரிடம் தொடர்புகொள்ள வேண்டுமானால் அவர்களுக்கிடையே இருந்த இடைவெளி புவியியல் சம்பந்தமானதாக இருந்தது. அது நீண்ட நேரத்தை விழுங்கியது. ஆனால், 21ம் நூற்றாண்டில் வெகுவேகமாகப் பரவிக்கொண்டிருக்கும் டிஜிடல் தொலைத்தொடர்பும் அத் தொடர்புகளுக்காகப் பாவிக்கக் கிடைக்கும் புதிய சக்தியான சூரியசக்தி போன்றவையும் சேர்ந்து அந்த இரு புள்ளிகளுக்கும் இடையிலான இடைவெளியையும், நேரத்தையும் அழித்து விட்டன.


மனிதர்களுக்கு இடையிலான இடைவெளி குறைந்திருப்பதால் வெவ்வேறு பிராந்தியங்களில் இருக்கும் மனிதர்களிடையே ஏற்பட்டிருக்கும் தொடர்புகள் பல புதிய, வித்தியாசமான எண்ணங்களைத் தோற்றுவித்திருக்கிறது. அப்படியான எண்ணங்களால் பிறந்திருக்கும் திட்டங்களும் வாகனங்கள், போக்குவரத்து பற்றிய புதிய தீர்வுகளுக்கு உதவி வருகின்றன.

இன்னொரு பக்கத்தில் ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா போன்ற முக்கிய அதிகார மையங்கள் வாகனத் தயாரிப்பாளர்கள் மீது புதிய கட்டுப்பாடுகளைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதனால் உலகின் முக்கிய வாகனத் தயாரிப்பாளர்கள் எல்லோருமே எதிர்காலத்திற்கான வாகனத் தொழில்நுட்பத்தில் புதிய குறிக்கோள்களைக் கொண்டிருக்கிறார்கள்.

பெற்றோலியச் சக்திகளில் இயங்கும் வாகனங்களின் எதிர்காலம் இருட்டாக இருப்பதைப் புரிந்துகொண்ட தயாரிப்பு நிறுவனங்கள் வளர்ந்த நாடுகளும், உலகின் முக்கிய நகரங்களும் வாகனங்களுக்குக் கொண்டு வந்து கொண்டிருக்கும் கட்டுப்பாடுகளையும் புரிந்து கொண்டிருக்கின்றன. எனவே தனியார்கள் சொந்தமாக்குவதற்காக அதிக எண்ணிக்கையில் வாகனங்களைத் தயாரித்து விற்பது எதிர்காலத்தில் ஒரு இலாபம் தரும் தொழிலாக இருக்காது என்பதையும் புரிந்து கொண்டிருக்கின்றன. அதனால் அந்த நிறுவனங்கள் மாற்றுச் சக்திகளில் இயங்கும் வாகனங்களைத் தயாரிப்பதிலும் அவைகளுக்கான கலங்களை உருவாக்குவதிலும் இறங்கியிருக்கும் அதேசமயம் அடுத்த தலைமுறை நகரங்களுக்கான போக்குவரத்துத் திட்டங்களுக்கான ஆராய்ச்சிகளில் பெரும் முதலீடுகளையும் செய்து வருகிறார்கள்.

அடுத்த பகுதியிலிருந்து நான் எதிர்கால நகரங்களை அமைக்கும் திட்டத்திலிருக்கும் சில நகரங்களையும் அவைகளை அவர்கள் எப்படித் திட்டமிட்டு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும், தனியார்களைப் பொறுத்தவரை புதிய போக்குவரத்து வசதிகளில் ஏற்பட்டிருக்கும் வித்தியாசமான எண்ணங்களையும், ருசிமாற்றங்களையும் பற்றி எழுதுவேன்.

தொடரும்...




# நக்பா தினம் வரை காஸா எல்லையில் போராட்டம்

தேசமித்திரன்

வழக்கமாக பாலஸ்தினாவில் முக்கியமாக எது நடந்தாலும் அது உலக ஊடகங்களில் அதி முக்கியத்துவம் பெறும். ஆனால், பாலஸ்தீனத்தின் ஒரு பகுதியான காஸா பிராந்தியத்தில் நடந்து வரும் (Great March of Return) "திரும்பிப் போவதற்கான பேரணி" பற்றிய செய்தி விபரங்கள் அதே இடத்தைப் பெறவில்லை. பெரும்பாலான ஊடகங்கள் அது பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிட்டுவிட்டுக் கடந்து போயின. குறிப்பிட்ட ஒரு சாரார் மட்டும் 30.03 இல் ஆரம்பித்து நக்பா [15.05]தினம்வரை நடக்கப் போவதாக அறிவிக்கப்பட்டு, நடந்து கொண்டிருக்கும் அப் போராட்டத்தில் இதுவரை சுமார் 20 பேர் கொல்லப்பட்டிருக்கும் அதைப் பற்றி விபரமாகத் தொடர்ந்து வெளியிட்டுக் கொண்டிருக்கின்றன.

ஊடகங்களின் இந்த மாற்றத்துக்கு முக்கிய காரணிகளில் ஒன்றாக, இதே சமயத்தில் நடந்து கொண்டிருக்கும் சிரியா சம்பந்தமான ரஷ்ய அமெரிக்க இழுபறி, கொலை முயற்சிக்கு உட்படுத்தப்பட்ட ஒற்றன் சம்பந்தமாக ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான முரண்பாடுகள், அமெரிக்க சீன வர்த்தகப் போர், தனியாரின் விபரங்களை பாதுகாக்காத பேஸ்புக்கின் மீதான குற்றச்சாட்டுக்கள் போன்றவை சர்வதேசக் கவனத்தை ஆக்கிரமித்திருப்பதைக் கூறலாம். ஆனால் அவற்றைத் தவிர வேறொரு காரணமும் உண்டு. அது மத்திய கிழக்கு அரசியலில் ஏற்பட்டிருக்கும் பிளவு ஆகும். சுமார் ஒரு வருடத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் சவூதிஅரேபியா கத்தார் பிளவு மத்திய கிழக்கின் பல அரசியல்விடயங்களில்எதிரொலிப்பது போலவே பாலஸ்தீனர்கள் விடயத்திலும் எதிரொலிக்கிறது.

பாலஸ்தீனருக்கான நிலமும் அதிகாரமும் ஓரளவு கொடுக்கப்பட்ட நாளிலிருந்தே பாலஸ்தீன அரசியலில் ஒரு பிளவு இருக்கிறது. பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் அரசியல் பிரிவான அல்பத்தா ஹமாஸ் விடுதலை இயக்கம் என்று இரண்டு பகுதியினர் பாலஸ்தீனர்களின் மேல் அதிகாரம் செலுத்துவதில் முட்டிக் கொள்கிறார்கள். அவர்களில் அல் பத்தா கட்சியினர் பாலஸ்தீனத்தின் பெரும்பகுதியை தேர்தலில் கைப்பற்ற காஸா பகுதியை ஹமாஸ் விடுதலை இயக்கத்தினர் தேர்தலில் கைப்பற்றி ஆண்டு வருகிறார்கள். அல் பத்தா இயக்கத்தினர் இஸ்ராயேலுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு சர்வதேசத்துடனும் ஓரளவும் நட்பாக நடந்துகொள்ள, ஹமாஸ் விடுதலை இயக்கத்தினரோ இஸ்ராயேலை ஒரு நாடாக அங்கீகரிக்க நீண்டகாலமாக மறுத்துத் தீவிரவாத செயல்களில் ஈடுபட்டு அதனால் சர்வதேசத்துடன் பகையாகவே நடந்து வருகிறார்கள்.

இந்த நிலைமையில் மத்திய கிழக்கு நாடுகளிடையே சுமார் ஒரு வருடத்துக்கு முன்பு உண்டாகிய பிளவின் அடிப்படையில் பாலஸ்தீன அல்பத்தாவின் பக்கத்தில் சவூதி மற்றும் பெரும்பாலான எண்ணெய் வள நாடுகள் நிற்கின்றன. உலக அரசியல் அளவில் பெரும்பாலான மேற்கு நாடுகளும் நடந்து கொண்டிருக்கும் பேரணிக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க விரும்பவில்லை. கத்தார் நீண்ட காலமாக ஹமாஸ் இயக்கத்துக்கு முக்கிய உதவிகள் செய்துவந்த நாடு. அமெரிக்கா அவர்களை மேலும் உதவிகள் செய்யவிடாமல் துண்டித்துவிட்டதால் ஹமாஸ் இப்போது சர்வதேசரீதியில் புறக்கணிக்கப்பட்டு வருகிறது. அதேபோலவே நடந்து கொண்டிருக்கும் பேரணியில் ஹமாஸ் மும்முரமாக இயங்க ஆரம்பித்திருப்பதால் ஹமாஸின் பக்கம் ஓரளவு சார்பாக இருக்கும் நாடுகளின் ஊடகங்கள் மட்டுமே அச்செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்றன.

"திரும்பிப் போவதற்கான பேரணி" காஸாவில்வாழும்பத்திரிகையாளரான அஹ்மத் அபு அர்தேமா என்பவரால் பேஸ்புக்கில் ஆரம்பிக்கப்பட்டது. "எங்களிடமிருந்து களவெடுக்கப்பட்ட நிலப்பரப்பின் அழகையும், செழிப்பையும் கண்ட நான், எதற்காக நாம் இந்த காஸா சிறைக்குள் மாட்டுப் பட்டிருக்கிறோம்? என்ற சிந்தனையில் 'இங்கே வாழ்பவர்களெல்லாம் எங்கள் மூதாதையர்களின் நிலத்துக்குத் திரும்பிப் போக வேண்டும் என்று ஒரு அமைதியான போராட்டம் நடாத்தலாமா?' என்று பேஸ்புக் பதிவு ஒன்றில் கேட்டு எழுதினேன், அதற்காகப் பெரும் ஆதரவு கிடைத்தது. அதுதான் நடந்து கொண்டிருக்கும் இந்தப் போராட்டம்," என்கிறார் அஹ்மத் அபு அர்தேமா.

அவரது திட்டப்படி காஸா இஸ்ராயேல் எல்லையில் ஆறு முதல் எட்டு பெருங்கூடாரங்கள் அமைத்து அவைகள் ஒவ்வொன்றிலும் பல்லாயிரக் கணக்கான பாலஸ்தீனர்களை, முக்கியமாகப் பெண்களையும், பிள்ளைகளையும் குவித்து "எங்களை எங்கள் மூதாதையரின் நிலத்துக்குப் போகவிடு!" என்று கோஷமிட்டு அமைதியாகப் போராட்டம் நடாத்துவது முடிவு செய்யப்பட்டது.

1998 இல் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் அன்றைய தலைவரான யாசீர் அரபாத்தால் ஆரம்பிக்கப்பட்டு வைக்கப்பட்டது நக்பா ஞாபகார்த்த போராட்டம். 15.05 அன்று இஸ்ராயேலின் தேசிய தினத்தின் அடுத்த நாளான இந்தநாள் 1948 இல் பாலஸ்தீனர்கள் தங்கள் நிலத்தை இழந்த தினத்தை ஞாபகப்படுத்துகிறது. நக்பா என்பதைத் தமிழில் பேரழிவு தினம் எனலாம்.

வெள்ளியன்று [30.03] காஸா இஸ்ராயேல் எல்லைகளில் நடாத்தப்பட்ட எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்ட பலஸ்தீனர்கள் 14 பேர்கள் கொல்லப்பட்டு 700க்கும் மேலானவர்கள் காயமடைந்தார்கள் என்பதும் மேலும் ஐந்து பேராவது காஸாவின் மற்றைய பகுதிகளில் கொல்லப்பட்ட்டார்கள். "அவமானத்தைவிடச் செத்து அழிவதே மேல்" என்ற கூக்குரலுடன் தொடர்ந்தும் பாலஸ்தீனர்கள் காஸாவில் நடத்தி வரும் கண்டனப் பேரணிகள் 06.04 வெள்ளியன்று மீண்டும் காத்திரமாகி மேலும் அதிக உயிர்களைப் பலியெடுத்தது. தொடர்ந்து கொண்டிருக்கும் எல்லைப் போராட்டம் முஸ்லீம்களின் முக்கிய நாளான வெள்ளிக்கிழமைகளில் உக்கிரமாகும் என்று கருதப்படுகிறது.

அஹ்மத் அபு அர்தேமாவால் அறிவிக்கப்பட்ட அமைதி போராட்டத்திற்கு ஏற்பட்ட ஆதரவைக் கவனித்ததும் காஸாவில் ஒவ்வொரு நகர்வையும் கண்காணித்து இயக்கி வரும் ஹமாஸ் இயக்கத்தினர் அதில் தமது இயக்கமும் இருக்க வேண்டும் என்று எதிர்பார்த்ததில் வியப்பில்லை. தங்களிடமிருக்கும் இளவயதினரை ஹமாஸ் முடுக்கிவிட்டார்கள். விளைவாக அமைதியாக நடக்க வேண்டும் என்று திட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட பேரணி எல்லையில் இருக்கும் இஸ்ராயேலிய இராணுவத்தை கோபங்கொள்ள வைத்துப் "பாதுகாப்புக்காக" அவர்களைத் துப்பாக்கிகளைப் பாவிக்க வைத்தது.

"திரும்பிப் போவதற்கான பேரணி" முழுக்க முழுக்க அமைதியானதாக இருக்க வேண்டும். அதன் ஒரேஒரு கோட்பாடு ஒரு வாரமோ, பத்து வருடங்களோ '1948 இல் அவர்கள் வாழ்ந்த நிலத்துக்கு திரும்பிப்போகும் உரிமைக்காக குரலெழுப்புவது மட்டுமாக இருக்க வேண்டும். எதிர்த்தரப்பை தூண்டி இரத்தம் சிந்துவதை எக்காரணம் கொண்டும் அனுமதிக்கலாகாது," என்று அஹ்மத்

தொடர்ச்சி 25-ம் பக்கம்...




# வெடித்திருக்கும் ஆபிரிக்காவின் பிரச்சினையயான கொம்பு

**உலக யன்னல்**

"ஆபிரிக்காவின் பிரச்சினையான கொம்பு" என்று குறிப்பிடப்படும் நாடுகளில் ஒன்று எத்தியோப்பியா உலகின் மிகப் புராதனமான நாடுகளில் ஒன்றாகும். ஆபிரிக்காவில் நிலப்பகுதியால் 10 வது பெரிய நாடாக இருக்கும் எத்தியோப்பியா மக்கள் தொகையை வைத்துப் பார்த்தால் ஆபிரிக்காவின் இரண்டாவது பெரிய நாடாக இருக்கிறது.

சமீபகாலமாக எத்தியோப்பியா உலகின் செய்திகளில் மீண்டும் இடம்பெற ஆரம்பித்திருக்கிறது. 2017 இன் கடைசிப் பகுதியில் எத்தியோப்பியாவில் பல மாதங்களாக இருந்த அவசரகாலச் சட்டங்கள் நீக்கப்பட்டன. அதையடுத்து நாட்டின் பெரும்பான்மை இனத்தினரால் மனித அடிப்படை உரிமைகளுக்கான போராட்டங்கள் பல பாகங்களிலும் நடாத்தப்பட்டன.

போராட்டங்கள் நடக்க ஆரம்பித்த காலகட்டத்திலிருந்து நாட்டின் ஆட்சியிலிருந்த EPRDF கட்சியின் தலைமை தனது ஆட்சியில் மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டிய கால கட்டம் வந்துவிட்டதை புரிந்து கொண்டு மெதுவாக சிறுசிறு மாற்றங்களை அறிவிக்க ஆரம்பித்தது. ஒரு கட்டத்தில் நாட்டின் சிறையில் வைக்கப்பட்டிருந்த அரசியல் கைதிகள் அனைவரையுமே விடுதலையும் செய்தது. ஆனால், போராட்டத்தில் இறங்கியவர்களோ "அதெல்லாம் போதாது, மாற்றம் முழுவதுமாக வேண்டும்," என்று குரலெழுப்பினார்கள்.

கடைசியில் நாட்டின் பிரதமராக 2012 ம் ஆண்டு முதல் பதவியிலிருந்த ஹைலெமரியம் டெஸலென் "நாட்டின் நன்மைக்காக நான் விலகுகிறேன்," என்று அறிவித்தார். தென்னாபிரிக்காவில் விடாப்பிடியாக ஜனாதிபதியாக இருந்த ஜேக்கப் ஸூமாவை அவரது கட்சி அரசுக் கட்டிலில் இருந்து இறக்கிய நாளுக்கு அடுத்த நாள் எத்தியோப்பியாவின் பிரதமர் பதவியிலிருந்து விலகினார்.

எத்தியோப்பியாவின் அரசியல் பிரச்சினையைப் புரிந்துகொள்ள நாம் சரித்திரத்தை பின்னோக்கிப் பார்ப்பதுடன் அந்த நாட்டில் வாழும் மக்களின் பின்னணிகளையும், அவர்களின் வாழ்க்கை முறைகளையும் கவனிக்க வேண்டும்.

எத்தியோப்பியாவில் ஒறோமோ [35.3%], அம்ஹாறா [26.2%], சோமாலி [6%], திகிறாய் [5.9%], சிடாமோ, குராக், வலைத்தா ஆகிய இனங்களைச் சேர்ந்தவர்கள் வாழ்கிறார்கள். அவர்களைத் தவிர வேறு சிறுபான்மையினரும் [17.3%] உண்டு. இவர்களில் 60 விகிதத்துக்கு அதிகமானவர்களான இனமக்களான ஒறோமோ, அம்ஹாறா ஆகியவர்கள்தான் அரசாங்கத்துக்கு எதிரான கிளர்ச்சிகளை ஓரிரு வருடங்களாக ஆரம்பித்து பிரதமரின் பதவி விலகலுக்கு காரணமானவர்கள்.


விவசாய நாடான எத்தியோப்பியாவில் பெரும்பான்மையான விவசாயிகள் சிறுசிறு நிலத்துண்டுகளை நம்பி வாழ்பவர்கள். சொந்தநிலம் அவர்களின் அடையாளம் எனலாம். நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக அந்த நாட்டை ஆண்டவர்கள் தங்களுக்கு ஆதரவு கொடுப்பவர்களுக்கு நிலங்களைக் கொடுத்து அதன் மூலம் ஆட்சியில் இருந்து வந்தார்கள்.

ஆபிரிக்க நாடுகளிடையே பெருமதிப்பு பெற்றவரும் எத்தியோப்பியாவின் சர்க்கரவர்த்தியாக சுமார் 44 ஆண்டுகளாக இருந்தவருமான ஹைலெசெலாஸியின் அரசு 1974 இல் கம்யூனிஸ்டுகளால் கவிழ்க்கப்பட்டது. அம்ஹாறா இனத்தினரை பெரும்பான்மையாகக் கொண்ட அமைச்சர்களுடன் மென்கிஷ்டு ஹைலெமரியம் நாட்டின் தலைவரானார். அவர்களது ஆட்சியில் நிலங்களெல்லாம் அரசுடைமையாக்கப்பட்டன. விவசாய நிலங்கள் பாவனைக்காக மட்டுமே விடப்பட்டன.


அந்த அரசை எதிர்த்து 1975 இலிருந்தே கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தார்கள் திகிறாய் விடுதலை இயக்கத்தினர். அக் கிளர்ச்சியின் விளைவாக 1991 இல் நாட்டின் கம்யூனிச ஆட்சி கவிழ்க்கப்பட்டது. அதைத் தொடர்ந்து நாட்டின் 6 விகிதத்துக்கும் குறைவானவர்களான திகிறாய் இனத்தினரைப் பெரும்பான்மையாகக் கொண்ட அரசு பதவியேற்றது. நாட்டின் அரசியலமைப்பு மாற்றியமைக்கப்பட்டு மீண்டும் நிலத்தை மக்கள் சொந்தமாக்கலாம் என்ற உரிமை கொடுக்கப்பட்டது. மீண்டும் நாட்டில் சிறு விவசாயிகள் உண்டாகினார்கள்.

அதற்கடுத்ததாக 2015 இல் அரசு புதிய சட்டத்தின் மூலம் தன் கையிலிருந்த செழிப்பான நிலங்கள் பலவற்றை வெளிநாட்டுப் பெரும் விவசாய நிறுவனங்களுக்கு விற்க ஆரம்பித்தது. அதன்மூலம் அரசுக்கு நிறைய வருமானம் உண்டாகியது, பொருளாதாரம் வளர்ந்தது. அதையடுத்து நாட்டின் மாநிலங்களின் புவியியல் அமைப்பும் மாற்றப்படும் திட்டங்கள் கொண்டு வரப்பட்டன.

புவியியல் அமைப்பு, அதாவது




தொடர்ச்சி அடுத்தபக்கம்...




# கானாவில்அமெரிக்கா என்ன திட்டமிடுகிறது?

அல்கைதா, ஐ.எஸ் ஆகிய மிலேச்ச இயக்கங்கள் நேரடியாகவும் ஆபிரிக்க பிராந்திய தீவிரவாதிகளுக்கு பக்கபலமாகவும் புர்க்கினோபாஸோ, மாலி, மொரிதானியா, நைகர், சாட், கமரூன், ஆகிய நாடுகளில் மையங்களை வைத்துக்கொண்டு அல்ஜீரியா, நைஜீரியா, லிபியா, கமரூன் போன்ற நாடுகளில் தமது சாம்ராஜ்யத்தை விஸ்தரிக்க முயன்று, ஓரளவு வெற்றிகண்டு வருகிறார்கள் அந்த தீவிரவாதிகள்.

அவர்களை நேரிட ஆபிரிக்காவின் சஹெல் பிராந்தியத்தில் அமெரிக்கா, பிரான்ஸ் ஆகிய நாடுகள் தங்கள் இராணுவத்தளங்களை நிறுவ ஆபிரிக்காவில் இடம்தேடிக் கொண்டிருக்கிறார்கள். தனது காலனியக் காலத்தொடர்புகளை பாவித்து பிரான்ஸ்பல ஆபிரிக்கநாடுகளில்தனது இராணுவத்தளங்களை நிறுவி வருகிறது. [படத்தில் சிகப்புப் புள்ளிகளால் அவை குறிக்கப்பட்டிருக்கின்றன.] அந்தந்த சந்தர்ப்பங்களில் தான் நடாத்தும் இராணுவ நடவடிக்கைகளுக்கு ஏற்றபடி குறிப்பிட்ட தளங்களின் தேவைப்படும் இலக்கங்களை [சுமார் 2000 4000 வ்வரை] மாற்றிக்கொள்கிறது பிரான்ஸ்.

2007 இல் AFRICOM என்ற பெயரில் ஆபிரிக்க நாடுகளுக்கு “உதவிகள்” செய்வதற்காகவும் பிரான்ஸ் இராணுவத்துடன் சேர்ந்து தீவிரவாத இயக்கங்களுக்கெதிராகப் போரிடவும் என்று அமெரிக்கா சுமார் 6000 இராணுவத்தினரை ஆபிரிக்காவின் வெவ்வேறு நாடுகளில் வைத்திருக்கிறது. அத்துடன் அத்தொகையை உயர்த்தி மேலும் சில இராணுவத்தளங்களை நிறுவவும் அமெரிக்கா இடங்களைத் தேடிக்கொண்டிருக்கிறது.

ஆனால் பிரான்ஸ் போன்றல்லாது அமெரிக்காவின் இராணுவத்தளங்கள் பெரும்பாலும் அதன் தளங்கள் உள்ள நாடுகளிலும் அமெரிக்காவிலும் சர்ச்சைகளை ஏற்படுத்துகின்றன என்றால் மிகையாகாது. சமீபத்தில் ஆபிரிக்கநாடுகளை டிரம்ப் கேவலமான வார்த்தைகளால் ["shithole countries"] குறிப்பிட்டதால் அந்த நிலைமை மேலும் மோசமடைந்திருக்கிறது.

கானாவின் இராணுவத்தினருக்காக அமெரிக்கா 20 மில்லியன் டொலர்கள் செலவில் தளபாடங்கள், பயிற்சிகள் மற்றும் உதவிகள் செய்வது சமீபத்தில் கானா பாராளுமன்றத்தில் உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப் பட்டது. அதற்கு மாற்றாக கானாவின் விமான நிலையமொன்றின் பகுதியை அமெரிக்காவின் இராணுவப் பாவிப் புக்கு ஏற்றபடி மாற்றியமைக்கவும், கானாவினுள் அமெரிக்க போர்த்தள பாடங்களை வரிகளின்றி இறக்குமதி செய்யவும், கானாவின் வானொலி அலைகளை எவ்வித எல்லையுமின்றிப் பாவிக்கவும் கானா அரசு அமெரிக் காவுக்கு அனுமதி வழங்கியிருக்கிறது. ஆனால்,இதுவரை கானாவில் அமெரிக் காவின் இராணுவத்தளம் அமைக்கப்படவில்லை.

சுமார் இருபது வருடங்களுக்கு அதிகமாக கானாவும் அமெரிக்காவும் இராணுவத்தொடர்புகளைக்கொண்டி ருப்பினும் கடந்த வாரத்தில் அறிவிக்கப் பட்ட ஒப்பந்தங்கள் கானாவின் மக்களிடையே பெரும் எதிர்ப்பை பெற்றிருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது. கானாவின் இறையாண்மை இந்த ஒப்பங்களால் மீறப்படுகிறதென்று எதிர்ப்பாளர்கள் கருதுகிறார்கள்.

# நெருக்கடிகால ஐரோப்பிய இராணுவப்படை.

ஐக்கிய அமெரிக்காவுக்கு ஈடாக ஐரோப்பிய ஒன்றியம்,அமெரிக்க டொலர்களுக்கு எதிராக எவ்ரோ என்ற நாணயம் போன்றவைகளை உருவாக்கிய ஐரோப்பிய நாடுகள் அமெரிக்காவின் நாட்டோ அமைப் புக்கு ஈடாக ஒரு ஐரோப்பிய ஒன்றிய இராணுவ அமைப்பை உண்டாக்கு வதற்கும் நீண்டகாலமாகத் திட்ட மிட்டுக் கொண்டிருந்தன.

சர்வதேச அரசியல்,பொருளாதார விடயங்களில் நீண்ட காலமாக ஐரோப்பாவும், அமெரிக்காவும் ஒன்றிணைந்து செயற்பட்டாலும் இரண்டாம் உலகப்போரில் அடிபட்டு வீழ்ந்த ஐரோப்பாவை மீண்டும் உயிர்ப்பிப்பதில் உதவிய அமெரிக்காவின் “மூத்தண்ணன்” மனப்பான்மை மீது ஐரோப்பிய நாடுகளுக்கு எப்போதுமே ஒரு வெறுப்பு உண்டு.

அத்துடன் பொருளாதார ரீதியில் ஐரோப்பிய நாடுகள் காலனிய ஆதிக்கத்தால் பெற்றிருந் தசாதகமான நிலைமையை பிற்காலத்தில் அமெரிக்கா தனது டொலரின் ஆதிக்கத்தால் பறித்தெடுத்து அதன் மூலம் உலகப் பொலீசாகவும் நடந்து கொள்வதையிட்டும் ஐரோப்பிய நாடுகளுக்கு மனக்கசப்பு உண்டு.

ஆனாலும் ஒபாமாவின் காலம் வரை ஓரளவு நட்பாக ஐரோப்பா வுடன் நடந்து கொண்ட அமெரிக்கா டிரம்பின் ஆட்சிக் காலத்தில் “உங்களுக்காக நாங்கள் உதவுவதற் கான விலையை நீங்கள் செலுத்த வேண்டும்,” என்று நாட்டோ அமைப் பிற்காக ஐரோப்பா மேலும் அதிக அங்கத்துவத் தொகை செலுத்த வேண்டும் என்று கட்டுப்பாடு போடுகிறது. அத்துடன் 2015 ம் ஆண்டு பகுதியில் ஐரோப்பாவுக்குள் நுழைந்த அகதிகளின் எண்ணிக்கையும் ஐரோப் பிய நாடுகள் சொந்த இராணுவ அமைப்பு ஒன்றை உண்டாக்குவதில் விரைவாக ஈடுபட வைத்தன.

ஆபிரிக்கா, மத்திய கிழக்கு போன்ற நாடுகள் ஐரோப்பிய நாடுகளின் எல்லைகளை அடுத்திருப்பதால் அப்பிராந்தியங்களில் ஏற்பட்டுவரும் அரசியல் குழப்பங்கள் ஐரோப்பா என்ற கோட்டைக்குள் அந்தநாட்ட வர்கள் அகதிகளாக நுழைந்து, சமூக அமைப்பு, பாதுகாப்பு நிலைமை போன்றவற்றில் எதிர்பாராத பிரச் சினைகளை உண்டாக்குவதையும் தடுக்க ஐரோப்பிய இராணுவ அமைப்பு ஒன்று உதவும் என்றும் முக்கிய ஐரோப்பிய நாடுகள் கணிக்கின்றன.

இவைகளில் இவ்விடயத்தில் முன்னிற்கும் நாடாக இருப்பது பிரான்ஸ்.இரண்டாம் உலகப்போரின் பின்பு சொந்த இராணுவத்தை வெளிநாடுகளுக்கு அனுப்புவதில் விருப்பமில்லாமல் இருந்த ஜேர்மனி சமீபகாலங்களில் தன் கருத்தை மாற்றிக்கொண்டிருக்கிறது.பிரிட்டன் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகிக் கொண்டாலும்கூட ஒரு ஐரோப்பிய இராணுவ அமைப்பில் இருப்பதில் ஆர்வமாக இருக்கிறது. இவர்களைத் தவிர நெதர்லாந்து, டென்மார்க் ஆகிய நாடுகளும் இம் முயற்சியில் ஒரு திட்டத்தை உண்டாக்குவதில் ஈடுபட்டுவருவதாக பிரெஞ்சு ஜனாதிபதி மக்ரோன் அறிவித்திருக்கிறார்.

2020 ம் ஆண்டளவில் தயாராக இருக்கும் இந்த இராணுவ அமைப்பை நெருக்கடிகால ஐரோப்பிய இராணுவம் என்ற பெயரில் தேவையான சமயங் களில் பாவிப்பதற்குத் தயாராக இருக்கக்கூடியதாக உண்டாக்க வேண்டும் என்பதே இந்த நாடுகளின் விருப்பம். தற்போதைய நிலைமையில் சுமார் 12 நாடுகள் இவ்விடயத்தில் ஆர்வம் தெரிவிப்பதாகக் குறிப்பிடப் படுகிறது. ஆரம்ப காலத்தில் இல்லா விடினும் எதிர்காலத்தில் மற்றைய ஐரோப்பிய நாடுகளும் அவ்வ மைப்பில் இணைந்து கொள்ளாம் என்று தெரிவிக்கப்படுகிறது.



மாநிலங்களின் எல்லைகள் மாற்றி யமைக்கப்பட்டால் அங்கு வாழும் குறிப்பிட்ட இன. மக்களின் குரலும் குறிப்பிட்ட மாநில அதிகாரத்தில் வித்தியாசமடையும் என்பதால் சந்தேகமடைந்த எத்தியோப்பியாவின் பெரும்பான்மை இனத்தினரான ஒறோமோக்கள் அரசுக்கு எதிராக குரலெழுப்ப ஆரம்பித்தனர். மாணவர்களின் புரட்சி ஆரம்பித்து சுமார் 140 பேர் கொல்லப்பட்டனர்.

ஒறோமோக்களிடையே எதிர்ப்பு உண்டாவதை தவிர்க்க அரசு தனது மாநில எல்லை விஸ்தரிப்புகளில் ஒரு பகுதியைக் கிடப்பில் போடுவ தாக அறிவித்தும் எதிர்ப்புக்கள் அடங்கவில்லை. மாறாக ஒறோமோ இனத்தினருடன் நாட்டின் இரண்டாவது பெரும்பான்மையின ரான அம்ஹாறா இனத்தினரும் சேர்ந்து கொண்டு சிறுபான்மை அரசான திகிறாய்களின் அரசுக்கு எதிராக குரலெழுப்ப ஆரம்பித்தனர். நாட்டில் நிலங்களை வாங்கியிருந்த வெளிநாட்டுப் பெரு விவசாயி நிறுவனங்களைத் தாக்கினர்.

நாட்டின் மற்றக் கட்சிகளை ஒடுக்கி, பாராளுமன்றத்தின் முழு இடங்களை யும் தமதாக்கி, மனித உரிமைகளை மறுத்து, அமைதியான போராட்டங் களை அடக்கியொடுக்கி, நூற்றுக் கணக்கானவர்களைக் கொன்று, இராணுவத்தில் பெரும்பாலானவர் களை திகிறாய் இனத்தவர்களாக்கி, சகல முயற்சிகளிலும் எத்தியோப்பி யாவின் ஆட்சியிலிருக்கும் EPRDF கட்சி தோற்றுப் போனது. அதன் கடைசிக் கட்டமாகத்தான் பிரதமரின் பதவியிறக்கம் கவனிக்கப்படுகிறது.

அடுத்த கட்டமாக EPRDF கட்சி அபிஅஹ்மத் என்பவரை புதிய பிரதமராக அறிவித்தது. அக் கட்சி அமைப்புக்குள் இருக்கும் ஒறோமோ மக்களின் பிரிவைச் சேர்ந்த அபிஅஹ்மத் கிறீஸ்தவ முஸ்லீம் கலப்புத் திருமணத்தில் பிறந்தவர். உப பிரதமராக இருந்தவர். 27 வருடங்களுக்கு பின்பு நாட்டின் பிரதமராக ஒரு ஒறோமோ இனத்தவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். பெரும்பான்மை இனத்தவராகவும், உயர்கல்வி கற்றவராகவும் இருக் கும் அபிஅஹ்மத் நாட்டின் அரசிய லமைப்பில் மாற்றங்களைக் கொண்டு வருவதாக உறுதி கூறியிருக்கிறார் என்பதாலும் சர்வதேச அளவில் அவருக்கு ஆதரவு கிடைத்திருக் கிறது.

திங்களன்று 02–04 பதவியேற்ற புதிய பிரதமருக்கு ஆதரவாக அவரது கட்சிப் பிரதிநிதிகள் 100 விகிதம் ஆதரவு கொடுத்திருந்தாலும் இனக்குழுக்களால் ஆக்கப்பட்ட அக் கட்சி பிளவுபடும் நிலையில் இருக்கிறது. அரை நூற்றாண்டுக்கும் அதிகமாகதிட்டமிட்டுப்பிளக்கப்பட்டு வளர்க்கப்பட்ட இன வெறுப்புக் கொஞ்சமும் குறையவில்லை. திகிறாய் இனத்தவர்களிடையே அபி அஹ்மத் முழுவதுமாகப் புறக்கணிக்கப் படுகிறார்.பொருளாதார ரீதியில்வளர்ந் தாலும் அவ் வளர்ச்சி எத்தியோப் பியர்களிடையே பிரித்து சமூக வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்பட வில்லை. வெளிநாட்டு நிறுவனங் களிடம் ஒப்பந்தங்களால் கொடுக்கப் பட்ட நிலப் பிராந்தியங்களில் தமது சிறு விவசாய நிலங்களை பறிகொடுத்து புலம்பெயர்ந்த லட்சக் கணக்கானோருக்கான தீர்வுகள் எதுவும் முன்வைக்கப்படவில்லை.

இக்கட்டான இச்சமயத்தில் பதவியேற்கவிருக்கும் அபிஅஹ்மத் ஆபிரிக்காவின் முக்கிய நாடுகளில் ஒன்றான எத்தியோப்பியாவின் மக்களிடையே ஒற்றுமைப் பாலத்தைக் கட்டுவாரா என்பதற்கான பதிலைக் காலம்தான் சொல்ல வேண்டும்.



தன் முதல் சண்டையிலேயே ஒருவன் ஐந்து பேரை அல்லையில் மிதித்து அரங்கத்தையே அதிர வைக்க முடியுமா? அடுத்த மூன்றே மாதத்தில் . சம்பியன் பெல்ட்டை தன் தோளில் தாங்கி ராஜநடை போட முடியுமா? அப்பாவியாக இருந்தே மக்களின் வெறுப்பை சம்பாதிக்கமுடியுமா... இல்லை, வில்லனாக இருந்துமே காதை கிழிக்கும் விசில்களை வாங்க முடியுமா? மூன்று தலைமுறையின் தலைவர்களையும் எதிர்த்து நின்று, வென்று 'நான்தான், நான் மட்டும் தான்' என்று மார்தட்டி மிரள வைக்கமுடியுமா? முடியும். அவன் டுவைன் 'தரொக்' ஜோன்சனாக இருந்தால் முடியும்.

**ரத்தம், வியர்வை மற்றும் மரியாதை. முதல்** முடியாது. அவர் உடம்பில் ஓடிய ரத்தம் அப்படி. டுவைனின் பெற்றோர்களும் மல்யுத்த வீரர்கள்தான். அப்பா ரொக்கி ஜோன்சன் WWEல் மல்லுக்கட்டியவர், அம்மா வழி தாத்தா பீட்டர் மைவியாவும் புஜபலபராக்கிரமசாலி. இதனால், சிறுவயதிலேயே மூணு வேளை உணவாக வெறும் பீமபுஷ்டி அல்வாவை சாப்பிட்டதைப் போல நல்ல புஷ்டியாக இருப்பார் த ரொக். பின்னர், எந்த பயபுள்ளையோ த்ரிஷ்டி வைத்துவிட, காயம் ஏற்பட்டு க்ரிட் அயர்ன் போட்டிகளில் அவரால் விளையாடமுடியாமல் போய்விட்டது.

**வாய்ப்பை தேடிப்போகும்போது**
**அதன் கதவை தட்டாதீங்க, எட்டி**
**உதைச்சு திறந்து,**
**அதனிடம் சிரிச்சுகிட்டே**
**உங்களை அறிமுகம்**
**பண்ணிக்கோங்க**
**- த ரொக்**

டுவனைப் பிடிக்கவில்லை, ரொக்கி மைவியாவாக பிடிக்கவில்லை. ஒரு கட்டத்தில் 'இவன் ஓவர் நல்லவனா இருக்கானேடா' என காண்டாகி, சண்டையின்போது 'டை, ரொக்கி டை' (செத்துரு, ரொக்கி செத்துரு) என கோஷமிட்டார்கள் ரசிகர்கள்... பாவத்த... அடுத்த வாரமே, காலில் அடிப்பட்டு ஐந்து மாதம் ரெஸ்ட்டுக்கு சென்றுவிட்டார்.

ஐந்து மாத ரெஸ்ட்டுக்குபின், சாது ரொக்கி வில்லன் ரொக்கியாக உருமாறியிருந்தார். தன்னை வெறுத்த மக்களை, பதிலுக்கு வெறுத்தார். பச்சை வண்ண வார்த்தைகளால் வசைபாடினார். ஃபரூக்கின் 'தி நேஷன் ஒஃப் டாமினேஷன்' அணியில் தன்னை இணைத்துக் கொண்டார். பின்னர், அணியில் இருந்த ஒவ்வொருவராய் பிடித்து, அடித்து, துவைத்து 'தி நேஷன் ஒஃப் டாமினேஷனை' டெமாலிஷன் செய்தார். WWEன்

# WWE

## கிங்ஸ் ஆஃப் தி ரிங்ஸ்

### அதிரடி அடிதடி-4



# த ரொக் அடிச்சா அடி விழாது, இடி விழும்

**இரண்டையும் நீங்க கொடுங்க.**
**கடைசியில் உள்ளதை தானா**
**சம்பாதிச்சுடுவீங்க.**
**- தி ரொக்**

த ரொக், பெரும்பாலான இலங்கை ரசிகர்களின் மோஸ்ட் ஃபேவரைட் வீரர். அவரின் மாநிற உடலும் பிரம்மா காளை டாட்டூவும் இன்னும் கொஞ்சம் ரசிகர்களுக்கு அவரை நெருமாக்கியது. பேனாவாலும் மருதாணியாலும் அந்தக் காளையின் உருவத்தை வலது கையில் வரைந்துப் பார்க்காத ரெஸ்ட்லிங் ரசிகர்கள் கிடையாது.

அம்மாக்கள் தலைக்கு மாட்டும் கருப்பு நிற ஃபாண்டை தன்கைகளில் மாட்டிக்கொண்டு, தலையணைக்கு 'பீப்பிள்ஸ் எல்போ' போட்டவர்கள் தான் எத்தனைபேர். ரிங்கிற்குள் வீரர்கள் மைக்கைத் தூக்கிக்கொண்டு வந்தாலே ரிமோட்டைத் தூக்கி சனலை மாற்றிவிடுபவர்கள், ரொக் பேசும்போது மட்டும் ரிமோட்டைத் தூக்கி வோல்யூம் ஏற்றுவார்கள். அடித்து சிதறவிடுவதாக இருந்தாலும் சரி, கலாய்த்து கதறவிடுவதாக இருந்தாலும் சரி, ஆல் ஏரியாவிலும் சொல்லியடிக்கும் கில்லி.

1972ஆம் ஆண்டு கலிஃபோர்னியாவில் மல்யுத்த வீரர் ரொக்கி ஜோன்சனுக்கும் அடா ஜோன்சனுக்கும் டுவைன் டக்ளஸ் ஜோன்சன் எனும் குழந்தை பிறந்தது. அந்த குழந்தையே த ரொக்தான். குட்டியாய் இருக்கும்போதே படு சுட்டி, படிப்பிலும் கெட்டி. விளையாடுவதிலும் அவ்வளவு ஆர்வம். க்ரிட் அயர்ன் விளையாடுகையில், டுவைனை யாரும் நெருங்கவே

இந்த நேரத்தில்தான் அவரது உறவினர்களும் மல்யுத்த வீரர்களுமான ரிக்கிஷி, ஒகேசுனா, ரோஸி, ஆஃபா ஆகியோரைப் பார்த்து மனதுக்குள் WWE ஆசையை சுள்ளிக் கொளுத்தி வளர்த்திருக்கிறார். தனது தந்தையிடம் சென்று 'அப்பா, நான் ரெஸ்ட்லர் ஆகப்போறேன்' என சொன்னதும், 'போங்கடா, போய் படிச்சு முன்னேறி புள்ளக்குட்டிகளை படிங்கவையிங்கடா' என கடுப்பாகிவிட்டார். அதன்பின், எப்படியோ ஒப்புக்கொண்டு டுவைனுக்கு டிரெய்னிங்கை ஆரம்பித்தார்.

அடுத்த் ஒரே வருடத்தில் டிரெய்னிங்கை முடித்துவிட்டு, ரொக்கி மைவியா என்ற பெயரில் WWEல் அறிமுகமானார். அப்பா ரொக்கி ஜோன்சன், தாத்தா பீட்டர் மைவியா... இரண்டும் சேர்ந்த கலவை ரொக்கி மைவியா. 1996 ஆம் ஆண்டு நடந்த 'சர்வைவர் சிரிஸ்' போட்டியில் அறிமுகமானவர், 44 எலிமினேஷன் சண்டையில் இரண்டு பேரை எலிமினேட் செய்து 'சோல் சர்வைவராக' வாகைசூடினார். அரங்கில் அமர்ந்திருந்த 20,000 பேரும் 'ரொக்கி... ரொக்கி...' என கோஷமிட்டார்கள். ரொக்கி மைவியாவாக வடைச்சட்டி ஹெயார்ஸ்டைலும் நீலக்கலர் ஜட்டியும் நீளமான நீலக்கலர் ரிப்பன்களை கழுத்தைச் சுற்றியும் தொங்க விட்டுக்கொண்டு என்ட்ரியாவார் டுவைன்.

ஆரம்பத்தில் அனைவரும் அதை ரசித்தாலும், நாட்கள் ஆக செம கடுப்பாகினர். அடுத்த மூன்று மாதத்தில் சம்பியன் ஆனார். ட்ரிபிள் ஹெச், ப்ரெட் ஹார்ட் போன்றோரையும் தோற்கடித்தார். ஆனாலும், மக்களுக்கு

அதிகார மையத்தின் அணியான 'தி கார்பரேஷனி'ல் இணைந்தார். இந்தக் காலக்கட்டத்தில்தான் தனது பெயரை 'த ரொக்' என மக்களிடையே நிறுவி நிலைப்பெறவும் செய்தார். ஒருமுறை WWEன் தலைவர் மெக்மேஹானின் பேச்சைக் கேட்டு ஸ்டோன் கோல்ட், மெக் ஃபோலி (மேன் கைண்ட்) யிடம் ஒரண்டை இழுத்து, சண்டை பிடித்தார். ஒருமுறை த ரொக்கிற்கும் மேன் கைண்டிற்குமிடையே 'ஐ குயிட்' மட்ச் நடைப்பெற்றது. அதாவது, சண்டையின்போது அடிதாங்கமுடியாமல் 'ஐ குயிட்' என்பவர்கள் தோற்றதாக அறிவிக்கப்படுவார்கள். அந்த மட்சில் ஏற்கனவே ஒருமுறை மேன் கைண்ட் சொல்லியிருந்த 'ஐ குயிட்'டை ரெக்கோர்ட் செய்து எடுத்துவந்து, அவர் சொன்னதைப்போல் மட்ச் நடந்துக்கொண்டிருக்கும்போதே அதை ஒலிக்கச் செய்து அழுகுனி ஆட்டமும் ஆடினார்.

**வெற்றியென்பது 'பெருமை'**
**பற்றியது இல்ல. அது சீரான**
**உழைப்பை பற்றியது.**
**சீரான கடின உழைப்பே**
**வெற்றியைப் பெற்றுத்தரும்.**
**பெருமையும் அது கூடவே வரும்**
**- த ரொக்.**

எதிரில் இருப்பவர்களை சகட்டு மேனிக்கு கலாய்ப்பதிலும் புதிது புதிதாய் பன்ச் லைன்கள் பிடிப்பதிலும் ஜித்து ஜில்லாடி. சந்தானம் லெவல். `It doesn't matter what you think', `If you smell what The Rock is cooking', `Bring it' என அடுக்கிக்கொண்டே போகலாம். ஒவ்வொன்றும் 'ஷட் அப் பண்ணுங்க', 'அமைதியோ அமைதியை'விட ஆயிரம் மடங்கு ரீச். மெர்சன்டைஸ்களிலும்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

21-ம் பக்க தொடர்ச்சி...

அபு அர்தேமா தனது பேரணித் திட்டத்தில் குறிப்பிட்டிருந்தார். ஆனால், பெரும்பாலானோரின் எதிர்பார்ப்பைப்போல ஹமாஸ் இயக்கத்தில் பேரணி இதுவரை 31 உயிர்களைக் குடித்து மேலும் சேதங்களை உருவாக்கப்போவது நடந்து விட்டது. ஹமாஸின் தளங்களை காஸாவுக்குள் விமானத்தின் மூலம் இஸ்ராயேல் தாக்கியும் இருக்கிறது.

30 000 பேர்களுக்கும் அதிகமானவர்களால் ஆன பேரணி இஸ்ராயேலிய எல்லைகளில் இராணுவத்தை தாக்கியதாலேயே தாங்கள் திருப்பித் தாக்கியதாகச் சொல்கிறார்கள் இஸ்ராயேலியர்கள். பாலஸ்தீனர்களோ தாம் அமைதியாகவே எதிர்ப்பை காட்டியதாக சொல்கிறார்கள்.


1967 இல் எகிப்தின் கையிலிருந்து "ஆறு நாட்கள் போரில்" இன்றைய இஸ்ராயேலால் கைப்பற்றப்பட்ட காஸா பிரதேசம் அதற்கு முன்பு ரோமர், மக்கடோனியர், பெர்சியர், இஸ்ராயேலர், பண்டைய எகிப்தியர் போன்ற பல ஆட்சியாளர்களின் கீழும் இருந்திருக்கிறது. பலஸ்தீனா பிரதேசத்தின் ஆளுமைப் பகுதிகளில் ஒன்றான காஸா ஒரு பக்கம் இஸ்ராயேலையும், இன்னொரு பக்கம் எகிப்தையும் நில எல்லையாகவும் கொண்டு கடல் எல்லையாக' மத்தியதரைக் கடலைக் கொண்டிருக்கிறது.

2005 வரை அப் பிராந்தியத்தை தனது கையில் வைத்திருந்த இஸ்ராயேல் அங்கிருந்து தனது இராணுவத்தை வெளியேறியது. அங்கே வாழ்ந்த யூதர்களின் குடியிருப்புக்களையும் அங்கிருந்து அகற்றியது. தற்போது சுமார் 3,500 கிறீஸ்தவர்களைத் தவிர பெரும்பாலும் அங்கே வாழ்பவர்கள் சுன்னி இஸ்லாம் மார்க்க முஸ்லீம்களே.

சுமார் 365 ச.கி மீற்றர்கள் கொண்ட காஸா பிராந்தியத்துக்குள் சுமார் 1.8 மில்லியன் மக்கள் வாழ்கிறார்கள். உலகிலேயே மக்கள் நெருக்கமாக வாழும் பிராந்தியங்களில் ஒன்றான காஸா உலகில் மிகவும் அதிகமாக குடிமக்களால் வளரும் பிராந்தியங்களில் ஒன்றுமாகும். சதுர கி.மீற்றர்களுக்கு சுமார் 42, 600 பேர் இங்கே வாழ்கிறார்கள். பிள்ளை பெற்றுக் கொள்ளும் வயதில் உள்ள ஒவ்வொரு பெண்ணும் சராசரியாக இங்கே 4.4 பிள்ளைகள் பெற்றுக்கொள்கிறார்கள்.

2006 இல் அப் பிராந்தியத்தில் நடந்த தேர்தலில் வெற்றிபெற்றார்கள் ஹமாஸ் என்ற தீவிரவாத இயக்கத்தினர். அவர்களது ஆட்சியும் அமைக்கப்பட்டது. இஸ்ராயேலை அழிப்பதை தங்கள் கோட்பாடுகளிலொன்றாக கொண்டிருக்கும் ஹமாஸ் இயக்கம் பெரும்பாலான பலஸ்தீன பிராந்தியங்களில் ஆட்சியமைத்த பத்தா இயக்கத்தினரிடமும் முரண்டு பிடித்துக் கொண்டிருந்தது.

ஹமாஸின் போக்கை தண்டிக்க இஸ்ராயேல் 2006 இலிருந்து காஸா பிராந்தியதுடன் எவ்வித பொருளாதாரத் தொடர்புகளையும் எவரும் வைத்துக்கொள்ள முடியாமல் துண்டித்து விட்டார்கள். அருகிலிருந்த எகிப்தும் அதையே செய்தது. கடல் எல்லையையும் இஸ்ராயேல் தன் கண்காணிப்பில் வைத்திருக்கிறது. அதே சமயம் பாலஸ்தீன அரசை தன் கைகளுக்குள் வைத்திருக்கும் அல்பத்தா அமைப்பும் ஹமாஸின் தீவிரவாத நடவடிக்கைகளை தண்டிப்பதற்காக அப்பிராந்தியத்துக்கு வேண்டிய எதையும் செய்யாமல் தவிர்த்தே வருகிறார்கள்.




ஹமாஸ் இயக்கத்தினர் நீண்டகாலமாக இஸ்ராயேலுடனான தங்கள் நீண்ட எல்லைக்குக் கீழாக சுரங்கங்களைத் தோண்டி அவைகள் மூலம் இஸ்ராயேல் பகுதிக்குள் சென்று யூதர்களை தாக்கி வருகிறார்கள். அதேபோன்று இரகசிய சுரங்கங்கள் மூலம் எகிப்தியப் பகுதிகளின் ஊடாகத் தேவைக்கான ஆயுதங்களையும், உணவுப் பண்டங்களையும் கடத்தி வருகிறார்கள். சில வருடங்களுக்கு முன்னர் எகிப்துடன் நெருங்கிய ஒப்பந்தங்கள் செய்து கொண்ட இஸ்ராயேல் அந்தச் சுரங்கங்களில் பலவற்றை தகர்த்து விட்டது.

இதன் விளைவாக காஸா ஒரு திறந்தவெளி சிறைச்சாலை போல மாறியிருக்கிறது. சுமார் 46 விகித மானவர்கள் வேலையற்றவர்களாக இருக்கும் இப்பிராந்தியத்தின் குடிநீர் தேவை பாலஸ்தீன அரசினால் 10 விகிதமே தீர்க்கப்படுகிறது. தினசரி நான்கு மணித்தியாலங்களே மின்சார வசதி கொடுக்கப்படுகிறது.

2007 முதல் பல தடவைகள் ஹமாஸ் காஸா பிராந்தியத்தில் மக்களை ஒன்றுதிரட்டி எல்லைகளில் இஸ்ராயேலை தாக்க, பதிலுக்கு இஸ்ராயேல் எங்கேயும் ஓடிஒளிந்து கொள்ள முடியாத காஸா மக்களை நிலப்பரப்பிலும், கடலிலிருந்து, வானத்திலிருந்தும் தாக்கிப் பதிலடி கொடுக்கிறார்கள். 2014 இல் ஒரு போராகவே அது உண்டாகி பலர் கொல்லப்பட்டு காஸாவின் பிரதான பகுதிகள் பல தரைமட்டமாக்கப்பட்டன.

ஐநாவும், ஐரோப்பிய ஒன்றியமும் பல தடவைகள் காஸாவின் நிலையை மாற்ற திட்டங்களில் ஈடுபட்டாலும் ஹமாஸ் இயக்கத்தினரின் நடவடிக்கைகளால் இஸ்ராயேலோ, அமெரிக்காவோ அவற்றுக்கு முட்டுக்கட்டை போடப்படுகின்றன. டிரம்ப் சமீபத்தில் பாலஸ்தீன அரசுக்கான அமெரிக்க உதவிகளை நிறுத்தி, ஹாமாஸுக்கான உதவிகளை கத்தாரை தண்டிப்பதன் மூலம் நிறுத்திய பின் காஸாவின் நிலைமை படுமோசமாகி விட்டதாகப் பல அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

ஹமாஸ் இயக்கத்தினரை பொறுத்த வரை அவர்களது வெளிநாட்டு ஆதரவுகள் பெரும்பாலும் வெட்டப்பட்டு விட்டன. பாலஸ்தீன அரசிடமிருந்தும் ஆதரவு பெற முடியாது. ஐரோப்பிய ஒன்றியமோ, அமெரிக்காவோ ஹமாஸ் ஆயுதப் போராட்டத்தை நிறுத்தும்வரை அவர்களது காஸா அரசாங்கத்துக்கு உதவப்போவதில்லை என்று கைவிட்டு விட்டார்கள்.

இந்த விரக்தியான நிலையால் உந்தப்பட்ட அவர்கள் அன்றாட உணவுக்கே வழியில்லாமல் இழக்க எதுவுமில்லாமல் இருக்கும் மக்கள் கூட்டத்தை ஒன்றுபடுத்தி எல்லைகளில் இஸ்ராயேலை தாக்குவதன் மூலம் இஸ்ராயேல் மீது சர்வதேசக் கண்டிப்பு உண்டாகும் என்று நம்புகிறார்கள். இஸ்ராயேல் திரும்பத் தாக்கி பாலஸ்தீனர்களைக் கொல்லும் போது அதைத் தங்கள் அரசியல் ஆதாயத்துக்காக பாவிக்க ஹமாஸ் இயக்கத்தினர் புதிய எல்லை தாக்குதல்களில் மக்களை இறக்கப் போகிறார்கள்.


இஸ்ராயேல் தனது எல்லைகளில் ஏற்படும் சலசலப்பை காட்டமாகவே எதிரிடும். பாலஸ்தீன அரசு தனது குரலை அதிகம் எழுப்ப முடியாத நிலையில் இருக்கிறது. ஐ.நாவின் பாதுகாப்புச்சபையில் இஸ்ராயேலுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்க முடியாமல் அமெரிக்கா தடுத்துவிடும். ஐரோப்பிய நாடுகளுக்கும் அமெரிக்காவுக்கும் சமீப காலத்தில் ஏற்பட்டிருக்கும் மனக்கசப்புக்களால் ஐரோப்பிய ஒன்றியமும் காஸா மக்களுக்காக நிஜத்தில் எதுவும் செய்ய முடியாது.

தொடர்ந்தும் எல்லா பக்கங்களில் சித்திரவதைக்கு உள்ளாகப் போவது காஸாவின் பாலஸ்தீனர்களே. ●

---

லாபம் அள்ளியது WWE. வில்லனாக இருந்தும் மக்களின் விருப்பத்திற்குரிய வீரனாகஇருந்ததரொக்கை,ஹீரோவாக மாற்றியது WWE. அவரும் 'ரொக்கை வில்லனாகத்தானே பார்த்திருப்ப, ஹீரோவா பார்த்ததில்லையே. இனி பார்ப்ப...' என களத்திலும் கிளப்பினார். ஸ்டோன் கோல்டுக்கும் த ரொக்கிற்கும் நடந்த ஒவ்வொரு சண்டையும் செமத்தியாக இருக்கும். ஸ்டோன் கோல்டிடம் ஸ்டன்னரை வாங்கிக் கொண்டு ரொக் துள்ளுவதைப் பார்க்கவே ஜாலியாக இருக்கும். ஹிஹி...

பின்னர், தன்னுடைய பரம எதிரியான மெக் ஃபோலியுடன் இணைந்து டேக் டீம் சம்பியன்ஷிப் வென்றார் த ரொக்! 'த ரொக் - ஷாக் கனெக்ஷன்' என டீமுக்கு பெயரெல்லாம் வைத்தார்கள். WWE வரலாற்றின் சிறந்த டேக் டீம்களில் ஒன்றாக கருதப்பட்ட அது, மக்களின் பேராதரவைப் பெற்றது. 'மன்டேநைட் வோர்'களில் கீசிகீயை தோற்கடிக்க



இது பெரும் உதவி புரிந்தது. அதைத் தொடர்ந்து பிரபலமான 30 பேர் ரோயல் ரம்பிள் மட்சிலும் வெற்றியடைந்து, தனது செகண்டு இன்னிங்ஸை சீரும் சிறப்புமாக தொடர்ந்தார் த ரொக். ட்ரிபிள் ஹெச், கர்ட் ஆங்கிள், க்றிஸ் ஜெரிக்கோ என நன்றாகவே சென்றுக் கொண்டிருந்தது. ரொக் புகழின் உச்சியைத் தொட்டதும், சிவப்பு கம்பளம் போட்டு வரவேற்றது ஹாலிவுட். 'எங்கிருந்தாலும் வாழ்க..." என ரெஸ்ட்லிங் ரசிகர்களும் அவரை வழியனுப்பிவைத்தார்கள். ஹாலிவுட்டுக்குப் போனப் பிறகு, 'கொழும்பில் வேலைக் கிடைத்த வெளியூர் பையன், அவ்வப்போது தன் ஊர் பக்கம் எட்டிப்பார்ப்பதைப் போன்று' அவ்வப்போது WWE பக்கம் எட்டிபார்ப்பார் த ரொக். 32வது ரெஸ்ட்லிங் மேனியாவில் எரிக் ரோவனை ஆறே செகண்டில் தோற்கடித்து 'எனக்கு இன்னும் வயசாகல' என கண்ணடித்தார். ஹான்ன்... மூன்று தலைமுறையின் தலைவர்களை எதிர்த்து நின்று வென்ற மாவீரன்னு த ரொக்கை சொல்லியிருந்தோமேஞ் அது இதனால்தான். ஹல்க் ஹோகன், ஸ்டோன் கோல்ட், ஜோன் சௌனா மூவரையும் தோற்கடித்து, வலது புருவத்தை உயர்த்தி ஸ்டைல் காட்டியிருகிறது இந்த ஆறரை அடி மின்னல்.

த ரொக்கை பற்றிப் பார்த்தாச்சு, அப்படினா ஸ்டோன் கோல்டை பற்றிதானே அடுத்துப் பார்க்கணும். அடுத்த வாரம் பார்ப்போம்.

# 10 சென்றதும் வென்றதும்!

## செங் ஹே

சீனாவின் தலைநகரம் பெய்ஜிங்கில் 2008ம் ஆண்டு ஒலிம்பிக் நடைபெற்றது. அதன், தொடக்க விழாவில், ஒரு அணிவகுப்பு அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது. நீல ஆடை உடுத்திய மாலுமிகள், ஆளுக்கொரு துடுப்பை ஏந்தியபடி நடைபோட்டனர். அவர்களின் கையில் இருந்த துடுப்புகள் ஒன்றுசேர்ந்து, ஓர் அழகிய கப்பலாக மாறியது. 'செங் ஹே' என்ற தலைசிறந்த மாலுமியை நினைவுபடுத்துவதே அந்த அணிவகுப்பின் நோக்கம்.

சீனர்களே மறந்துபோன முக்கியமான மாலுமி, செங் ஹே. சீனாவின் தெற்குப் பகுதியில் உள்ள யுனான் என்னும் இடத்தில் 1371ல் பிறந்தவர். பிறக்கும்போது அவருக்கு வைக்கப்பட்ட பெயர், மா ஹே. அவர், ஹூய் என்னும் சீன முஸ்லிம் இனக் குழுவைச் சேர்ந்தவர். அதனால், முகமது நபியை நினைவுகூரும் வகையில், மா என்னும் முதல் பெயரை வைத்தார்கள். எனவே, அவரை இப்போதைக்கு மா ஹே என்றே அழைப்போம்.




• ஜெங் ஹோ, சான் போ போன்ற பெயர்களிலும் செங் ஹே அழைக்கப்பட்டார்.

• செங் ஹேவுக்கு ஒரு மூத்த சகோதரர், நான்கு சகோதரிகள் இருந்தனர். அவருடைய அப்பா, தாத்தா இருவரும் தங்களுடைய மத நம்பிக்கைகளைப் பின்பற்றி ஹஜ் பயணம் மேற்கொண்டார்கள். பல பகுதிகளுக்குச் சென்றிருந்தபோதும் செங் ஹே மட்டும் ஹஜ் செல்ல முடியவில்லை.

• உண்மையில் செங் ஹே ஒரு திருநங்கை. அதனால், அவரைப் படிக்க வைக்கக் கூடாது, நம்பக் கூடாது எனப் பலர் பிரசாரம் செய்தனர். மிங் இளவரசர் எதையும் காதில் போட்டுக்கொள்ளவில்லை.

• சீன வரலாற்றில் திருநங்கையாக இருந்து உயர் பதவி, அங்கீகாரம், மரியாதை பெற்றவர் செங் ஹே மட்டுமே.





மா ஹே பிறந்தபோது, யுனான் பகுதியை மங்கோலியர்களான யுவான் பரம்பரையினர் ஆண்டுவந்தனர். அப்போதெல்லாம் ஒருவர் பதவிக்கு வந்துவிட்டால், அவர் மகன், அவருடைய மகன் என வம்சமே பல நூறு ஆண்டுகள் ஆளும். பிறகு, அவர்களை வீழ்த்திவிட்டு, இன்னொருவர் ஆட்சிக்கு வருவார். மா ஹே தாத்தாவின் தாத்தா, மங்கோலிய அரசரிடம் பணியாற்றியவர். அவருடைய மூதாதையர்களில் சிலர், மங்கோலியர்களாக இருந்திருக்கலாம். எனவே, மா ஹே ஒரே சமயத்தில் மங்கோலியராகவும் சீனராகவும் இஸ்லாமியராகவும் இருந்தார்.

மா ஹேவுக்கு 10 வயது ஆனபோது, மிங் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் யுவான் பரம்பரையினர் மீது போர் தொடுத்தனர். அந்தப் போரில் மா ஹேவின் அப்பாவும் பங்கேற்று உயிரிழந்தார். யுவான் பரம்பரையும் தோற்று, மங்கோலியர்களின் ஆட்சி முடிவுக்கு வந்தது. நீண்ட இடைவெளிக்குப் பிறகு, சீனாவைச் சீனர்களே ஆளத் தொடங்கினார்கள். ஆம், மிங் என்பவர்கள் ஹன் சீனர்கள்.

10 வயது மா ஹேவுக்கு தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்றே புரியவில்லை. 'ஏன் திடீரென்று நம் நிலத்தில் யாரோ புகுந்துவிட்டார்கள்? அப்பா போரில் இறந்தது ஏன்? இனி எனக்கு என்னாகும்?' எனக் கலங்கியபோது, ஒரு மிங் ஜெனரல் நெருங்கி வந்தார். அவரைப் பார்த்ததும் மா ஹேவுக்கு உடல் முழுக்க அச்சம் பரவியது. அப்பாவைப் போல என்னையும் கொல்லத்தான் வருகிறாரோ என நினைத்து ஓடினார். அந்த ஜெனரலும் துரத்தி வர, மா ஹே சட்டென்று ஓர் ஆற்றில் குதித்துவிட்டார்.

ஜெனரலுடன் வந்திருந்த வீரர்களும் ஆற்றில் குதித்து அவனை மீட்டார்கள். அவர்கள் துரத்தி வந்தது, ஒரு மங்கோலியரின் இருப்பிடத்தைப் பற்றி விசாரிக்கவே. சரி வா, என மா ஹேவை அள்ளிப்போட்டுக்கொண்டு சென்றார்கள்.

ஆனால், ஒரு 10 வயது கைதியை என்ன செய்வதென்று தெரியவில்லை. 'இளவரசரிடம் அழைத்துச் செல்வோம், என்ன செய்வதென்று அவர் முடிவெடுக்கட்டும்' என நினைத்தார்கள்.

மா ஹேவை இழுத்துச் சென்று, சூ டி என்னும் மிங் இளவரசரிடம் சேர்த்தார்கள். அவருக்கும் குழப்பமாக இருந்தது. வயதில் பெரியவனாக இருந்தால், ஏதாவது வேலை செய்யவைக்கலாம். திருதிருவென்று விழித்தபடி நிற்கும் இந்தச் சிறுவனை என்ன செய்வது?

நாட்கள்செல்லச்செல்ல,மாஹேவின் நல்ல உள்ளம் இளவரசருக்கு மிகவும் பிடித்துப்போனது. மா ஹேவுடன் நட்பாகப் பழக ஆரம்பித்தார். இளவரசர் என்றாலும் ஒரு பெரிய பிரதேசம் அவர் கட்டுப்பாட்டில் இருந்தது. (பின்னாளில் அதுவே பெய்ஜிங் ஆனது.) அவருக்கு வயது 21. மாஹேதன்இனிமையான சுபாவத்தால் விரைவில் அரண்மனையில் நல்ல பெயர் வாங்கிவிட்டார். மிங் ஆட்சி பற்றிய பயமும் விலகிப்போனது. அப்பாவை இழந்தாலும் அன்பான மனிதரின் ஆதரவு கிடைத்தது.

ஒரு நாள் இளவரசர் மா ஹேவை அழைத்தார், "இங்கே பார் மா ஹே, நீ இப்படி சின்னச்சின்ன அரண்மனை வேலைகளையே செய்துகொண்டிருப்பது நல்லதல்ல. உன் திறமைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும். எனக்கு பணியாளர் தேவையில்லை.ஒருநல்ல ஆலோசகராக உன்னால் மாற முடியுமா?"

"ஓ... அதற்கென்ன" என ஒப்புக்கொண்டான் மா ஹே. ஓர் இளவரசருக்கு ஆலோசகராக இருக்க, கல்வி கற்க வேண்டும். போர்ப் பயிற்சி எடுக்க வேண்டும். அக்கம்பக்கம் உள்ள நாடுகளைப் பற்றி தெரிந்துகொள்ள வேண்டும். இதெல்லாம் முடிகிற காரியமா?

எல்லாப் பெரிய பயணங்களும் முதல் அடியில் இருந்தே தொடங்குகின்றன என்பது ஒரு சீனப் பழமொழி. மா ஹே துணிச்சலுடன் அனைத்துச் சவால்களையும் ஏற்றுக்கொண்டான். அதிக முனைப்பும் தீவிரமும் இருந்ததால், விரைவிலேயே மா ஹே மற்ற மாணவர்களிடம் இருந்து தனித்துத் தெரிய ஆரம்பித்தார். மா ஹே, வாலிபப் பருவம் எட்டினார்.

மா ஹேவின் திறமைகளை அங்கீகரித்து, அவரைப் பல வேலைகளில் நம்பிக்கையுடன் ஈடுபடுத்தினார் இளவரசர். இதைக் கண்டு அரண்மனையில் இருந்த மற்றவர்கள், இளவரசரிடம் மெள்ள முணுமுணுத்தார்கள்.

"மதிப்புக்குரிய இளவரசரே! எங்களைப் போல எவ்வளவோ திறமைசாலிகள் உங்களுக்கு உதவக் காத்திருக்கிறோம். போயும் போயும் ஒரு கைதியிடம் இவ்வளவு நம்பிக்கை வைக்கலாமா? மா ஹே என்னும் பெயரே விநோதமாக இருக்கிறது. அவன் நம்மைப் போல ஹன் வம்சத்தைச் சேர்ந்தவன் இல்லை. வேறு மதத்தைச் சேர்ந்தவன். பாதி மங்கோலியன். மங்கோலியர்கள் நம் எதிரிகள் என்பது உங்களுக்குத் தெரியாதா?" என்றார்கள்.

இளவரசர் உடனே முடிவெடுத்துவிட்டார். எல்லோருக்கும் முன்னால் மா ஹேவை வரவழைத்தார். "மா ஹே, உன் பெயரை இதோடு மறந்துவிடு. இனி, நீ 'செங் ஹே' என்று அழைக்கப்படுவாய். இனி செங் ஹேவை யாரும் அந்நியராகப் பார்க்க மாட்டார்கள்" என்றார்.

அரண்மனையில் இருப்பவர்களுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. காரணம், செங் என்பது இளவரசர் மிகவும் விரும்பி மதிக்கும் அவருடைய குதிரையின் பெயர். 'அப்படியானால், இந்த செங் ஹேவையும் இளவரசர் மதிக்கிறார், விரும்புகிறார் என்று பொருளா? ஐயையோ, நாமே வாயைவிட்டு இவனுக்கு இன்னும் பெரிய இடத்தைக் கொடுத்துவிட்டோமே. இந்த செங் ஹே என்னவெல்லாம் செய்யப்போகிறானோ' என நொந்துபோனார்கள்.

அவர்கள் பயந்ததைப் போலவே நடந்தது. செங் ஹேவும் இளவரசரும் சேர்ந்து, சீனாவின் எதிர்காலத்தையே மாற்றியமைக்கும்திட்டங்களை வகுக்க ஆரம்பித்தார்கள்.

*(பயணம் தொடரும்...)*









coustomer is king




இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்ரட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 15.04.2018 அன்று வெளியிடப்பட்டது.